# B. A. DEGREE EXAMINATION

888

**1954**

OFFICE OF THE REGISTRAR OF ...
JUN 952
MADRAS

## PART II — TAMIL

# SELECTIONS IN POETRY

DOCTRINA VIM PROMOVET INSITAM

Rs. 1—8—0.

N52

UNIVERSITY OF MADRAS

# B. A. Degree Examination

## 1954

### PART II—TAMIL

### SELECTIONS IN POETRY

Printed At
RATHNAM PRESS, MADRAS - I.
1952

O~,1x
N52

LIBRARY
MADRAS
112026

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சிறுபாணாற்றுப்படை ... ... | 1 |
| 2. | புறநானூறு ... ... | 10 |
| 3. | திருக்குறள் ... ... | 18 |
| 4. | சிலப்பதிகாரம் | |
| | நாடுகாண் காதை ... ... | 23 |
| | காடுகாண் காதை ... ... | 31 |
| 5. | சீவக சிந்தாமணி | |
| | கேமசரியா ரிலம்பகம் ... ... | 38 |
| 6. | பெரிய புராணம் | |
| | காரைக்காலம்மையார் புராணம் ... | 51 |
| 7. | கம்பராமாயணம் | |
| | யுத்தகாண்டம் மந்திரப்படலம் ... | 67 |
| 8. | காசிக்கலம்பகம் ... ... | 85 |
| | குறிப்புரை ... ... | 89 |

# I

# சிறுபாணாற்றுப்படை

### பாலைவழி

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்
அயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ,

### விறலியர் தோற்றம்

ஐதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி,
...........................................................
...........................................................
...........................................................
...........................................................
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்செறி நீர்தரு மெயிற்றி னெயிறெனக்

குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவர,

### இரவலன் இருந்த நிலைமை

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
மைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல!

### வஞ்சி

கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே; அதாஅன்று,

### மதுரை

நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்

தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரோடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னென்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே ; அதாஅன்று;

உறந்தை

நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
........................ வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமர் தும்பி காமரஞ் செப்பும்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னென்னார்
ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே ; அதாஅன்று,

கடைஎழு வள்ளல்கள்

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனும், சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்

பறம்பிற் கோமான் பாரியும், கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியும், நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும், மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை அதிகனும், கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும், நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும், எனவாங்(கு),

### நல்லியக்கோடன்

எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய வுரனுடை நோன்றாள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்

பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நாள்

### பாணர் வறுமை

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்(து)
இரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்

### பெற்றபரிசில்

தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரும்

### ஆற்றுப்படை

இவணயந் திருந்த விரும்பே ரொக்கல்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயின்,

### நெய்தல்வழி

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி

மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்,
ஓங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து
நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெருகுவிர்;

## கொல்லை வழி

பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப மூரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வேல் நுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்,
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொடு
ஆமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்;

## மருதத்தண் பணை

நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை

முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத் தோன்றும்
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கினவன் ஆமூர் எய்தின்,
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்;

## நகரம்

எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று; சிறிதுநணி யதுவே;
பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலவ னருங்கடை குறுகி,

## மன்னன் இயல்புகள்

செய்ந்நன்றி யறிதலும் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய னாதலும்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்

ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும்
அரியே ருண்க ணரிவைய ரேத்த
அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்

### யாழ்

பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்(து)
அமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானாது

### புகழ்ச்சியுரை

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை யெனவும்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவும்
நீசில மொழியா வளவை, மாசில்

### பரிசில்

காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து

விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோள்
...................... துளங்கியன் மகளிர்
அகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

# II

# புறநானூறு

## 1

**சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.**

**திணை - வாகை; துறை - அரசவாகை; மழபுலவஞ்சியுமாம்**

சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே;
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே;
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலமந்து
நெஞ்சுநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே.

## 2

**அவனை அவர் பாடியது.**

**திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.**

கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ
வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்

பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்
தொன்னிலக் கிழமை சுட்டி னன்மதி
வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே.

## 3

அவனை அவர் பாடியது.

திணை - வாகை ; துறை - அரசவாகை.

கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
வேரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை
பாடுநர் வஞ்சி பாடப் படையோர்
தாதெரு மறுகிற் பாசறை பொலியப்
புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்துஞ்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை
வல்லோன் றைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்பக்
காம விருவ ரல்லது யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் றிணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ட
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே.

## 4

குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியது.

திணை - வஞ்சி ; துறை - கொற்றவள்ளை.

காலனும் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே !
திசையிரு நான்கு முற்க முற்கவும்
பெருமரத், திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்
எயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவும்
களிறுமேல் கொள்ளவுங் காழக நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவி னரியன காணா நனவில்
செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி
மையல் கொண்ட வேமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்
கெவ்வம் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றாற் றானே காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே.

## 5

சோழன் நலங்கிள்ளி ஆவூர்முற்றியிருந்தகாலத்து அடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது.

திணை - வாகை ; துறை - அரசவாகை.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்

பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்
இன்னு தம்ம! ஈங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்!
அறவை யாயி னினதெனத் திறத்தல்;
மறவை யாயிற் போரொடு திறத்தல்;
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.

## 6

சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர் கிழார் பாடியது.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்;
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்;
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே; நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே:
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே;
இருவீர் வேற லியற்கையு மன்றே; அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.

## 7

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.

திணையும் - துறையும் அவை.

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்

தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர் ;
களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் ; மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர் ;
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

## 8

சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்த னென்னும் புலவனைக் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தா னென்று கொல்லப்புக்குழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.

திணையும் துறையும் அவை.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.

## 9

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியது.

திணை - பாடாண்டிணை ; துறை - பாணாற்றுப்படை.

தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண !
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை
இனிய காண்கிவட் டணிகெனக் கூறி

வினவ லானு முதுவா யிரவல !
தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்
அடுதீ யல்லது சுடுதீ யறியா
திருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பல் ஞாங்க ரூதுங்
கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழு மோதி யொண்ணுதல்
இன்னகை விறலியொடு மென்மெல வியலிச்
செல்வை யாயிற் செல்வை யாகுவை
விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பா டன்றவ னீகை
நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே.

## 10

### கோவூர் கிழார்

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண !
சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்
வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே;
வேந்துடன் றெறிந்த வேலே யென்னை
சார்ந்தா ரகல முளங்கழிந் தன்றே;
உளங்கழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிறல்
ஒச்சினன் றுரந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.

## 11

### சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது.

திணை - பாடாண்டிணை ; துறை - கடைநிலை.

கடற்படை யடற்கொண்டி
மண்டுற்ற மலிர்நோன்ருள்
தண்சோழ நாட்டுப் பொருநன்
அலங்குளை யணியிவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல் வேண்டேம்;
அவற்பாடு மவன்ருள் வாழியவென
நெய்குய்ய வூனவின்ற
பலசோற்ரு னின்சுவைய
நல்குரவின் பசித்துன்பினின்
முன்னுள் விட்ட மூதறி சிருஅரும்
யானும், ஏழ்மணியங் கேழணியுத்திக்
கட்கேள்வி கவை நாவின்
நிறனுற்ற வராஅப்போலும்
வறனொரீஇ வழங்குவாய்ப்ப
விடுமதி யத்தை கடுமான் ருேன்றல்!
நினதே, முந்நீ ருடுத்தவிவ் வியனுல கறிய
வெனதே, கிடைக்கா முன்ன தெண்கண் மாக்கிணை
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல்
எறிதொறு நுடங்கி யாங்குநின் பகைஞர்
கேட்டொறு நடுங்க வேத்துவென்
வென்ற தேர்பிறர் வேத்தவை யானே.

## 12

### சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியது.

திணை - பாடாண்டிணை ; துறை - வாழ்த்தியல்.

நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவும்
சூடு கிழித்து வாடூன் மிசையவும்

ஊன்கொண்ட வெண்மண்டை
ஆன்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோ னெந்தை யிசைதன தாக
வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர்ப் பூத்த தும்பின ;
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று ;
கடலே, காறந்த கலனெண் ணுவோர்
கானற் புன்னைச் சினைநிலைக் குந்து ;
கழியே, சிறுவெள் ளுப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கனன் னாட் டுமணொலிக்குந்து ;
அன்னநன் னாட்டுப் பொருநம் யாமே !
பொராஅப் பொருநரேம்
குணதிசை நின்று குடமுதற் செலினுங்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளியாம்
வேண்டிய துணர்ந்தோன் றாள்வா ழியவே !

# III

# திருக்குறள்

## 1 குடிசெயல்வகை.

1. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

2. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி.

3. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

4. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

5. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

6. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

10. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி.

## 2. உழவு

1. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனால்
உழந்து முழவே தலை.

2. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

5. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

7. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.

9. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

10. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்.

## 3. நல்குரவு

1. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது.

2. இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்.

3. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

4. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

5. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

6. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

7. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

9. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

10. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று.

## 4. இரவு

1. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று.

2. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின்.

3. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

4. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

5. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

6. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
எல்லா மொருங்கு கெடும்.

7. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளு ளுவப்ப துடைத்து.

8. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

9. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை.

10. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி,

## 5. இரவச்சம்

1. கரவா துவந்தியுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

2. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

3. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

4. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

5. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

6. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

7. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

8. இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
உள்ள தூஉ மின்றிக் கெடும்.

10. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

## 6. கயமை

1. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

2. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

3. தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

4. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

5. அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

6. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

9. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

10. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

# IV

# சிலப்பதிகாரம்

## புகார்க் காண்டம் (I)

### நாடுகாண் காதை

#### நகர்விட்டு நீங்குதல்.

வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப
ஏழகத் தகரு மெகினக் கவரியும்
தூமயி ரன்னமும் துணையெனத் திரியும்
தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்
நீணெடு வாயி னெடுங்கடை கழிந்தாங்
கணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து
பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
அணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும்
இந்திர விகார மேழுடன் போகிப்
புலவூண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇ
ஐவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வரூஉந் தகுதியுண் டாமென
உலக நோன்பிக ளொருங்குட னிட்ட
இலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலும்
உலக விடைகழி யொருங்குட னீங்கிக்

கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருத மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்
இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்தல் நணித்தென நக்கு,

### கவுந்தியடிகளைக் காணல்

தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த
காவுந்தி யையையைக் கண்டடி தொழலும்
உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
உடையீ ரென்னோ வுறுக ணாளிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
உரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்
பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ?
உரிய தன்றீங் கொழிகென வொழியீர்;
மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே னாகலின்
போதுவல் யானும் போதுமி னென்ற

காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
அடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனெனக்
கோவலன் காணுய் கொண்ட விந்நெறிக்
கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ ;

### தண்டலை வழியினியல்பு

வெயினிறம் பொறாஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசோர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்ரு மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டும் ;
முதிர்பூஞ் செம்மலி னொதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டும் ;
மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்கும் ;
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ !

### வயல் வழியின் இயல்பு.

வயலுழைப் படர்குவ மெனினே யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை ; ஆங்கண்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
கரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும் ;
குறுந ரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
அறியா தடியாங் கிடுதலுங் கூடும்
எறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்ரு
தூழடி யொதுக்கத் துறுநோய் காணின்

தாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணு ;
வயலுஞ் சோலையு மல்ல தியாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்லை ;
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்
தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுவையுங்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்.

### காவிரிநாட்டுவளம்.

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடும்
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃ றாரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கு மொலியே யல்லது
ஆம்பியும் கிழாரும் வீங்கிசை யேத்தமும்
ஓங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியுங் கனைகுர னாரையும்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோதையும்
உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாஅமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்
கருங்கை வினைஞருங் களமருங் கூடி

ஒருங்குநின் றார்க்கு மொலியே யன்றியும்
கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேறாடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோ ரேர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செய் நெல்லின் முகவைப் பாட்டுந்
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்
பேர்யாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளார்
உழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக முட்டின்
மறையோ ராக்கிய வாவுதி நறும்புகை
இறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகழொடும் பரந்து
மங்குல் வானத்து மலையிற் றோன்றும்
ஊரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்
பன்னாட் டங்கிச் சென்றா ளொருநாள்

## சாரணர் தோற்றம்

ஆற்றுவீ யரங்கத்து வீற்றுவீற் றாகிக்
குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூநா றொருசிறைப்

பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும்பெய ரைய ரொருங்குட னிட்ட
இலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்
பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்றப்
பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டறி கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ னாயினும்
ஆர்வமும் செற்றமு மகல நீக்கிய
வீர னாகலின் விழுமங் கொள்ளான்

### சாரணர் உரை

கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய் ;
ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவும் ஒண்ணா ;
கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
ஒருங்குட னில்லா உடம்பிடை உயிர்கள் ;

### துதி

அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது

போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா ;
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா ;
ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்கண் ;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி யொருவழிக் குவியா ;
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅ
திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயரா(து) ;

### சாரணர் நீங்கல்

என்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற்
கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
'பவந்தரு பாசங் கவுந்தி கெடு'கென்
றந்தர மாறாப் படர்வோர் தொழுது
'பந்த மறு'கெனப் பணிந்தனர் போந்து ;

### காவிரித்தென்கரை நிகழ்ச்சி.

காரணி பூம்பொழிற் காவிரிப் பேர்யாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதருங் கணவனு மாதவத் தாட்டியுந்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி
வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றோர்

காமனுந் தேவியும் போலு மீங்கிவர்
ஆரெனக் கேட்டீங் கறிகுவ மென்றே
நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடன்
ஆற்றுவழிப் பட்டோ ராரென வினவவென்
மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரென
உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ ? கற்றறிந் தீரெனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
எள்ளுநர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தி யிட்டது தவந்தரு சாபம்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும் ;
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் கால முறையீரோ வென,
அறியா மையினின் றிழிபிறப் புற்றோர்
உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரெனச்
சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந்தி யையையுந் தேவியுங் கணவனும்
முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்.

# மதுரைக் காண்டம் II

## காடுகாண் காதை

### உறையூர் நீக்கம்

திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
ஆதியி ரோற்றத் தறிவனை வணங்கிக்
கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லாம்
அந்தி லரங்கத் தகன்பொழி லகவயிற்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
மாதவத் தாட்டியு மாண்புற மொழிந்தாங்
கன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கித்
தென்றிசை மருங்கிற் செலவுவிருப் புற்று
வைகறை யாமத்து வாரணங் கழிந்து
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோர்
இளமரக் கானத் திருக்கை புக்குழி,

### மாங்காட்டு அந்தணன் வருகை

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க!
அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!
திங்கட் செல்வம் திருக்குலம் விளங்கச்
செங்கணு யிரத்தோன் திறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி!
முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி

மாமுது மறையோன் வந்திருந் தோனை,
யாது நும்மூர் ? ஈங்கென் வரவெனக்
கோவலன் கேட்பக் குன்றாச் சிறப்பின்
மாமறை யாளன் வருபொரு ளுரைப்போன்
நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்
என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் ; குடமலை மாங்காட் டுள்ளேன் ;
தென்னவன் நாட்டுச் சிறப்புஞ் செய்கையுங்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்திவந் திருந்தே னிதுவென் வரவெனத்
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு,
மாமறை முதல்வ ! மதுரைச் செந்நெறி
கூறு நீ ; எனக் கோவலற் குரைக்கும்

வழியருமை

கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து

நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்
அறையும் பொறையு மாரிடை மயக்கமும்
நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்தவிந்
நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும் ;
வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்
அலறுதலை மராமு முலறுதலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையும்
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்
கானமு மெயினர் கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலு மறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகும்
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவுஞ் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும் ;
அம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமின் ;

## காட்டு வழி

அவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்

விண்ணவர் கோமான் விழுநா லெய்துவிர் ;
பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர் ;
இட்ட சித்தி யெய்துவி ராயின்
இட்ட சித்தி யெய்துவிர் நீரே ;
ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்
ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்
நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி
"இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும்
இம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
வரைத்தாள் வாழ்வேன் ; வரோத்தமை யென்பேன் ;
உரைத்தார்க் குரியேன் ; உரைத்தீ ராயின்
திருத்தக் கீர்க்குத் திறந்தேன் கத"வெனும்
கதவம் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன ;
ஓட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி,
"இறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனும்
உரையீ ராயினு முறுகண் செய்யேன்
நெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனும்
உரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும்
அருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டும்
ஒருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினி ராடிற்
காண்டகு மரபின வல்ல மற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தா ளுள்ளம் பொருந்துமின் ;

உள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும் ;
தோன்றிய பின்னவன் துணர்மலர்த் தாளிணை
ஏன்றுதுயர் கெடுக்கு மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின் ;
காண்டகு பிலத்தின் காட்சி யீதாங்
கந்நெறிப் படரீ ராயி னிடையது
செந்நெறி யாகுந் தேம்பொழி லுடுத்த
ஊரிடை யிட்ட காடுபல கடந்தால்
ஆரிடை யுண்டோ ராரஞர்த் தெய்வம்
நடுக்கஞ் சாலா நயத்திற் றோன்றி
இடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கும்;
அடுத்துடன் கிடக்கு மதுரைப் பெருவழி;
நீணிலங் கடந்த நெடுமுடி யண்ணல்
தாடொழு தகையேன் போகுவல் யானென
மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லும் ;

அடிகளின் உரை

“ நலம்புரி கொள்கை நான்மறை யாள !
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை ;
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணாய் ;
இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோ!நீ ;
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள் ?
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ ; யாங்களு நீணெறிப் படர்குதும் ;”
என்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் தன்னுடன்
அன்றைப் பகலோ ரரும்பதித் தங்கிப்
பின்றையு மவ்வழிப் பெயர்ந்துசெல் வழிநாட்
கருந்தடங் கண்ணியும் கவுந்தி யடிகளும்
வருந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப
இடைநெறிக் கிடந்த வியவுகொண் மருங்கிற்
புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று

## தெய்வத்தின் இடையீடு

நீர்நசைஇ வேட்கையி னெடுந்துறை நிற்பக்
கானுறை தெய்வங் காதலிற் சென்று
நயந்த காதலி னல்குவ னிவனென
வயந்த மாலை வடிவிற் றோன்றி
கொடிநடுக் குற்றது போல வாங்கவன்
அடிமுதல் வீழ்ந்தாங் கருங்கணீ ருகுத்து
வாச மாலையி னெழுதிய மாற்றந்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலிற்
கோவலன் செய்தான் கொடுமையென் றென்முன்
மாதவி மயங்கி வான்றுய ருற்று
மேலோ ராயினு நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழும்
தண்முத் தொருகாழ் தன்கையாற் பரிந்து
துனியுற் றென்னையுந் துறந்தன ளாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் போந்த
தெதிர்வழிப் பட்டோ ரெனக்காங் குரைப்பச்
சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன் ;
பாத்தரும் பண்ப!நின் பணிமொழி யா''தென,
மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னாதலின்
வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்
ஐஞ்சி லோதியை யறிகுவென் யானெனக்
கோவல னாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன் ;
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்
என்றிற முரையா தேகென் றேகத்
தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்
கயாவுறு மடந்தை யருந்துயர் தீர்த்து
மீதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்

தீதியல் கானஞ் செலவரி தென்று
கோவலன் றன்னெடுங் கொடுங்குழை மாதொடு
மாதவத் தாட்டியு மயங்கத ரழுவத்து,

மேற்செலவு

குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
ஆரிடை யத்தத் தியங்குந ரல்லது
மாரி வளம்பெரு வில்லே ருழவர்
கூற்றுறழ் முன்பொடு கொடுவி லேந்தி
வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்
விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வான நாடி
ஐயைதன் கோட்ட மடைந்தன ராங்கென்.

காடுகாண் காதை முற்றிற்று.

# V

## சீவகசிந்தாமணி

### கேமசரியாரிலம்பகம்

1. வானின் வழங்கும் வண்கை மணிசெய் யாரமார்பிற்
றேனும் வழங்கும் பைந்தார் விசயை சிறுவன் றேங்கொள்
நானம் வழங்குங் கோதை நைய வெய்ய வாய
கானம் வழங்கன் மேவிக் காலின் னேகி னானே.

2. கனிகொள் வாழைக் காட்டுட் கருமை மெழுகி யவைபோன்
றினிய வல்லா முகத்த முசுவுங் குரங்கு மிரியத்
துனிவு தீர நோக்கித் தோன்றல் செல்லு முன்னுற்
பனிவெண் டிரைசூழ் கடல்போற் பழுவந் தோன்றிற்
[றவணே.

3. செல்வர் மனத்தின் ஓங்கித் திருவின் மாந்தர் நெஞ்சின்
எல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதி னெழுகிக்
கொல்லும் மரவின் மயங்கிச் சிறியார் கொண்ட
[தொடர்பிற்
செல்லச் செல்ல வஃகு நெறிசேர் சிலம்பு சேர்ந்தான்.

4. சுனைகள் கண்க ளாகச் சூழ்ந்த குவளை விழியா
வனைய லாகா வுருவம் நோக்கி மைந்தற் கிரங்கி
இனைவ போலும் வரையின் னருவி யினிதி னாடி
நனைகொள் போது வேய்ந்து நாதற் பாடு கின்றான்.

### வேறு

5. செய்தா னிருவினையின் பயத்தைச் சேருஞ் சென்றென்றி
எய்தா னதன்பயத்தைப் பிறனே துய்த்த லியல்பென்றி
கொய்தாமந் தாழ்ந்தொசிந்த குளிர்பூம் பிண்டிக்
[கோமானே
இஃதேநின்சொ லியல்பென்றா லடியே னின்னைத்
[தொழுதேனே.

வேறு

6. இனிதி னிங்ஙன மேத்திவ லங்கொண்டு
முனிவர் சித்திர கூடமு னுதெனத்
தனிதி னேகுபு தாபதர் வாழ்வதோர்
பனிகொள் பூம்பொழிற் பள்ளிகண் டானரோ.

7. புல்லு மல்லியும் போகுயர் நீள்கழை
நெல்லும் நீர்விளை கேழலுந் தோரையும்
அல்ல தீம்பழங் காய்கிழங் காதியா
நல்ல வேநுகர் வார்பள்ளி நண்ணினுன்.

8. அரிய கொள்கைய ராரழ லோந்தினுள்
மருவி வீடுவ ளைக்குறு மாட்சியர்
விரிய வேதம்வி ளம்பிய நாவினர்
தெரிவி றீத்தொழிற் சிந்தையின் மேயினர்.

9. வள்ளி யின்னமு தும்வரை வாழையின்
தெள்ளு தீங்கனி யுஞ்சில தந்தபின்
வெள்ள மாரிய னுய்விருந் தார்கென
உள்ள மாட்சியி னுருவந் தோம்பினர்.

10. பாங்கின் மாதவர் பான்மதி போன்றிவன்
வீங்கு கல்வியன் மெய்ப்பொருட் கேள்வியன்
ஆங்கு நாமும ளக்குவ மென்றுதம்
ஓங்கு கட்டுரை யொன்றிரண் டோதினர்.

11. ஐயர் கூறலு மண்ணலுங் கூறுவான்
சையம் பூண்டுச முத்திர நீந்துவான்
உய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையும்
எய்தி னர்களு முய்பவென் றோதினன்.

12. ஏம நன்னெறி யென்னெறி யன்னெறி
தூய்மை யின்னெறி யாமுந்து ணிகுவம்
காமன் றுதைநெ றியின்கட் காளைநீ
தீமை யுண்டெனிற் செப்பெனச் செப்பினன்.

வேறு

13. நீட்டிய சடைய மாகி நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து
வாட்டிய வுடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னிற்
காட்டிடைக் கரடி போகிக் கயமூழ்கிக் காட்டி னின்று
வீட்டினை விளக்க வேண்டும் வெளிற்றுரை விடுமி
[னென்றான்.

14. நோய்முதிர் குரங்குபோல நுகர்ச்சிநீர் நோக்கல் வேண்டா
காய்முதிர் கனியி னாழ்த்து வீழுமிவ் வியாக்கை யின்னே
வேய்முதிர் வனத்தின் வென்றா னுருவொடு விளங்க
[நோற்றுப்
போய்முதிர் துறக்கத் தின்பம் பருகுவ புரிமி னென்றான்.

15. மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்க
[டம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சிஐம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தேயா தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே யிருவினை கழியு மென்றான்.

16. குன்றனை னுரைப்பக் கேட்டே பாகத்தார் குடும்ப நீக்கி
இன்றுகண் விடுக்கப் பட்டேம் யாமென வெழுந்து போகி
வென்றவன் பாதஞ் சேர்ந்து வீட்டுநன் னெறியைப்
[பெற்றார்
சென்றது பருதி வட்டம் செம்மலு மசைவு தீர்ந்தான்.

வேறு

17. அசைவு தீர்ந்திரு ளஃகிய காலையே
வசையி னீங்கியி னார்வழி காட்டலிற்
றிசையும் யாறும் தெரிந்துகொண் டேகினன்
மிசையு மில்லதொர் மெய்ப்பொறி யாக்கையான்.

வேறு

18. தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்
பூங்குழன் மடந்தையர் புனைந்த சாந்தமும்
ஆங்கெலா மகிற்புகை யளாய வாசமும்
தாங்கலாற் றக்கநா டாய தென்பவே.

19. வண்டுவாழ் கொடுந்துறைக் கன்னி வாளைமேல்
நண்டுகி ருற்றென நடுங்கி நாணினல்
விண்டொளித் தூண்டுறந் தொடுங்கும் வீழ்புனல்
கொண்டபூங் கிடங்கணி நகரங் கூறுவாம்.

வேறு

20. மதியக டுரிஞ்சுஞ் சென்னி மாடநீண் மறுகு தோறும்
பொதியவிழ் மாலை வீழ்ந்து பொன்செய்நன் கலன்கள்
[சிந்தி
நிதியறை திறந்து நோக்கி யன்னதோர் நீர்மை யெய்திப்
புதியவர்க் கியங்க லாகாப் பொற்பொடு பொலிந்த தன்றே.

வேறு

21. கேமமா புரமெனுங் கேடி னல்லிசைப்
பூமிமேற் றிலகம்வைத் தனைய பொன்னகர்த்
தாமநீ ணெடுங்குடைத் தரணி காவலன்
நாமம்வே னரபதி தேவ னென்பவே.

22. அந்நகர்க் கரசனே யனைய வாண்டகை
மெய்ந்நிக ரிலாதவன் வேத வாணிகன்
கைந்நிக ரமைந்தவேற் கமழுந் தாரினான்
மைந்நிகர் மழைக்கணார் மருட்ட வைகுவான்.

வேறு

23. வார்சிலை வடிப்ப வீங்கி வரையெனத் திரண்ட தோளான்
சோர்புய றுலைத்த வண்கைச் சுபத்திரன் மனைவி பெற்ற
சீர்நலங் கடந்த கேம சரியெனத் திசைக ளெல்லாம்
பேர்நலம் பொறித்த பெண்மைப் பெருவிளக் காகி
[நின்றாள்.

24. மாசிலாள் பிறந்த ஞான்றே மதிவலான் விதியி னெண்ணிக்
காசிலாள் கண்ட போழ்தே கதுமென நாணப் பட்டான்
தூசுலா நுசுப்பி னாட்குத் துணைவனும் புணர்மி னென்று
பேசினா னன்றுகொண்டு பெருவிருந் தோம்பு கின்றான்.

25. தாழ்தரு பைம்பொன் மாலைத் தடமலர்த் தாம மாலை
வீழ்தரு மணிசெய் மாலை யிவற்றிடை மின்னி னின்று
சூழ்வளைத் தோளி செம்பொற் றானையே சார்ந்து
[நோக்கும்
ஊழ்படு காத லானை யொருபிடி நுசுப்பி னாளே.

26. சேயிழை கணவ னுகுந் திருமகன் றிறத்து நாளும்
ஆயிரத் தெட்டு நேர்ந்த வாரமு தடிசி லூட்டி
ஏயின வகையி னுலே யாறிரண் டெல்லை யாண்டு
போயின வென்ப மற்றப் பூங்கொடிச் சாய லாட்கே.

27. மாவடு மருட்டு நோக்கின் மதிமுக மழைக்கண் மாசில்
பூவொடு புரையுஞ் சாயல் புனைநலந் தனித்து வைக
ஏவடு பிணையி னேக்கி யிறைவனை கழல நின்ற
தாய்படுந் துயர மெல்லாம் தாரவ னீக்கி னுனே.

28. போதுவாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங்
கூதுமே மகளிர்க் கொத்த போகமு மன்ன தொன்றே
ஆகுநீ கவல வேண்டா வாரழ குடைய நம்பி
காதலான் றவத்தின் மிக்கான் கண்ணுறு நாளை யென்ருன்.

வேறு

29. பொன்னிலத் தெழுந்ததோர் பொருவில் பூங்கொடி
மின்னுவிட் டெரிவதோர் நலத்தள் வீங்கிருள்
பின்னிவிட் டனகுழல் பெருங்கட் பேதையூர்
துன்னினன் தொடுகழற் குரிசி லென்பவே.

30. தென்றிசை முளைத்ததோர் கோலச் செஞ்சுடர்
ஒன்றிமற் றுத்தரம் வருவ தொத்தவண்
மன்றல்கொள் மார்பினுன் வந்தொ ரானிழல்
நன்றுவந் திருந்தனன் நாதற் சிந்தியா.

31. குடைகவித் தனையது கோல மாமுடி
அடியிணை யாமையின் வடிவு கொண்டன ;
புடைதிரள் விலாவும்வில் வளைந்த பொற்பின ;
கடிகமழ் தாமரை கண்ணின் வண்ணமே.

32. வார்ந்திலங் கெயிறணி பவழ மாண்டவாய்
ஆர்ந்தபூ வங்கையு மடியும் தாமரை
தேர்ந்தனன் திருமகள் கணவ னுமெனத்
தீர்ந்தனன் சொல்லலை இத் தேர்க்கொண் டேறினுன்.

33. தேரிவ ரூர்ந்தனர் செல்ல விற்றலைக்
கூருகிர் விடுத்ததோர் கோல மாலையைப்
பேரிசை வீணையிற் சூட்டிப் பெண்கொடிக்
காரிகை யுலகுணர் கடவுட் பாடுமே.

வேறு

34. வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்கோத முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்
தேவர் பெருமானைத் தேனார் மலர்சிதறி
நாவி னவிற்றுதார் வீட்டுலக நண்ணுரே.

வேறு

35. முத்துமிழு முந்நீர் மணிவண்ணன் மூன்றுலகும்
பத்திமையாற் பாடப் படுவான்றாள் பாடக்கேட்
டொத்தரம்பை யன்ன ளுவந்திவளோ டொப்பானோர்
வித்தகனை யின்னே பெறுக வெனவுரைத்தாள்.

வேறு

36. நிலந்தினக் கிடந்தன நிதியந் நீணகர்ப்
புலம்பறப் பொலிவொடு புக்க காலையே
இலங்குபூங் கொடியன வேழை நோக்கமும்
உலங்கொடோ ளுறுவலி நோக்கு மொத்தவே.

வேறு

37. கண்ணுறக் காளையைக் காண்டலுங் கைவளை
மண்ணுறத் தோய்ந்தடி விழ்ந்தன மாமையும்
உண்ணிறை நாணுமு டைந்தன வேட்கையும்
ஒண்ணிறத் தீவிளைத் தாளுருக் குற்றாள்.

38. நல்வளத் தாமரை நாணிய வாண்முகக்
கொல்வளர் வேற்கணி னுள்குழைந் தாளெனச்
சொல்வளர்த் தாரவ டோழியர் சோர்குழல்
மல்வளர் மார்பனை வந்துவ ளைந்தார்.

வேறு

39. காதன்மை கண்ணுளே யடக்கிக் கண்ணெனும்
தூதினாற் றுணிபொரு ளுணர்த்தித் தான்றமர்க்
கேதின்மை படக்கரந் திட்ட வாட்கணாக்
கோதநீ ரமுதமு முலகும் விற்குமே.

வேறு

40. திருவிற்கும் கற்பகத் தெரியன் மாலையார்
உருவிற்கோர் விளக்கமா மொண்பொற் பூங்கொடி
முருகற்கு மாங்கற்கு மெனக்கு மொய்சடை
ஒருவற்கும் பகைத்தியா லொருத்தி வண்ணமே.

41. கலைத்தொகை நலம்பல கடந்த காளைதான்
நலத்தகை யவணல நினைப்ப நாய்கனும்
மலைத்தொகை மதந்தவழ் யானை மன்னவன்
நிலத்தவர்க் கறிவுற நெறியிற் செப்பினுன்.

42. இடியுமி ழெறிதிரை முழக்கிற் பல்லியம்
கொடியணி வியனகர்க் குழுமி யார்த்தெழக்
கடிமண மியற்றினர் கடவு ளுளினுல்
வடிமலர்க் கோதையை மைந்தர்க் கென்பவே.

வேறு

43. புனைமலர்த் தாரி னுனும் போதணி கொம்ப ளுளும்
நனைமலர்க் காவு மந்தண் வாவியு நல்ல வாடிச்
சுனைமலர்க் குவளை குற்றுச் சூழ்மலர்க் கண்ணி சூட்டி
வினைநல நுகர்ந்து செல்வார் விதியினுன் மிக்க நீரார்.

44. பொழிந்துகு காதல்பூண்டு புல்லுகை விடாது செல்லக்
கழிந்தன விரண்டு திங்கள் காளையு மற்றோர் நாளாற்
பிழிந்துகொள் வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி [தன்னே
டழிந்துவீ ழருவிக் குன்றி லாய்மலர்க் காவு புக்கான்.

45. தினைவிளை சாரற் செவ்வாய்ச் சிறுகிளி மாத ரோப்பப்
புனைவளைத் தோளி சொல்லைக் கிளியெனக் கிள்ளை போகா
நனைவிளை கோதை நாணிப் பொன்னரி மாலை யோச்சக்
கனைகழற் குரிசி னண்ணிக் கவர்கிளி யோப்பி னுனே.

46. திங்களங் குழவி செவ்வா னிடைக்கிடந் திமைப்ப [தேபோல்
குங்கும மார்பிற் பூண்ட குளிர்கதி ரார மின்ன
மங்கையோ டிருந்த போழ்தோர் மணிவண்டு கண்டு [சொன்னுன்
கங்குரு னீங்க லூற்றுக் கமழ்மல ரணிந்த தாரான்.

47. மணிவண்டிம் மாதர் கோதை மதுவுண வந்த போழ்தங்
இணைவண்டங் கிறந்து பாடின் றிருக்குமே யிரங்க
[லின்றாய்த்
துணைவண்டு துஞ்சி னீயுந் துஞ்சுவை யென்று நின்கட்
பணிகொண்ட தின்மை யாற்றான் பரிவொடு மிருக்கு
[மன்றே.

48. குழவியாய்ப் பிறந்து வெய்யோன் குமரனாய் முறுகி
[யிப்பால்
விழைவுதீர் கிழவ னாகி வீழுக்கதி ருலந்து வீழ
மழலைவண் டுழல நக்க மல்லிகை யலங்கல் சூட்டிக்
குழல்புரை கிளவி யோடுங் கொழும்புகை யமளி
[சேர்ந்தான்.

49. அல்லியுட் பாவை யன்ன ளறிவுரு வகையி னேற்றி
மெல்லவே திறந்து நீக்கி மின்னுவிட் டிலங்கு பைம்பூட்
கொல்சின மடங்க லன்னான் கொழுநிதி மாட நீந்திப்
பல்கதிர்ப் பருதி போலப் பாயிரு ளேகி னானே.

50. திருமணி குயின்ற செம்பொற் றிருந்துபூங் கொம்ப னுடன்
கருமணிப் பாவை யன்னான் கரந்துழிக் காண்டல்
[செல்லாள்
எரிமணி விளக்க மாடத் திருளறு காறு மோடி
அருமணி யிழந்தோர் நாக மலமரு கின்ற தொத்தாள்.

வேறு

51. யாண்டை யாயைய வஞ்சினை னாருயிர்
ஈண்டு டம்பொழித் தேகவ லிக்குமால் ;
நீண்ட தோளவ னேநிறை யானிலேன் ;
தீண்டு வந்தெனத் தேனின்மி றாற்றினாள்.

52. கனிகொள் காமம்க லந்துயி ரொன்றலின்
இனியர் மங்கையரென்பது கூறுவாய் ;
பனிகொள் மாமதி போற்பசப் பூரயான்
தனிய ளாவது தக்கது வோசொலாய் ?

வேறு

53. நுனசீ றடிநோ வநடாங் துசெலேல்!
எனதா வியகத் துறைவா யெனுனீ,
புனைதா ரவனே! பொயுரைத் தனையால்,
வினையே னுழியத் தனியே கினையே!

54. புனமா மயிலே! பொழிலே! புனலே!
வனமார் வழையே! வரையே! திரையே!
இனமா மணிசூ ழெரிபூ ணவனைத்
துனயான் பெறுகோ தொழுதே னுரையீர்

55. தகைவா டியதன் னிழல்கண் ணுகுநீர்
வகைவா டிவருந் தியழு வதுகண்
டகையே லமர்தோ ழியமே லவரோ
பகையா பவரென் றனள்பான் மொழியே.

56. மடமா மயிலே! குயிலே! மழலை
நடைமா ணனமே! நலமார் கிளியே!
உடனு டுமெனை யனையென் றுருகாத்
தொடையாழ் மழலை மொழிசோர்ந் தனளே.

வேறு

57. மல்லுறை யலங்கன் மார்பன் பிரிவெனு மெரியுள் வீழ்ந்து
கல்லுறை நாகு வேய்த்தோட் கதிர்மணி முறுவற்
[செவ்வாய்
வில்லுறை புருவ மாதர் வெந்தனள் கிடப்ப மின்றேய்
இல்லுறை தெய்வ நோக்கி யிரங்கினின் றுரைக்கு மன்றே.

58. கடத்திடைக் கவளந் தேனெய்
கனியைத்தோய்த் தினிய துற்றத்
தடக்கையாற் கொடுத்துப் புல்லுந்
தவழ்மதக் களிறு நீங்கின்
மடப்பிடிக் குய்த லுண்டோ
வாலடிக் குஞ்சி சூட்டும்
கொடைக்கையான் பிரிந்த பின்றைக்
கோதையாட் குய்த லுண்டோ?

59. வஞ்சவாய்க் காமன் சொன்ன மணிநிற வண்டு காணீர்
துஞ்சுவேன் றுயரந் தீரத் தொழுதகு தெய்வ மாவீர்!
மஞ்சுதோய் செம்பொன் மாடத் தென்மனை தன்னு [ளென்றாள்
பஞ்சிமேன் மிதிக்கும் போதும் பனிக்குஞ்சீ றடியி னாளே.

60. எரிநுதி யுற்ற மாவி னிளந்தளிர் போன்று மாழ்கிப்
புரிநரம் பிசையிற் றள்ளிப் புன்கணுற் றழுத லாலே
அரிகுரற் கொண்ட பூச லகத்தவர்க் கிசைப்ப வீண்டித்
திருவிரி கோதை நற்றாய் நிப்புதி சேர்ந்து சொன்னாள்.

61. விழுத்திணைப் பிறந்து வெய்ய வேட்கைவே ரரிந்து [மெய்ந்நின்
றிழுக்கமொன் றானு மின்றி யெய்திய தவத்தின் வந்து
வழுக்குத லின்றி விண்ணோன் வச்சிர நுதியி னிட்ட
எழுத்தனன் றந்த வின்ப மின்னுநீ பெறுதி யென்றாள்.

62. பிறங்கின கெடுங்கள் யாவும் புணர்ந்தவர் பிரிவர் பேசின்
இறங்கின வீழ மேலா யோங்கிய வெண்ணில் யோனிப்
பிறந்தவர் சாவர் செத்தார் பிறப்பவே என்ன நோக்கிக்
கறங்கிசை வண்டு பாடுங் கோதைநீ கவல லென்றாள்.

63. எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப் புள்ளி யற்றாற்
பிரிவின்கட் பிறந்த துன்பம் பெருங்கட லனைய தொன்றால்
உருகிநைந் துடம்பு நீங்கி னிம்மையோ டும்மை யின்றி
இருதலைப் பயனு மெய்தா ரென்றுயாங் கேட்டு மன்றே.

64. மன்னுநீர் மொக்கு ளொக்கு மானிட ரிளமை யின்பம்
மின்னினொத் திறக்குஞ் செல்வம் வெயிலுறு பனியி [னீங்கும்
இன்னிசை யிரங்கு நல்யா ழிளியினு மினிய சொல்லாய்
அன்னதால் வினையி னாக்க மழுங்குவ தென்னை யென்றாள்.

65. பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதிய மொத்து
மெய்யெரி துயரின் மூழ்க விதிர்விதிர்த் துருகி நையு
மையிருங் குழலி னுடன் மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டுங் காணாள் காளையுங் காலிற் சென்றான்.

66. காழகச் சேற்றுட் டம்பால் கதிர்மணிக் குடத்தி னேந்தி
வீழ்தரச் சொரிவ தேபோல் விளங்கொளித் திங்கட்
[புத்தேள்
சூழிருட் டொழுதி மூழ்கத் தீங்கதிர் சொரிந்து நல்லார்
மாழைகொண் முகத்திற் ருேன்றி வளைகடன் முளைத்த
[தன்றே.

67. ஏறனுற் கிருளை நீங்கக் கைவிளக் கேந்தி யாங்கு
வீறுயர் மதியந் தோன்ற விரைவொடு போய பின்றை
மாறிலாப் பருதி வட்டம் வருதிரை முளைத்த வாங்கண்
ஆறுசெல் ஒருவற் கண்ண லணிகல மருள லுற்ருன்.

வேறு

68. எவ்வூரீர்? எப்பதிக்குப் போந்தீர்? நும்
மனைவியர்தாம் எனைவர்? மக்கள்
ஒவ்வாதார் தாமெனைவர்? ஒப்பார்மற்
றெனைவர்?நீர் உரைமின்! என்ருற்
கிவ்வூரேன் இப்பதிக்குப் போந்தேனென்
மனைவியரு நால்வர் மக்கள்
ஒவ்வாதார் தாமில்லை ஒப்பான்
ஒருவனென உரைத்தான் சான்ருேன்.

69. ஒப்பா னொருமகனே நால்வர்
ஒருவயிற்றுட் பிறந்தா னென்ன
நக்கான் பெருஞ்சான்ருேன் நம்பிபோல்
யாருலகி லினியா ரென்ன
மிக்கா னுரைப்பதுவு மிக்கதே
போலுமால் வினவிக் கேட்பேன்
தக்காய் குறித்த துரையென்ருன்
தானுரைப்பக் கேட்கின் ருனே.

70. நற்ருனஞ் சீல நடுங்காத்
தவமறிவர் சிறப்பிந் நான்கும்
மற்ருங்குச் சொன்ன மனைவியரிந்
நால்வரவர் வயிற்றுட் டோன்றி
உற்ரு னொருமகனே மேற்கதிக்குக்
கொண்டுபோ முரவோன் றன்னைப்
பெற்ருர் மகப்பெற்ருர் அல்லாதார்
பிறர்மக்கள் பிறரே கண்டீர்.

71. படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து
கண்டவர்மெய் பனிப்ப நோற்றிட்
டுடனாக வைம்பொறியும் வென்றார்க்
குவந்தீதல் தான மாகும்
திடனாகத் தீந்தேனுந் தெண்மட்டு
முயிர்க்குழா மீண்டி நிற்றற்
கிடனாகு மூனுமிவை துறத்தலே
சீலமென் றுரைத்தார் மிக்கார்.

72. ஓவா திரண்டுவவு மட்டமியும்
பட்டினிவிட் டொழுக்கங் காத்தல்
தாவாத் தவமென்றார் தண்மதிபோல்
முக்குடைக்கீழ்த் தாதை பாதம்
பூவே புகைசாந்தம் சுண்ணம்
விளக்கி வற்றாற் புனைத லாலும்
ஏவா விவைபிறவும் பூசனையென்
றீண்டியநூல் கரைகண் டாரே.

73. இந்நால்வர் துணைவியராக் காதன்
மகனிவனு வுடையார் போகிப்
பொன்னார மார்பிற் புரந்தர
ராய்ப்பூமி முழுது மாண்டு
மன்னாகி முக்குடைக்கீழ் வாமன்
சிறப்பியற்றி வரம்பி லின்பம்
பின்னு விளைவித்துப் பிறவா
வுலகெய்தல் பேச லாமே.

74. மட்டார்பூம் பிண்டி வளங்கெழு
முக்குடைக்கீழ் மாலே கண்டீர்
முட்டாத வின்பப் புதாத்திறக்குந்
தாளுடைய மூர்த்தி பாதம்
எட்டானும் பத்தானும் இல்லாதார்க்
கிவ்வுலகி லின்ப மேபோல்
ஒட்டாவே கண்டீர் வினையவனைத்
தேருதார்க் குணர்ந்தீ ரன்றே.

75. வேற்றுவ ரில்லா நுமரூர்க்கே
செல்லினும் வெகுண்டீர் போல
ஆற்றுணக் கொள்ளா தடிபுறத்து
வைப்பீரே யல்லிர் போலும்
கூற்றங்கொண் டோடத் தமியே
கொடுநெறிக்கட் செல்லும் போழ்தின்
ஆற்றுணக் கொள்ளீ ரழகலால்
அறிவொன்று மிலிரே போலும்.

76. இழுதன்ன வெண்ணிணத்த செந்தடிக்கே
யேட்டைப்பட் டிரும்பிற் போர்த்த
பழுதென்னும் வன்மனத்தா ரோட்டை
மரச்செவியர் கேளார் பால்போன்
றொழுகி யமுதூறு நல்லறத்தை
யோர்கிலரூன் செய்கோட் டக்குக்
கழுகுண்ண வள்ளூர மேசுமந்து
புள்ளிற்கே புறஞ்செய் கின்றார்.

77. கையாற் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணா ளதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே என்கின்றீர்
ஆங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்.

வேறு

78 இன்னவா றுறுதி கூறி
யெரிமணி வயிர மார்ந்த
பொன்னவிர் கலங்க ளெல்லாம்
பொலிவொடு புகன்று நீட்டிச்
சென்மினீ ரென்று கூற
வலங்கொண்டு தொழுது சென்றான்
வின்மரீஇ நீண்ட தோளான்
வெயிற்கட நீந்த லுற்றான்.

ஒ,1x
N52

# VI

# கரைக்கால் அம்மையார் புராணம்

காரைக்கால்.

1. மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி, மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.

தனதத்தன் மகள் புனிதவதியார்.

2. வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.

3. வணிகர்பெருங் குலம்விளங்க
வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற்
றசையுநடைப் பருவத்தே,
பணியணிவார் கழற்கடிமை
பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல்
ததும்பவரு மொழிபயின்றார்.

4. பல்பெருநற் கிளையுவப்பப்
பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார்
திருப்பெருகுஞ் செயல்புரிய,
மல்குபெரும் பாராட்டின்
வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடனழகின்
கொழுந்தெழுவ தென்வளர்வார்.

புனிதவதியாரை மணம்பேச வருதல்.

5. நல்லவென உறுப்புநா லவருரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

6. நீடியசீர்க் கடனுகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார்.

7. வந்தமூ தறிவோர்கள் மணம்குறித்தம் மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் தனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கு முறைமைமணம் புரிகென்றார்.

பரமதத்தனுக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டமை.

8. மற்றவனு முறைமையினால்
மணமிசைந்து செலவிடச்சென்
றுற்றவர்க ளுரைகேட்ட
நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப்
பெருமகட்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து
வதுவைவினைத் தொழில்பூண்டான்.

திருமணத்திற்காக காரைக்கால் சேர்தல்.

9. மணமிசைந்த நாளோலை
செலவிட்டு, மங்கலநாள்
அணையவது வைத்தொழில்க
ளானவெலா மமைவித்தே
இணரலங்கல் மைந்தனையும்
மணவணியின் எழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக்
காரைக்காற் பதிபுகுந்தார்.

திருமண நிகழ்ச்சி.

10. அளிமிடைதார்த் தனதத்தன்
அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல்.விதிவழியே
செயல்முறைமை செய்தமைத்துத்

தளிரடிமென் னகைமயிலைத்
தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
கலியாணஞ் செய்தார்கள்.

### மருமகனுக்கு மாடம் அமைத்தல்

11. மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க அணிமாட மருங்கமைத்தான்.

12. மகட்கொடையின் மகிழ்சிறக்கும்
வரம்பிறனங் கொடுத்ததற்பின்,
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின்
நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால்
தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினில்
மேம்படுதல் மேவினான்.

### அம்மையார் சிவனடி மறவாமை.

13. ஆங்கவன்ற னில்வாழ்க்கை
அருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும்
பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியவன் புறுகாதல்
ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின்
பண்புவழா மையிற்பயில்வார்.

14. நம்பரடி யாரணைந்தால் நல்லதிரு வமுதளித்தும்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள்.

### பரமதத்தன் மாம்பழம் பெறுதல்.

15. பாங்குடைய நெறியின்கட்
பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிக ளோரிரண்டு
வந்தணைந்தார் சிலர்கொடுப்ப,
ஆங்கவைதான் முன்வாங்கி
அவர்வேண்டுங் குறையளித்தே,
ஈங்கிவற்றை இல்லத்துக்
கொடுக்கவென இயம்பினன்.

### அடியார் பசித் துன்பம்.

16. கணவன்றான் வரவிடுத்த
கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தல்
மாதரார் வைத்ததற்பின்,
பணவரவம் புனைந்தருளும்
பரமனர் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினல்
ஒருவர்மனை யுட்புகுந்தார்.

### பசி தீர்த்தல்.

17. வேதங்கள் மொழிந்தபிரான்
மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்ற னடியாரைப்
பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர்
முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா
வின்னடிசி லூட்டுவார்.

18. கறியமுதங் குதவாதே
திருவமுது கைகூட,
வெறிமலர்மேல் திருவனையார்
விடையவன்ற னடியாரே

பெறலரிய விருந்தானல்
  பேறிதன்மே லில்லையெனும்
அறிவினரா யவரமுது
  செய்வதனுக் காதரிப்பார்.

19. இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினுல்
அல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்விப்பார்.

20. மூப்புறுமத் தளர்வாலு
  முதிர்ந்துமுடு கியவேட்டைத்
தீப்பசியின் நிலையாலும்
  அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசில்
  மாங்கனியோ டினிதருந்திட்
பூப்பயின்மென் குழன்மடவார்
  செயலுவந்து போயினர்.

பரமதத்தன் வீட்டிற்கு வருதல்.

21. மற்றவர்தாம் போயினபின்
  மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண்
  ஓங்கியபே ரில்லெய்திப்,
பொற்புறமுன் நீராடிப்
  புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங்
  கடப்பாட்டி லூட்டுவார்.

22. இன்னடிசில் கறிகளுடன்
  எய்துமுறை இட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான்
  மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியில்
  இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங்
  கொடுவந்து கலத்தளித்தார்.

பரமதத்தன் மற்ருெரு மாம்பழம் கேட்டல்

23. மனைவியார் தாம்படைத்த
மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை
ஆராமைத் தார்வணிகன்
“இனையதொரு பழமின்னும்
உளததனை யிடுக” என,
அனையதுதாங் கொண்டுவர
அணைவார்போ லங்ககன்ருர்.

அம்மையார் மாம்பழம் பெறுதல்.

24. அம்மருங்கு நின்றயர்வார்
அருங்கனிக்கங் கென்செய்வார்?
மெய்ம்மறந்து நினைந்துற்ற
இடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே,
அவரருளால், தார்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த
ததிமதுரக் கனியொன்று.

25. மற்றதனைக் கொடுவந்து
மகிழ்ந்திடலும், அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற்
படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று;
மூவுலகிற் பெறற்கரிதால்;
பெற்றதுவே றெங்கென்று
பெய்வளையார் தமைக்கேட்டான்.

26. அவ்வுரைகேட் டலுமடவார்
அருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந்
திறமன்றென் றுரைசெய்யார்;
கைவருகற் புடைநெறியாற்
கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல்
விடமாட்டார்; விதிர்ப்புறுவார்.

திரு அருட் செயல் விளம்பல்.

27. செய்தபடி சொல்லுவதே
        கடனென்னுஞ் சீலத்தால்,
மைதழையுங் கண்டர்சே
        வடிகள்மனத் துறவணங்கி,
எய்தவருங் கனியளித்தா
        ரியாரென்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார்
        புகுந்தபடி தனைமொழிந்தார்.

28. ஈசனரு ளெனக்கேட்ட
        இல்லிறைவன் அதுதெளியான்
வாசமலர்த் திருவனையார்
        தமைநோக்கி, "மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான்
        திருவருளே லின்னமுமோர்
ஆசில்கனி அவனருளால்
        அழைத்தளிப்பாய்" எனமொழிந்தான்.

மற்றும் ஒருபழம் பெறுதல்.

29. பாங்ககன்று மனைவியார்
        பணியணிவார் தமைப்பரவி,
ஈங்கிதளித் தருளீரேல்
        என்உரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந்
        தெய்துதலு மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே
        அதிசயித்து வாங்கினன்.

வேறு

அது காணமை.

30. வணிகனுந் தன்கைப் புக்க
        மாங்கனி பின்னைக் காணன்;
தணிவரும் பயமேற் கொள்ள
        உள்ளமுந் தடுமா றெய்தி,

அணிகுழ லவரை வேரூேர்
அணங்கெனக் கருதி நீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான்
தொடர்வின்றி ஒழுகு நாளில்.

அம்மையாரை விட்டுப் பிரிதல்.

31. விடுவதே எண்ண மாக
மேவிய முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது
படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வேன் என்ன,
நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கள்
மரக்கலஞ் சமைப் பித்தார்கள்.

32. கலஞ்சமைத் ததற்கு வேண்டுங்
கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம்
பொருந்துவ நிரம்ப வேற்றிச்,
சலந்தரு கடவுட் போற்றித்
தலைமையா நாய்கன் றுனும்
நலந்தரு நாளி லேறி
நளிர்திரைக் கடலிற் போனன்.

33. கடல்மிசை வங்கம் ஓட்டிக்
கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங்
களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்க ணீங்க
மீண்டுமக் கலத்தி லேறிப்
படர்புனற் கன்னி நாட்டோர்
பட்டின மருங்கு சேர்ந்தான்;

34. அப்பதி தன்னி லேறி
அலகில்பல் பொருள்க ளாக்கும்
ஒப்பின்மா நிதிய மெல்லாம்
ஒருவழி பெருக வுய்த்து,

மெய்ப்புகழ் விளங்கு மவ்வூர்
 விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத்
 திருமலி வதுவை செய்தான்.

35. பெறலருந் திருவி னாளைப்
 பெருமணம் புணர்ந்து, முன்னை
அறலியல் நறுமென் கூந்தல்
 அணங்கனா டிறத்தி லற்றம்
புறமொரு வெளியு ளுமல்
 பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி,
 முகமலர்ந் தொழுகு நாளில்,

இளைய மனைவியின் மகள்.

36. முருகலர் சோலை மூதூர்
 அதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவன் என்ன
 எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலன்கள் போக்கும்
 புகழினான் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர்
 பெண்கொடி அரிதிற் பெற்றான்.

அம்மகட்குப் பெயர் இடுவது

37. மடமக டன்னைப் பெற்று
 மங்கலம் பேணித் தான்முன்பு
உடனுறை வஞ்சி நீத்த
 ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து, தெய்வத்
 தொழுகுல மென்றே கொண்டு
கடனமைத் தவர்த நாமங்
 காதல்செய் மகவை யிட்டான்.

38. இன்னிலை யிவனிங் கெய்தி
 இருந்தனன் ; இப்பால் நீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக்
 காரைக்கால் வணிக னான

தன்னிகர் கடந்த செல்வத்
தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னேடு
மனையறம் புரிந்து வைக,

39. விளைவளம் பெருக்க வங்க
மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர்
மாநகர் தன்னின் மன்னி,
அளவில்மா நிதிய மாக்கி
அமர்ந்தினி திருந்தா னென்று
கிளரொலி மணிக்கொம் பன்னர்
கிளைஞர்தாங் கேட்டா ரன்றே ;

சுற்றத்தார் அம்மையாருடன் செல்லுவது.

40. மாமணிச் சிவிகை தன்னில்
மடநடை மயிலன் னுரைத்
தாமரைத் தவிசில் வைகுந்
தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக்
காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யாவருஞ் சூழச்
சேணிடைக் கழிந்து சென்ருர்.

41. சிலபகல் கடந்து சென்று
செந்தமிழ் திருநா டெய்தி,
மலர்புகழ்ப் பரம தத்தன்
மாநகர் மருங்கு வந்து,
குலமுதன் மனைவி யாரைக்
கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னுர்க்குச்
சொல்லிமுன் செல்ல விட்டார்.

42. வந்தவ ரணைந்த மாற்றங்
கேட்டலும், வணிகன் ருனுஞ்
சிந்தையி லச்ச மெய்திச்
செழுமணம் பின்பு செய்த

பைந்தொடி தனையுங் கொண்டு
பயந்தபெண் மகவி னேடும்
முந்துறச் செல்வே னென்று
மொய்குழ லவர்பால் வந்தான்.

அம்மையாரைக் கணவன் பணிவது.

43. தானுமம் மனைவி யோடுந்
தளர்நடை மகவி னேடும்
மானிளம் பிணைபோல் நின்ற
மனைவியா ரடியில் தாழ்ந்தே,
"யானும தருளால் வாழ்வேன் ;
இவ்விளங் குழவி தானும்
பான்மையா லுமது நாமம்"
என்றுமுன் பணிந்து வீழ்ந்தான்.

சுற்றத்தார் வினுதல்.

44. கணவன்றன் வணங்கக் கண்ட
காமர்பூங் கொடியனுரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால்
அச்சமோ டொதுங்கி நிற்ப,
உணர்வுறு கிளைஞர் வெள்கி,
"உன்திரு மனைவி தன்னை
மணமலி தாரி னய்!நீ
வணங்குவ தென்கொல் ?" என்றார்.

பரமதத்தன் விடை.

45. மற்றவர் தம்மை நோக்கி,
"மானுடர் இவர்தா மல்லர் ;
நற்பெருந் தெய்வ மாதல்
நானறிந் தகன்ற பின்னர்,
பெற்றவிம் மகவு தன்னைப்
பேரிட்டேன் ; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன் ; நீரும்
போற்றுதல் செய்மின்," என்றான்.

அம்மையாரது ஒருமைப்பாட்டுணர்ச்சி

46. என்றபின் சுற்றத் தாரும்
"இது என்கொல்"; என்று நின்றார் ;
மன்றலங் குழலி னாரும்
வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தம்
குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கின் மிக்க
உணர்வுகொண் டுரைசெய் கின்றார்.

பேய் வடிவு

47. "ஈங்கிவன் குறித்த கொள்கை
யிதுவினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும்" என்று
பரமர்தாள் பரவி நின்றார்.

48. ஆனவப் பொழுது மன்றுள்
ஆடுவா ரருளி னாலே,
மேனெறி உணர்வு கூர
வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனுடை வனப்பை யெல்லாம்
உதறியெற் புடம்பே யாகி
வானமு மண்ணு மெல்லாம்
வணங்குபேய் வடிவ மானார்.

49. மலர்மழை பொழிந்த தெங்கும்
வானதுந் துபியின் நாதம்
உலகெலா நிறைந்து விம்ம
உம்பரு முனிவர் தாமுங்
குலவினர் ; கணங்கள் எல்லாம்
குணலையிட் டன;முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந்
தொழுதஞ்சி அகன்று போனார்.

### நூல் இயற்றுதல்

50. உற்பவித் தெழுந்த ஞானத்
தொருமையி னுமைகோன் றன்னை
அற்புதத் திருவந் தாதி
அப்பொழு தருளிச் செய்வார் ;
பொற்புடைச் செய்ய பாத
புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினிலொன் றானேன்
நானென்று நயந்து பாடி,

51. ஆய்ந்தசீர் இரட்டை மாலை
அந்தாதி எடுத்துப் பாடி,
ஏய்ந்தபே ருணர்வு பொங்க,
எயிலொரு மூன்று முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக்
கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன் கூர
வழிப்படும் வழியால் வந்தார்.

52. கண்டவர் வியப்புற் றஞ்சி
கையகன் றோடு வார்கள் ;
கொண்டதோர் வேடத் தன்மை
உள்ளவா கூறக் கேட்டே
அண்டர்நா யகனு ரென்னை
அறிவரேல், அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான்
எவ்வுரு வாயென் என்பார்.

### கைலைக்குச் செல்லுதல்.

53. வடதிசைத் தேச மெல்லாம்
மனத்தினீங் கடிதிற் சென்று,
தொடையவிழ் இதழி மாலைச்
சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பின்
பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல்
தலையினால் நடந்து சென்றார்.

54. தலையினால் நடந்து சென்று
சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது,
மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக்
கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி
திருக்கணோக் குற்ற தன்றே.

55. அம்பிகை திருவுள் ளத்தின்
அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித்
" தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மான்!ஓர் எற்பின்
யாக்கையன் பென்னே !" என்ன,
நம்பெரு மாட்டிக் கங்கு
நாயக னருளிச் செய்வான் ;

சிவபிரான் பாராட்டல்

56. " வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண்! உமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப்
பெற்றனள் " என்று, பின்றை
அருகுவந் தணைய நோக்கி,
அம்மையே ! என்னும் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம்
உய்யவே யருளிச் செய்தார்.

57. அங்கணன், " அம்மை யேயென்
றருள்செய, " அப்பா !" என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் ; தம்மைச்
சங்கவெண் குழையி னாருந்
தாமெதிர் நோக்கி, " நம்பால்
இங்குவேண் டுவதென் ?" என்ன,
இறைஞ்சிநின் றியம்பு கின்றார்.

அம்மையார் திரு உள்ளம்.

58. இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார் ;
“ பிறவாமை வேண்டும் ; மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும் ; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க ” என்றார்.

59. கூடுமா றருள்கொ டுத்துக்
“ குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்
நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமு நீகண்
டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை ” என்றான்
பரவுவார் பற்றாய் நின்றான்.

ஆலங்காடு அடைதல்.

60. அப்பரி சருளப் பெற்ற
அம்மையும், செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை
விடைகொண்டு வணங்கிப் போந்து,
செப்பரும் பெருமை அன்பால்
திகழ்திரு ஆலங் காடாம்
நற்பதி தலையி னாலே
நடந்துபுக் கடைந்தார் அன்றே.

61. ஆலங்கா டதனில் அண்டம்
உறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது, கொங்கை
திரங்கியென் றெடுத்துத் தங்கு
மூலங்கா ணாதார் தம்மை
மூத்தநற் பதிகம் பாடி,
ஞாலங்கா தலித்துப் போற்றும்
நடம்போற்றி நண்ணு நாளில்,

வேறு

62. மட்டவிழ்கொன் றையினர்தம் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காதல் எழுந்தோங்க, வியப்பெய்தி
எட்டிஇல வம்ஈகை எனஎடுத்துத் திருப்பதிகங்
கொட்டமுழ வங்குழகன் ஆடுமெனப் பாடினர்.

63. மடுத்தபுனல் வேணியினர் அம்மைஎன மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா !

# VII

## கம்பராமாயணம்

### இராவணன் மந்திரப்படலம்

1. பூவரு மயனெடும் புகுந்து பொன்னகர்
மூவகை யுலகினு மழகு முற்றுற
ஏவின வியற்றினன் கணத்தி லென்பரால்
தேவரு மருள் கொளத் தெய்வத் தச்சனே.

2. பொன்னினு மணியினு மமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினு னுக நோக்கினன்
முன்னையி னழகுடைத் தென்று மொய்கழல்
மன்னனு முவந்துதன் முனிவு மாறினன்.

3. அவ்வழி யாயிர மாயி ரங்கிரைச்
செவ்வழிச் செம்மணித் தூணஞ் சேர்த்திய
அவ்வெழின் மண்டபத் தரிக ளேந்திய
வெவ்வழி யாசனத் தினிது மேயினன்.

4. வரம்பறு சுற்றமு மந்தி ரத்தொழில்
நிரம்பிய முதியருஞ் சேனை நீள்கடல்
தரம்பெறு தலைவருந் தழுவத் தோன்றினன்
அரம்பையர் கவரியோ டாடுந் தாரினன்.

5. முனைவருந் தேவரு முற்று மற்றுளோர்
எனைவருந் தவிர்கென வேய வாணையான்
புனைகுழன் மகளிரோ டினைஞர்ப் போக்கினன்
நினைவுறு காரிய நிகழ்த்து நெஞ்சினன்.

6. ஆன்றமை கேள்விய ரெனினு மாண்டொழிற்
கேன்றவர் நண்பின ரெனினும் யாரையும்
வான்றுணைச் சுற்றத்து மக்க டம்பியர்
போன்றவ ரல்லரைப் புறத்துப் போக்கினன்.

7. தாழ்ச்சியிங் கிதனின்மேற் றருவ தென்னினி
மாட்சியில் குரங்கினு லழிந்த மாநகர்
ஆட்சியு மமைவுமென் னரசு நன்றெனுச்
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லினன்,

8. சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையு நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டவிவ் வரியணை யிருந்த தென்னுடல்.

9. ஊறுகின் றனகிண றுதிர மொண்ணகர்
ஆறுகின் றிலதன லகிலி னுவிபோய்க்
கூறுமங் கையர்நறுங் கூந்த லின்சுறு
நா றுகின் றதுநுகர்ந் திருந்த நாமெலாம்.

10. மற்றில தாயினு மலைந்த வானரம்
இற்றில தாகிய தென்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்தில மென்னும் பேரலால்
முற்றுவ தென்னினிப் பழியின் மூழ்கினும்.

11. என்றவ னியம்பலு மெழுந்தி றைஞ்சினன்
கன்றிய கருங்கழற் சேனை காவலன்
ஒன்றுள துணர்த்துவெ னொருங்கு கேளெனு
நின்றன னிகழ்த்தினன் புணர்ப்பி னெஞ்சினன்.

12. வஞ்சனை மனிசரை யியற்றி வாணுதற்
பஞ்சன மெல்லடி மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழிலென வறிவித் தேனது
தஞ்சென வுணர்ந்திலை யுணருந் தன்மையோய்.

13. கரன்முதல் வீரரைக் கொன்ற கள்வரை
விரிகுழ லுங்கை மூக்கரிந்த வீரரை
பரிபவஞ் செய்ஞ்ஞரைப் படுக்க லாதுநீ
அரசிய லழிந்ததென் றயர்தி போலுமால்.

14. தண்டமென் றொருபொருட் குரிய தக்கரைக்
கண்டவர் பொறுப்பரோ வுலகங் காவல்செய்
வண்டம ரலங்கலாய் வணங்கி வாழ்வதோ
விண்டவ ருறுவலி யடக்கும் வெம்மைதான்.

15. செற்றன ரெதிரெழுந் தேவர் தானவர்
கொற்றமும் வீரமும் வலியுங் கூட்டற
முற்றிமூன் றுலகுக்கு முதல்வ னயது
வெற்றியோ பொறைகொலோ விளம்பல் வேண்டுமால்.

16. விலங்கின ருயிர்கெட விலக்கி மீள்கலா
திலங்கையி னினிதிருந் தின்பந் துய்த்தியேற்
குலங்கெழு காவல குரங்கிற் றங்குமோ
உலங்குநம் மேல்வரி னுழிக்கற் பாலதோ.

17. போயின குரங்கினைத் தொடர்ந்து போயவண்
ஏயின ருயிர்குடித் தெவ்வந் தீர்கலம்
வாயினு மனத்தினும் வெறுத்து வாழ்துமேல்
ஓயுநம் வலியென வுணரக் கூறினன்.

18. மற்றவன் பின்னுற மகோதரப் பெயர்க்
கற்றடந் தோளினு னெரியுங் கண்ணினன்
முற்றுற நோக்கினன் முடிவு மன்னதாற்
கொற்றவ கேளென வினைய கூறினன்.

19. தேவரு மடங்கின ரியக்கர் சிந்தினர்
தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையர்
மூவரு மொதுங்கின ருனக்கு மொய்ம்பினோய்.

20. ஏற்றமென் பிறிதினி யெவர்க்கு மின்னுயிர்
மாற்றுறு முறைமைசால் வலியின் மாண்பமை
கூற்றுவன் றன்னுயிர் கொள்ளுங் கூற்றெனத்
தோற்றுநின் னேவறன் றலையிற் சூடுமால்.

21. வெள்ளியங் கிரியினை விடையின் பாகனோ
டள்ளி விண் டொடவெடுத் தார்த்த வாற்றலாய்
சுள்ளியி லிருந்துறை குரங்கின் றோள்வலிக்
கெள்ளுதி போலுநின் புயத்தை யெம்மொடும்.

22. மண்ணினும் வானினு மற்றை மூன்றினும்
கண்ணினி னீங்கினர் யாவர் கண்டவர்
நண்ணிய வலத்தினர் யாவர் நாயக
எண்ணிய திறத்திவ ரெண்ண லாவரோ.

23. இடுக்கிவ ணியம்புவ தென்னை யீண்டெனை
விடுக்குவை யாமெனிற் குரங்கை வேரறுத்
தொடுக்கரு மனிசரை யுயிருண் டுன்பகை
முடிக்குவென் யானென முடியக் கூறினன்.

24. இச்சிரத் தவனுரைத் திறுக்கு மேல்வையின்
வச்சிரத் தெயிற்றவன் வல்லே கூறினன்
அச்சிரத் தைக்கொரு பொருளின் றுயினும்
பச்சிரத் தம்பொழி பருதிக் கண்ணினன்.

25. போயினி மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளாற் றின்மி னென்றெமை
ஏயினை யிருக்குவ தன்றி யெண்ணிநீ
ஆயும தெம்வயி னயிர்ப்புண் டாங்கலோ.

26. எவ்வுல கத்துநின் னேவல் கேட்கிலாத்
தெவ்வினை யறுத்துனக் கடிமை செய்தயான்
தவ்வின பணியுள தாகத் தான்கொலோ
இவ்வினை யென்வயி னீகலா தென்றான்.

27. நின்னிலென் றவன்றனை விலக்கி நீயிவை
என்முனு மெளியர்போ லிசைத்தி யோவென
மன்முக நோக்கினன் வணங்கு கையினன்
துன்முக னென்பவ் னினைய சொல்லினன்.

28. திக்கயம் வலியில தேவர் மெல்லியர்
முக்கணன் கயிலையு முரணின் றுயது
மக்களுங் குரங்குமே வலிய ராமெனின்
அக்கட விராவணற் கமைந்த வாற்றலே.

29. பொலிவது பொதுவுற வெண்ணும் புன்றொழில்
மெலியவர் கடனமக் கிறுதி வேண்டுவோர்
வலியின ரெனினவர்க் கொதுங்கி வாழ்துமோ
ஒலிகழ லொருவநம் முயிருக் கன்பினல்.

30. கண்ணிய மந்திரக் கருமங் காவல
மண்ணியன் மனிதருங் குரங்கு மற்றவும்
உண்ணிய வமைந்தன வுணவுக் குட்குமேல்
திண்ண்ணிய வரக்கரிற் றீரர் யாவரே.

31. எரியுற மடுப்பது மெதிர்ந்து ளோர்படப்
பொருதொழில் யாவையும் புரிந்து போவதும்
வருவதுங் குரங்குநம் மொழ்க்கை யூர்கடந்
தரிதுகொ லிராக்கதர்க் காழி நீந்துதல்.

32. வந்துன திருக்கையு மரணும் வன்மையும்
வெந்தொழிற் ருனையின் விரிவும் வீரமும்
சிந்தையி னுணர்பவர் யாவ ரேசிலர்
உய்ந்துதம் முயிர்கொடிவ் வுலகத் துள்ளுளார்.

33. ஒல்வது நினையினு முறுதி யோரினும்
வெல்வது விரும்பினும் வினைவு வேண்டினும்
செல்வது மவருழைச் சென்று தேய்ந்தறக்
கொல்வது கருமமென் றுணரக் கூறினன்.

34. காவலன் கண்ணெதி ரவனைக் கைகவித்
தியாவதுண் டினிநமக் கென்னச் சொல்லினன்
கோபமும் வன்மையுங் குரங்குக் கேயெனு
மாபெரும் பக்கனென் றொருவன் வன்மையான்.

35. முந்தினர் முரணிலர் சிலவர் மொய்யமர்
நந்தினர் தம்மொடு நனிந டந்ததோ
வந்தொரு குரங்கிடு தீயின் வன்மையால்
வெந்ததோ விலங்கையோ டரக்கர் வெம்மையும்.

36. மானிட ரேவுவார் குரங்கு வந்திவ்வூர்
தானெரி மடுப்பது நிருதர் தானையே
யானவ ரதுகுறித் தழுங்கு வாரெனின்
மேனிகழ் வதற்கினி விளம்பல் வேண்டுமோ.

37. நின்றுநின் றிவைசில விளம்ப நேர்கிலன்
நன்றினி நரரொடு குரங்கை நாமறக்
கொன்றுதின் றல்லதோ ரெண்ணங் கூடுமோ
என்றன னிகல்குறித் தெரியுங் கண்ணினன்.

வேறு

38. வெம்பிக லரக்கரை விலக்கிவினை தேரா
நம்பிய ரிருக்கவென நாயகனை முன்னா
எம்பியென விற்கிலுரை செய்வலித மென்னாக்
கும்பகரு ணப்பெயரி னனிவை குறித்தான்.

39. நீயயன் முதற்குல மிதற்கொருவ னின்றாய்
ஆயிரமறைப் பொரு ளுணர்ந்தறி வமைந்தாய்
தீவினை நயப்புறுதல் செய்வினை தெரிந்தாய்
ஏயின வுறத்தகைய வித்துணைய வேயோ.

40. ஒவிய மமைந்தநகர் தீயுண வுளைந்தாய்
கோவிய லழிந்ததெனை வேறொரு குலத்தோன்
தேவியை நயந்துசிறை வைத்தசெய னன்றே
பாவிய ருறும்பழி யிதிற்பழியு முண்டோ.

41. நன்னகர ழிந்ததென நாணினை நயத்தால்
உன்னுயி ரெனத்தகைய தேவியர்க ளுன்மேல்
ஒண்ணகை தரத்தர வொருத்தன் மனையுற்றாள்
பொன்னடி தொழத்தொழ மறுத்தல்புகழ் போலாம்.

42. என்றொருவ னில்லுறை தவத்தியை யிரங்காய்
வன்றொழிலி னுய்மறை துறந்துசிறை வைத்தாய்
அன்றொழிவ வாயின வரக்கர்புக ழைய
புன்றொழிலி னுலிசை பொறுத்தல் புலமைத்தோ.

43. ஆசில் பரதாரமமை யச்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம்.

44. சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க்குழலி னளையினி மன்னு
விட்டிடுது மேலினிய மாதுமவர் வெல்லப்
பட்டிடுது மேலதுவு நன்றுபழி யன்றால்.

45. மரன்படர் வனத்தொருவ னேசிலை வலத்தால்
கரன்படை படுத்தவனை வென்றுகளை கட்டான்
நிரம்பிடுவ தன்றதுவு நின்றதினி நம்பால்
உரம்படுவ தேயிதனின் மேலுறுதி யுண்டோ.

46. வென்றிடுவர் மானிடவ ரேனுமவர் தம்மேல்
நின்றிடை விடாதுநெறி சென்றுற நெருக்கித்
தின்றிடுதல் செய்கில மெனிற்செறுந ரோடும்
ஒன்றிடுவர் தேவருல கேழுமுட னென்றும்.

47. ஊறுபடை யூறுவதன் முன்னமொரு நாளே
ஏறுகட லேறிநரர் வானவரை யெல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடு மடங்க
நூறுவது வேகரும மென்பது நுவன்றான்.

48. நன்றுரைசெய் தாய்கருணை நானிது நினைந்தேன்
ஒன்றுமினி யாய்தல்பழு தொன்னலரை யெல்லாம்
கொன்றுபெயர் வாநம கொடிப்படை களெல்லாம்
இன்றெழுக வென்கென விராவண னிசைத்தான்

49. என்றவ னியம்பிடு மெல்லையினில் வல்லே
சென்றுபடை யோடுசிறு மானிடர் சினப்போர்
வென்றுபெயர் வாயரச நீகொலென வீரம்
நின்றுபெரி தென்றுமக னக்கிவை நவின்றான்.

50. ஈசனருள் செய்தனவு மேடவிழ் மலர்ப்பே
ராசன முவந்தவ னளித்தனவு மாயப்
பாசமுதல் வெம்படை சுமந்துபலர் நின்றார்
ஏசவுழல் வேறொருவன் யானுமுள னென்றான்.

51. முற்றுமுள தாமுலக மூன்றுமெதிர் தோன்றிச்
செற்றமுத லோரொடு செறுத்தெதிர் திறத்தும்
வெற்றியுன தாகவினை யாதொழியி னென்னைப்
பெற்றுமிலை யானெறி பிறந்துமில னென்றான்.

52. குரங்குபட மேதினி குறைத்தலை நடப்போர்
அரங்குபட மானிட ரலந்தலை படப்பார்
இரங்குபடர் சீதைபட வின்றிருவர் நின்றார்
சிரங்கடிதி னிற்கொணர்தல் காணுதி சினத்தோய்.

53. சொல்லிடை கழிக்கிலை சுருங்கிய குரங்கென்
கல்லிடை கிழித்தவுரு மிற்கடுமை காணும்
வில்லிடை கிழித்தமிடல் வாளிவெரு வித்தம்
பல்லிடை கிழித்திரிவ கண்டுபய னுய்ப்பாய்.

54. யானையிலர் தேர்புரவி யாதுமில ரேவும்
தானையிலர் நின்றதவ மொன்றுமிலர் தாமோ
கூனன்முது கின்சிறு குரங்குகொடு வெல்வார்
ஆனவரு மானிடர்நம் மாண்மையினி தன்றே.

55. நீருநில னுங்கெடிய காலுநிமிர் வானும்
பேருலகில் யாவுமொரு நாள்புடை பெயர்த்தே
யாருமொழி யாமைநரர் வானரர்க ளென்பார்
வேருமொழி யாதவகை வென்றலது மீளேன்.

56. என்றடி யிறைஞ்சின னெழுந்துவிடை யீமோ
வன்றிறலி ஞயெனலும் வாளெயிறு வாயில்
தின்றனன் முனிந்துநனி தீவினையை யெல்லாம்
வென்றவரி னன்றுணரும் வீடணன் விளம்பும்.

வேறு

57. நூலினு னுணங்கிய வறிவு நோக்கிலை
போலுமா லுறுபொரு ளுணரும் பூட்சியோய்
காலமேல் விளைபொரு ளுண்ருங் கற்பிலாப்
பாலனீ யினையன பகரற் பாலையோ.

58. கருத்திலான் கண்ணிலா னொருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திர மனைய செப்புவாய்
விருத்தர்மே தகையவர் வினைய மந்திரத்
திருத்தியோ விளமையான் முறைமை யெண்ணிலாய்.

59. தூயவர் முறைமையே தொடங்குந் தொன்மையோர்
ஆயவர் நிற்கமற் றவுண ராதியாந்
தீயவர் முறைமையாற் றேவ ராயது
மாயமோ வஞ்சமோ வன்மை யேகொலோ.

60. அறந்துறந் தமரரை வென்ற வாண்டொழிற்
றிறந்தெரிந் திடினது தானுஞ் செய்தவம்
நிறந்திறம் பாவகை யியற்று நீர்மையால்
மறந்துறந் தவர்தரும் வரத்தின் வன்மையால்.

61. மூவரை வென்றுமூன் றுலகு முற்றுறக்
காவலி னின்றுதங் களிப்புக் கைம்மிக
வீவது முடிவென வீந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் தீமையோர்.

62. வினைகளை வென்றுமேல் வீடு கண்டவர்
எனைவரென் றியம்புகே னெவ்வந் தீர்கையால்
முனைவரு மமரரு முன்னும் பின்னரும்
அனையவர் திறத்துளர் யாவ ராற்றினர்.

63. பிள்ளைமை விளம்பினை பேதை நீயென
ஒள்ளிய புதல்வனை யுரப்பி யென்னுரை
எள்ளலை யாமெனி னியம்ப லாற்றுவென்
தெள்ளிய பொருளென வரசற் செப்புவான்.

64. எந்தைநீ யாயுநீ யெம்மு னீதனி
வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ
இந்திரப் பெரும்பத மிழக்கின் றுயென
நொந்தனெ னுகலி னுவல்வ தாயினேன்.

65. கற்றுறு மாட்சியென் கண்ணின் றுயினும்
உற்றுறு பொருடெரிந் துணர்த லோயினும்
சொற்றுறு சூழ்ச்சியின் றுணிவு சோரினும்
முற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினேய்.

66. கோநகர் முழுவது நினது கொற்றமும்
சானகி யெனும்பெய ருலகின் றம்மனை
யானவள் கற்பினுல் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தன் மாட்சியோ.

67. எண்பொருட் டொன்றிநின் றெவரு மெண்ணினுல்
விண்பொருட் டொன்றிய வுயர்வு மீட்சியும்
பெண்பொருட் டன்றியும் பிறிதுண் டாமெனின்
மண்பொருட் டன்றியும் வரவும் வல்லதோ.

68. மீனுடை நெடுங்கட லிலங்கை வேந்தன்முன்
தானுடை நெடுந்தவந் தளர்ந்து சாய்வதோர்
மானுட மடந்தையா லென்ற வாய்மொழி
தேனுடை யலங்கலா யின்று தேர்தியால்.

69. ஏறிய நெடுந்தவ மிழைத்த வெல்லைநாள்
ஆறிய பெருங்குணத் தறிவ னுணையால்
கூறிய மனிதர்பாற் கொற்றங் கொள்ளலை
வேறினி யவர்வயின் வென்றி யாவதோ.

70. ஏயது பிறிதுணர்ந் தியம்ப வேண்டுமோ
நீயொரு தனியுல கேழு நீந்தினுய்
ஆயிரந் தோளவற் காற்ற லுேற்றனை
மேயினை யாமெனின் விளம்ப வேண்டுமோ.

71. மேலுயர் கயிலையை வென்ற மேலைநாள்
நாலுதோ ணந்திதா னவின்ற சாபத்தால்
கூலவான் குரங்கினுற் குறுகுங் கோளது
வாலிபாற் கண்டனம் வரம்பி லாற்றலாய்.

72. தீயிடைக் குளித்தவத் தெய்வக் கற்பினள்
வாயிடை மொழிந்தசொன் மறுக்க வல்லமோ
நோயுனக் கியானென நுவன்று ளாளவள்
ஆயவள் சீதைபண் டமுதிற் றேன்றினள்.

வேறு

73. சம்பரப் பெயருடைத் தானவர்க்
கிறைவனைத் தனுவ லத்தால்
அம்பரத் தூடுபுக் கமரிடைத்
தலைதுமித் தமர ருய்ய
உம்பருக் கிறைவனுக் கரசளித்
துதவினு னொருவ னேமி
இம்பரிற் பணிசெயத் தயரதப்
பெயரினு னிசைவ ளர்த்தான்.

74. மிடல்படைத் தொருவனு யமரர்கோன்
விடையதாய் வெரிநின் மேலாய்
உடல்படைத் தவுணரா யினரெலா
மடியவா ளுருவி னனும்
அடல்படைத் தவனியைப் பெருவளந்
தருகவென் றருளி னனும்
கடல்படைத் தவர்நெடுங் கங்கைதந்
தவன்வழிக் கடவுண் மன்னன்.

75. பொய்யுரைத் துலகினிற் சினவினர்
குலமறப் பொருது தன்வேல்
நெய்யுரைத் துறையினிட் டறம்வளர்த்
தொருவனுய் நெறியி னின்றான்
மையயரைத் துலவுகண் மனைவிபால்
வரமளித் தவைம றாதே
மெய்யுரைத் துயிர்கொடுத் தமரரும்
பெறுகிலா வீடு பெற்றான்.

76. அனையவன் சிறுவரெம் பெருமவுன்
பகைஞரா லவரை யம்மா
இனையரென் றுணர்தியே லிருவரு
மொருவரு மெதிரி லாதார்

முனைவரு மமரரு முழுதுணர்ந்
தவர்களு முற்று மற்றும்
நினைவருந் தகையர்நம் வினையினன்
மனிதரா யெளிதி னின்றார்.

77. கோசிகப் பெயருடைக் குலமுனித்
தலைவ னக்குளிர் மலர்ப்பே
ராசனத் தவனொடெவ் வுலகமுந்
தருவனென் றமைக்க லுற்றான்
ஈசனிற் பெருபடைக் கலமிமைப்
பளவினெவ் வுலகம் யாவும்
நாசமுற் றிடநடப் பனகொடுத்
தவைபிடித் துடையர் நம்ப.

78. எறுழ்வலிப் பொருவிறே ளவுணரோ
டமரர்பண் டிகல்செய் காலத்
துறுதிறற் கலுழன்மீ தொருவனின்
றமர்செய்தா னுடைய வில்லும்
தெறுசினத் தவர்கண்முப் புரநெருப்
புறவுருத் தெய்த வம்பும்
குறுமுனிப் பெயரினு னிறைதவர்க்
கிறைதரக் கொண்டு நின்றார்.

79. நாவினு லுலகைநக் கிடுவதிக்
களவிடற் குரிய நாளும்
மேவுதீ விடமுயிர்ப் பனவெயிற்
பொழியெயிற் றனவ வீரர்
ஆவமா மரியபுற் றுறைவமுற்
றறிவருக் கழிவு செய்யும்
பாவகா ரியருயிர்ப் பதமலா
திரைபெறு பகழி நாகம்.

80. பேருமோ வொருவரா லவர்களா
லல்லதெப் பெரிய வேனும்
நாருமூ ரியுமரு நம்முடைச்
சிலைகள்போ னலிவ வாமோ

தாருவோ வேணுவோ தாணுவா
யுலகினைத் தழுவி நிற்கும்
மேருவோ மால்வரைக் குலமெலா
மல்லவோ வில்லு மன்னே.

81. உரமொருங் கியதுநீர் கடையும்வா
லியதுமார் புலகை மூடும்
மரமொருங் கியகரா தியர்விரா
தனதுமால் வரைகண் மானும்
சிரமொருங் கினவினிச் செருவொருங்
குளதெனிற் றெவ்வ ரென்பார்
பரமொருங் குவதலாற் பிறிதொருங்
காததோர் பகையு முண்டோ.

82. சொல்வரம் பெரியமா முனிவரென்
பவர்கடாங் துணையி லாதார்
ஓல்வரம் பெரியதோ ளிருவரு
மமரரோ டுலகம் யாவும்
வெல்வரென் பதுதெரிந் தெண்ணினர்
நிருதர்வேர் முதலும் வீயக்
கொல்வரென் றுணர்தலா லவரைவந்
தினியதோ ருறவு கொண்டார்.

83. துஞ்சுகின் றிலர்களா லிரவுநன்
பகலுநிற் சொல்ல வொல்கி
நெஞ்சுநின் றயருமிந் நிருதர்பேர்
சனகியாம் நெடிய தாய
நஞ்சுதின் றவர்கடா நண்ணுவார்
நரகமென் றெண்ணி நம்மை
அஞ்சுகின் றிலர்கணின் னருளலாற்
சரணிலா வமர ரையா.

84. புகன்மதித் துணர்கிலா மையினமக்
கெளிமைசால் பொறுமை கூர
நகன்மதிக் கிலமறுப் பொலியவா
ளொளியிழுந் துதய நண்ணும்

பகன்மதிக் குவமையா யினவெலா
மிரவுகால் பருவ நாளின்
அகன்மதிக் குவமையா யினதபோ
தனருளார் வதன மம்மா.

85. சிந்துமுந் துலகினுக் கிறுதிபுக்
குருவொளித் துழறல் செய்வார்
இந்துவின் றிருமுகத் திறைவிநம்
முறையுளா ளென்ற லோடும்
அந்தகன் முதலினோ ரமரரும்
முனிவரும் பிறரு மஞ்சார்
வந்துநங் நகரமும் வாழ்வுமே
கண்டுகண் டகல்வர் மன்னோ.

86. சொலத்தகாத் துங்கிமித் தங்களெங்
கணும்வரத் தொடர்வ தொன்னூர்
வெலத்தகா வமரரு மவுணருஞ்
செருவில்விட் டனவி டாத
குலத்தகால் வயநெடுங் குதிரையுங்
குஞ்சரக் குன்று மின்று
வலத்தகான் முந்துறத் தந்துநம்
மனையிடைப் புகுவ மன்னோ.

87. வாயினும் பல்லினும் புனல்வறந்
துலறினர் நிருதர் வைகும்
பேயினும் பெரியபேர் நரிகளுந்
திரிதரும் பிறவு மெண்ணின்
கோயிலுங் நகரமும் மடநலார்
குழலுநங் குஞ்சி யோடும்
தீயின்வெந் தனவினித் துங்கிமித்
தம்பெறுந் திறனு முண்டோ.

88. சிந்தமா நாகரைச் செலமுருக்
கியகரன் திரிசி ரத்தோன்
முந்தமா னுயினன் வாலியே
முதலினோர் முடிவு கண்டால்

அந்தமா னிடவனே டாழிமா
வலவனு மயனு மையா
இந்தமா னிடவரா மிருவரோ
டெண்ணலா மொருவர் யாரே.

89. இன்னமொன் றுரைசெய்வே னினிதுகே
ளெம்பிரா னிருவ ராய
அன்னவர் தம்மொடும் வானரத்
தலைவரா யணுகி நின்றார்
மன்னுநம் பகைஞராம் வானுளோ
ரவரொடும் மாறு கோடல்
கன்மமன் றிதுநமக் குறுதியென்
றுணர்தலே கரும மென்றான்.

வேறு

90. இசையுஞ் செல்வமு முயர்குலத்
தியற்கையு மெஞ்ச
வசையுங் கீழ்மையு மீக்கொளக்
கிளையொடு மடியா
தசைவில் கற்பினவ் வணங்கைவிட்
டருளுதி யிதன்மேல்
விசையு மில்லெனச் சொல்லின
னறிஞரின் மிக்கோன்.

91. கேட்ட வாண்டகை கரத்தொடு
கரதலங் கிடைப்பப்
பூட்டி வாய்தொறும் பிறைக்குலம்
வெண்ணிலாப் பொழிய
நாட்டங் தீயெழ நலங்திக
ழாரமு மார்பும்
தோட்ட டங்களுங் குலுங்கநக்
கினையன சொன்னான்.

92. இச்சை நல்லன வுறுதிக
ளிசைக்குவ னென்றாய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை
யென்பெரு விறலைக்

கொச்சை மானிடர் வெல்குவ
ரென்பது குறித்த
தச்ச மோவவர்க் கன்பினே
யாவதோ வையா.

93. ஈங்கு மானிடப் புழுக்களுக்
கிலைவர மென்றாய்
தீங்கு சொல்லினை திசைகளை
யுலகொடுஞ் செருக்கால்
தாங்கு மானையைத் தள்ளியத்
தழனிறத் தவனை
ஓங்க றன்னெடு மெடுக்கமுன்
வரங்கொண்ட துளதோ.

94. மனக்கொ டன்றியும் வறியன
வழங்கினை வானோர்
சினக்கொ டும்படை செருக்களத்
தென்னையென் செய்த
எனக்கு நிற்கமற் றென்னெடிங்
கொருவயிற் றுதித்த
உனக்கு மானிடர் வலியராங்
தகைமையு முளதோ.

95. சொல்லு மாற்றங்க டெரிந்திலை
பன்முறை தோற்றும்
வெல்லு மாற்றலு மொருமுறை
பெறுவரால் விண்ணைக்
கல்லு மாற்றலென் கிளையையு
மென்னையுங் களத்தில்
கொல்லு மாற்றல ருளரெனக்
கோடலுங் கொண்டாய்.

96. தேவரிற் பெற்ற வரத்தினிற்
பெருஞ்செருக் கென்னின்
மூவரிற் பெற்ற முடையவன்
றன்னெடு முழுதும்
காவலிற் பெற்ற திகிரியோன்
றன்னையுங் கடந்த
தேவரிற் பெற்ற வரத்தினு
லியம்புதி யிளையோய்.

97. நந்தி சாபத்தி னமையடுங்
குரங்கெனி னம்பால்
வந்த சாபங்க ளனைப்பல
வவைசெய்த வலியென்
இந்தி ராதியர் சித்தர்க
ளியக்கர்நம் மிறுதி
சிந்தி யாதவர் யாரவை
நம்மையென் செய்த.

98. அரங்கி லாடுவாற் கன்புபூண்
டுடைவர மறியேன்
இரங்கி யானிற்ப வென்வலி
யவன்வயி னெய்த
வரங்கொள் வாலிபாற் றோற்றனன்
மற்றும்வே றுள்ள
குரங்கெ லாமெனை வெல்லுமென்
றெங்ஙனங் கோடி.

99. நீல கண்டனு நேமியு
நேர்நின்று பொரினும்
ஏலு மன்னவ ருடைவலி
யவன்வயி னெய்தும்
சாலு நல்வர நினைந்திவ
னெதிர்செல றவிர்ந்து
வாலி தன்னையம் மனிதனு
மறைந்துநின் றெய்தான்.

100. ஊன வில்லிறுத் தோட்டைமா
மரத்துளம் போட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசிழந்
துயர்வனங் குறுகி
யானி ழைத்திட வில்லிழந்
தினனுயிர் சுமக்கும்
மானிடன் வலி நீயலா
தாருளர் மதிப்பார்.

101. என்று தானுரை மொழிந்துநீ
யுணர்விலி யென்னு
நன்று போதுநா மெழுகெனு
மரக்கனை நணுகி

ஒன்று கேளின முறுதியென்
றன்பின னொழியான்
துன்று தாரவன் பின்னரு
மிணையன சொல்வான்.

102. தன்னின் முன்னிய பொருளிலா
வொருதனித் தலைவன்
அன்ன மானிட னாகிவந்
தவரித் தமைந்தான்
சொன்ன நம்பொருட் டும்பர்தஞ்
சூழ்ச்சியின் றுணிவால்
இன்னந் தேர்குதி போலுமென்
றடிதொழு திரந்தான்.

103. அச்சொற் கேட்டவ னழியா
னென்றனை யாயிற்
கொச்சைத் தன்மதி யெத்தனை
போரிடைக் குறைந்தான்
இச்சைக் கேற்றன யான்செய்த
வித்தனை காலம்
முச்சற் றுன்கொலம் முழுமுதி
லோனென முனிந்தான்.

104. இந்தி ரன்றனை யிருஞ்சிறை
யிட்டநா ளிமையாத்
தந்தி கோடறத் தகர்த்தநா
டன்னையான் முன்னம்
வந்த போர்தொறுந் துரந்தநாள்
வானவ லருகைச்
சிந்த வென்றநாள் சிறியன்கொ
னீசொன்ன தேவன்.

105. சிவனு நான்முகத் தொருவனுந்
திருநெடு மாலாம்
அவனு மற்றுள வமரரு
முடனுறைந் தடங்கப்
புவன மூன்றும்யா னுண்டுள
தாண்டவப் பொருவில்
உவனி லாமையி னேவலி
யொதுங்கியோ வுரையாய்.

106. ஆயி ரம்பெருந் தோள்களு
மத்துணைத் தலையும்
மாயி ரும்புவி யுள்ளடி
யடக்குறும் வடிவும்
தீய சாலவுஞ் சிறிதென
நினைந்துநாந் தின்னும்
ஒயு மானிட வுருவுகொண்
டன்கொலா மொருவன்.

107. பித்த னாகியு வீசனு
மரியுமென் பெயர்கேட்
டெய்த்த சிந்தைய ரேகுழி
யேகுழி யெல்லாம்
கைத்த வேற்றினுங் கடவிய
புள்ளினு முதுகில்
தைத்த வாளிக ணின்றுள
குன்றின்வீழ் தடித்தின்.

108. வெஞ்சி னந்தரு போரிலென்
னுடனெழ வேண்டா
இஞ்சி மாநக ரிடமுடைத்
தீண்டினி திருத்தி
அஞ்ச லஞ்சலென் றயலிருந்
தவர்முக நோக்கி
நஞ்சின் வெய்யவன் கையெறிந்
துருமென நக்கான்.

109. பின்னும் வீடண னையனின்
றரமலாப் பெரியோர்
முன்னை நாளிவன் முனிந்திடக்
கிளையொடு முடிந்தார்
இன்ன முண்டியா னியம்புவ
திரணிய னென்பான்
றன்னை யுள்ளவா கேட்டியென்
றுரைசெயச் சமைந்தான்.

# VIII

## காசிக் கலம்பகம்

### தோழி கூற்று

1. கண்ணொன்று திருநுதலிற் கனலுருவ மார்படைத்த
காசி நாதா !
தண்ணென்று நறையிதழித் தாரென்றா ணெட்டுயிர்த்தாள்
தரைமேல் வீழ்ந்தாள் ;
எண்ணொன்று முணராமே கிடக்கின்றா ளிதுகண்டால்
எழுத்தொன் றோதத்
துண்ணென்று வருவரெனத் துணிந்தனளோ வறியேனித்
தோகை தானே.

2. பெற்ற மூர்வதும் வெண்டலை யோட்டினிற்
பிச்சை யேற்றுத் திரிவதும் பேய்களே
சுற்ற மாகச் சுடலையில் வாழ்வதும்
தோலு டுப்பதுந் தொண்டர்க் கரிதன்றால்
கற்றை வார்சடைக் காசிப் பதியுளீர்
கற்பந் தோறுங் கடைநா ளுலகெலாம்
செற்று மீளப் படைக்கவும் வேண்டுமே
தேவ ரீர்பதஞ் சிந்திப்ப தில்லையே.

3. படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினும்
அடுத்த தீங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிந் திரதிரு வும்புவி
வெண்கு டைக்கு ளிடுமர சாட்சியும்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவார்
காத லித்து வருந்திருக் காசியே.

4. திருகுசினக் கூற்றினெயிற் றிடைக்கிடந்துங் கடைநாளிற்
றிரையே மொன்றாய்ப்
பெருகுமுழு நீத்தத்திற் றிளைத்தாடப் புணைதேடும்
பேதை நெஞ்சே
உருகிலைநெக் குடைந்திலைமொண் டானந்த வனத்தேனை
யோடி யோடிப்
பருகிலைகண் ணரும்பிலைமெய் பொடித்திலைமற் றுனக் [கென்ன
பாவந் தானே.

மறம்

5. வையமுழு தொருங்கீன்ற விடப்பாக ரானந்த
வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை வேட்டரசன்
விடுத்த தூதா !
கையிலவன் றிருமுகமோ ? காட்டிருகண் டொட்டு [முட்டைக்
கதையிற் றாக்கிச்
செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோ நாசியொடு
செவியுந் தானே.

பாணாற்றுப்படை

6. இழுமென் மழலை யின்னமு துறைப்பப்
பிழிதே னொழுக்கி னொழுகுமின் னரம்பின்
வள்ளுகிர் வடிம்பின் வரன்முறை வருடத்
தெள்விளி யெடுக்குஞ் சீறியாழ்ப் பாண !
வாழிய கேண்மதி ; மாற்றமொன் றியானும்
ஏழிசைப் பாணன்மற் றிறைமக னலனே ;
பலவுடன் பழிச்சுவ தொழிக; மற் றம்ம ;
சிலபகல் யானுநின் னிலைமைய னாகி
நலம்பா டறியா விலம்பா டலைப்ப
நீர்வாய்ச் சிதலையு நூல்வாய்ச் சிலம்பியும்
சிலவிட மேய்ந்த சிறுபுன் குரம்பையில்
மசகமு முலங்கும் வாய்ப்படைக் குடவனும்

பசையில் யாக்கைத் தசைகறித் துண்ண
அரும்பசிக் குணங்கியும் பெரும்பிணிக் குடைந்தும்
சாம்பல்கண் டறியா தாம்பி பூத்த
எலிதுயி லடுப்பிற் றலைமடுத் தொதுங்கிச்
சிறுசிறு ரலறப் பெருமனைக் கிழத்தி
குடங்கையிற் றுங்கிய கொடிற்றினள் குடங்கைக்
கடங்கா வுண்க ணாறலைத் தொழுக,
அழுகுரற் செவிசுடர் விழுமநோய் மிக்குக்
களைகண் காணா தலமரு மேல்வையிற்
கடவு ணல்லூழ் பிடர்பிடித் துந்தக்
குரைபுனற் கங்கைக் கரைவழிச் சென்றாங்குத்
தேம்பழுத் தழிந்த பூம்பொழிற் படப்பையிற்
கடவுட் கற்பகக் கொடிபடர்ந் தேறி
வான்றொடு கமுகின் மடற்றலை விரிந்து
நான்றன திசைதொறு நறுநிழற் கதலித்
தேங்கனி பழுத்த பூங்குலை வளைப்ப
அம்மலர்க் கொடியிற் செம்முக மந்தி
முடவுப் பலவின் முட்புறக் கனியைப்
புன்றலைச் சுமந்து சென்றிடுங் காட்சி
குடமிசைக் கொண்டொரு கூன்மிடை கிழவன்
நெடுநிலைக் கம்பத்தின் வடமிசை நடந்தென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதக்
கன்னிமதி லுடுத்த காசிமா நகரம்
பெருவளஞ் சுரக்க வரசுவீற் றிருக்கும்
மழுவல னுயர்த்த வழனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி யின்னிசை பாடலும்
அந்நிலைக் கண்ணே யகல்விசும் பொரீஇச்
சுரபியுந் தருவும் பெருவளஞ் சுரப்ப
இருமையும் பெற்றனன் யானே நீயுமத்
திருநகர் வளமை பாடி யிருநிலத்
திருநிதிக் கிழவனைக் கறுப்பத்
திருவொடும் பொலிக பெருமகிழ் சிறந்தே.

## தோழி கூற்று

7\. இடம ருங்கினின் மருங்கி லாதவவள் குடியி ருக்கவு
[முடியில்வே
றிவளொருத்தியை யிருத்துவைத்துமதி மோக
[மோகினியினுருவமாய்
நடமி டிங்கிவடன் மேலும் வைத்துள நயந்தொர் பிள்ளை
[பயந்தநீர்
நங்கு லத்திருவை மருவி னின்றுபிறர் நாவ
[ளைக்கவிட மாகுமோ?
குடமு டைந்ததென வானி னங்கண்மடி மடைதி
[றந்துபொழி பாலொடும்
கொழும டற்பொதி யவிழ்ந்து கைதைசொரி சோறு
[மிட்டணிதிரைக்கையாற்
கடல் வயிற்றினை நிரப்பு கின்றசுர கங்கை குண்டகழி
[யாநெடுங்
ககன நீள்குடுமி மதில்க ளேழுடைய காசி
[மேவுமகி லேசரே.

# குறிப்புரை

## I. சிறுபாணாற்றுப்படை

கடைச் சங்கம் மருவிய நூல்களுள் சிறந்ததும் முதன்மையானதெனக் கருதப்படுவதும் பத்துப்பாட்டாகும். இது பாட்டெனவும் வழங்கும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன அப்பாடல்களின் பெயர்களும் முறையும் ஆகும். இவற்றை நக்கீரர் முதலிய சங்கத்துச் சான்றோர்கள் பாடியருளினர். இவற்றைத் தொகுத்தவர்களும் சங்கப் புலவர்களே என்று கூறப்படுகிறது.

பத்துப்பாட்டின் இலக்கணத்தைப் பிற்காலத்து நூலான **பன்னிரு பாட்டியல்** என்னும் நூல் பின்வருமாறு கூறும் :—

1. நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
   ஏறிய வடியி னீரைம் பாட்டுத்
   தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே

2. அதுவே,
   அகவலின் வருமென வறைகுநர் புலவர்.

இப்பாடல்களின் சொற்களையும் கருத்துக்களையும் பிற்கால நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் தம் நூல்களிலும் உரைகளிலும் கையாண்டுள்ளனர். பண்டைக்காலத் தமிழக வரலாறுகளையும், ஒழுக்கங்களையும், பண்பாடுகளையும் பிறவற்றையும் நாம் அறியப் பெருங்கருவியாயுள்ளவற்றுள் இஃது ஒன்று. "ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து, சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய, லொருபது பாட்டும்" என்று ஆன்றோர் இதனைச் சிறப்பித்துக் கூறியுள்ளமை இதன் பெருமையை ஒருவாறு விளக்கும்.

இந்நூலுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையுண்டு. அவ்வுரையின்றேல் மூலத்தின் பொருளை அறிவது எளிதாகாது.

இவ்வரிய நூல் நெடுநாட்களாக வழங்கப்படாமல் மறைந்துபோக, இதனை அரிதில் முயன்று கண்டெடுத்து உலகத்துக்கு உதவிய பெருமை காலஞ்சென்ற மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையருடையது. இதன் முதற்பதிப்பை அவர்கள் 1889-ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள்.

**சிறுபாணாற்றுப்படை:** பரிசில் பெறக்கருதிய பரிசிலனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் தனக்குப் பரிசிலளித்த வள்ளலிடம் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்படும் பாட்டு ஆற்றுப்படையாகும். ஆற்றுப்படை - வழிப்படுத்

தல். ஆறு-வழி; படை-படுத்தல். இவ்வாறு ஆற்றுப்படுத்தற்குரியோர் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் முதலியோர்களாவர். பாணவர்-பாடுவோர். இவர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பலராவர்.

பாணர்களுள் சிறுபாணர், பெரும்பாணர் என இருவகையினருண்டென்றும் அவர்களுள் சிறுபாணர்களுள் ஒருவரை ஆற்றுப்படுத்தியதைக் கூறும் பாட்டாதலால் இந்நூல் சிறுபாணாற்றுப்படை என்ற பெயரைப் பெற்றதென்று கூறுவர். இதற்கடுத்த பாட்டும் இதுவும் பாணராற்றுப்படை பாடல்களாயிருக்க இஃது அடிவரையறையில் மற்றதைக் காட்டிலும் சிறியதாயிருப்பதால் இது சிறுபாணாற்றுப்படையென்று பெயர் பெற்றதென்று கூறுவாருமுளர். 'இன்குரல் சீறியா ழிடவயிற் றழீஇ' (சிறு. 35) என்ற அடியினுல் இப்பாடலில் ஆற்றுப்படுத்தப்படும் பாணன் சிறிய யாழை வைத்திருந்தான் என்பது தெரியவருகிறது.

இந்நூல் ஓய்மாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரால் பாடப்பெற்றது. நல்லியக்கோடன் ஓவியர் குடியிற் பிறந்தவன்; ஓவியர் குடி நாகர் வகுப்பினுள் ஒரு பிரிவு என்பர். இவனுடைய ஊர்களென இப்பாடலில் கூறப்பெற்றவை மாவிலங்கை, எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், கிடங்கில் என்பன. மாவிலங்கை என்பது புனல்நாட்டுக்கு வடக்குள்ள அருவாநாடு, அருவாவடதலைநாடு என்ற இரண்டும் சேர்ந்த இடம் என்பர். எயிற்பட்டினம், ஆமூர், வேலூர் என்பவை தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவை; அம்மண்டலத்தின் இருபத்துநாலு கோட்டங்களுள் மூன்றினுக்குத் தலைநகரங்களாக இவை விளங்கின. வேலூர் என்பது உப்புவேலூர் என்று இப்பொழுது வழங்குகிறதென்பர். கிடங்கில் திண்டிவனத்தைச் சார்ந்த ஊர்களுளொன்று; இப்பொழுது இது கிடங்கால் என்று வழங்குகிறது. இதிற் சிதைந்த அகழியும் இடிந்த கோட்டையும் இன்னும் காணப்படுகின்றன.

நல்லியக்கோடன் சிறந்த கொடையாளி. இப்பாட்டில் இவனுடைய கொடையின் பெருமையைப் புகழ்ந்திருப்பதைக் காண்க. இவனைப்பற்றிப் புறநானூற்றிலும் ஒரு செய்யுள் உண்டு.

இப்பாடலைப் பாடியவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார். இடைக்கழிநாடு சென்னைக்குத் தென்மேற்கேயுள்ள ஒரு சிறுநாடு. இஃது உப்பங்கழிகளுக்கிடையே இருத்தலின் இப்பெயர் பெற்றது என்பர். இந்நாட்டில் நல்லூர் என்ற ஊர் ஒன்று இருக்கிறது. நத்தத்தனார் என்ற பெயர் இவருடைய கல்வி மேம்பாடு பற்றி நத்தத்தனார் என்று வழங்கப் பெற்றதாகலாம். 'ந' என்பது சிறப்புப்பொருளைத் தருவதோரிடைச்சொல். இவர் சொற்களைக் கையாளுவதிலும் உவமைகளை அமைப்பதிலும்

சிறந்தவர். கடையெழுவள்ளல்களைப் பற்றி இவர் கூறியனவும், புலவர் வறுமையைப் பற்றிக் கூறியனவும், ஐந்நில வருணனையும் படிக்க இன்பந் தரும் பகுதிகளாகும்.

1. **பணை தோள்**-மூங்கிலாகிய தோள்.

2. **துயல்வரூஉம் ஆரம்**-கிடந்து அசையும் முத்துவடம்.

3–4. **சேய் வரல்**-மலைத்தலையினின்றும் வருதலையுடைய. **உழந்த**-வருந்தின.

'இரண்டு மலையினின்றும் வீழ்ந்து இரண்டு ஆற்றிடைக்குறையைச் சூழ வந்து பின்னர்க் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று. இது மெய்யுவமம். பெருக்காற் கோடுகள் வருந்ததலின், உழந்தவென்றார். இதனாற்பயன், ஆற்றிடைக்குறையில் நின்ற மரம் இளவேனிற் காலத்து மிகவும் பூத்ததாயிற்று.'

4–8. **காழ்**-கருமை. **புடை நெறித்து**-தம்மிடமெல்லாம் **அறல் பட்டு**, **உருப்பு உற்ற**-வெம்மையுற்ற. **பரல்**-பருக்கை. **அயில் உருப்பு அனையஆகி**-வேல் காய்ந்த தன்மையவாய்.

9–11. **கடா உருப்ப**-வெம்மையைச் செலுத்த. **வெம்பதம் பாலை நின்ற பாலை**-வெம்மையையுடைய பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநிலமாகிய.

'பாலைத்தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயன் துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவதொரு காலம்' (தொல். அகத். சூ. 9 உரை).

13–14. **ஐது வீழ் இகு பெயல்**-மெல்லிதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழை. **அருளி**-உலகுக்கு அருளைச்செய்து. மழையைப்போன்ற கூந்தல் என்றது கருத்து.

14–16. **மயில் குளிக்கும் சாயல்**-மயில் மறைதற்குக் காரணமான சாயல். சாயல்-மென்மை ; 'மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறியானும் நுகரும் மென்மை' (தொல். உரி. சூ. 27. உரை).

16–18. **சாஅய் உயங்கு நாய்**-ஒடியிளைத்து வருந்துகின்ற நாய், **உலறிய**-பொலிவழிந்த.

18. **ஈர்ந்து**-இழுக்கப்பட்டு.

20–21. **மால் வரை ஒழுகிய வாழை என சேர்ந்து குறங்குடன் செறிந்த குறங்கின் என இயைக்க.**

22. **ஓதி**-பனிச்சை ; மகளிர் கூந்தலின் ஐம்பால்களுள் ஒன்று.

26-28. வள் கோள் பெண்ணை-பெரிய குலையினையுடைய பனை. இன் சேறு-இனிய செறிந்தநீர்.

28-30. குல்லை அம் புறவு-கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டிலே. முல்லை சான்ற கற்பின்-முல்லை சூடுதற்கமைந்த கற்பினையும். 'கற்பின்மிகுதி தோன்ற முல்லை சூடுதல் இயல்பு.'

31. விறலியர்-விறல்பட ஆடு மகளிர். விறல்-சத்துவம்.

33. கல்லா இளையர்-தம் தொழிலையொழிய வேறுகல்லாத இளையர்.

36-37. நைவளம் பழுநிய நயம் தெரி பாலை-நட்டபாடை என்னும் பண் முற்றுப்பெற்ற இனிமை தெரிகின்ற பாலையாழை.

38. இயங்கா வையம்-உலகம். வள்ளியோர் நசைஇ-பரிசில்தருவாரை விரும்பி.

39. துனிகூர் எவ்வமொடு-தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்தோடே. துயர் ஆற்றுப்படுப்ப-வறுமை உன்னைக்கொண்டு போகையாலே.

41-42. குறைய-துணிய. கயவாய்-பெரியவாய்.

43. பைங் கறி நிவந்த பலவு-பசிய மிளகுகொடி படர்ந்த பலா.

45. மெல்குபு பெயரா-மென்று அசையிட்டு.

46. குளவி-காட்டு மல்லிகை.

47. குடபுலம் காவலர் மருமான்-சேரன்.

47-49. எழூஉ றழ் திணி தோள்-கணையத்தைஒத்த திணிந்த தோள்.

50. வாயில்-கோபுரவாயில்.

51. நறவு-தேன். நுணவம்-நுணாமரம்.

51-52. நுணவத்து அறைவாய் குறு துணி-நுணாமரத்தினது வெட்டின வாயையுடைய குறிய மரத்துண்டை.

53. செப்பம் கடைந்த மார்பின்-செய்மை நிறம் சேர்ந்த மார்பினையுடைய.

54. செய் பூ கண்ணி-நெட்டியாற் செய்த பூவினையுடைய மாலையை.

55. நோன் பகடு உமணர்-வலிய எருதுகளையுடைய உப்புவாணிகர். ஒழுகை-வண்டி ஒழுங்குகளோடு.

56-58. மகாஅர் அன்ன-பிள்ளைகளையொத்த. மடவோர் நகார் அன்னநளிநீர் முத்தம்-மகளிருடைய பற்களையொத்த செறிந்த நீர்மையையுடைய முத்துக்களை. எருந்து-கிளிஞ்சில்.

59. புறம்-இடம்; புறங்கூற்று என்றுமாம்.

64-65. மாறு கொண்ட-மாறுபாட்டாலே கைக்கொண்ட. செழியன்-பாண்டியன்.

67. நனை மகிழ்-தன்னிடத்துத் தோன்றிய மகிழ்ச்சி; வினைத் தொகை.

68. பொய்கை-மானிடர் ஆக்காத நீர்நிலை. அடைகரை-நீரடை கரை.

69. துறு-நெருங்குகின்ற. துணை ஆர் கோதை-இணைதல் நிறைந்த மாலை.

70-71. கோவத்து அன்ன-இந்திரகோபத்தையொத்த. சேர்பு-சேர்ந்து. ஓவம்-சித்திரம். உண்ணும் துறை ஓவத்தை ஒத்திருந்தது என்று கூறப்பட்டது.

73. திருமுகம் அவிழ்ந்த-அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மையையுடைய.

74-76. இதழ் அரக்குத் தோய்ந்தன்ன; செம்பொன் பொதிந்த கொட்டை என்று மாற்றுக.

77. காமரம்-சீகாமரம் என்னும் பண்.

79. குணபுலம்-கிழக்கின் கண்ணதாகிய நிலம். சோழநாடு.

80. உருமு சுவல் சொறியும் எயில்-உருமேறு தன் கழுத்தைத் தினவால் தேய்க்கும் மதில்தலையிலே.

82. நாடா நல்லிசை-ஐயுற்று ஆராயப்படாத உலகறிந்த நல்ல புகழை.

83. ஓடா பூட்கை-தன்னிடத்திருந்தோர் ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோள்.

84. மலைக்கவாஅன்-மலைப்பக்கம்.

87. கல்நாடன்-மலைநாடன்.

88. நறு வீ உறைக்கும் நாகம்-நறிய பூ தேனைத்துளிக்கும் சுரபுன்னை.

91-93. கறங்கும்........ஈந்த-ஒலிக்கும் மணியையும் வெள்ளிய தலையாட்டத்தையுமுடைய குதிரையோடே தனது நாட்டையும், அருளையுடைய நல்ல மொழியையும் பிறர் கேட்டு வியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த (காரி).

94. அழல்-தன்னிடத்துறையும் கொற்றவையுடைய கோபத்தின் மிகுதி.

96-97. நாகம்-பாம்பு ஆல் அமர் செல்வன்-ஆலின் கீழிருந்த இறைவன்; சிவபெருமான்.

98-99. சாவம்-வில். ஆர்வம் நல்மொழி-கேட்டோர்க்கு விருப்பத்தைச் செய்யும் நன்றாகிய சொல்லையுடைய.

99-103. மால்வரை.........அதிகன்-பெருமையையுடைய மலையில் கமழும் பூக்களையுடைய பக்கமலையிலே நின்று அழகுபெற்ற கருநெல்லியின் அமிழ்தின் தன்மை தன்னிடத்தே உண்டான இனிய பழத்தைத் தான் உண்டு உடம்பு பெறாதே ஔவைக்குக் கொடுத்த அதிகன்.

102. உரவுச்சினம்-தன்னிடத்துறையும் கொற்றவையின் வலியினை யுடைய சினம்.

103. அரவக்கடல்-ஆரவாரத்தையுடைய கடல்.

104. நடைப் பரிகாரம்-இல்லறம் நடத்தற்கு வேண்டிய பொருள்கள்.

105-107. முனை-போர்முனையிலே. நளி-செறிந்த.

108. கஞலிய-நெருங்கிய. நாகு முதிர் நாகத்து-இளமையையுடைய முதிர்ந்த சுரபுன்னையையும்.

109. கோடியர்-கூத்தாடுவோர்.

110-111. காரி, ஓரி-குதிரைகளின் பெயர்களும் வள்ளல்களுடைய பெயர்களுமாம். காரி-கரிய குதிரையென்றும், ஓரி-பிடரிமயிரென்றும் கூறு வாருமுளர்.

113. எழு சமம்-தம்மேலே வருகின்ற போர்களை. எழு உறழ்திணி தோள்-கணையத்தை ஒத்த திணிந்த தோள்.

119. தொன்மா இலங்கை-இராவணனது இராசதானியாகிய இலங்கை. கருவொடு பெயரிய-கருவொடு பெயர்த்த இலங்கை-இந்நகரை அமைக்கத் தொடங்கிய காலத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினையுடைய இலங்கை.

122. ஒவியர்-குடிப்பெயர்.

123. களிறு தழும்பு இருந்த அடி-யானைச் செலுத்துதலால் உள தாகிய தழும்பு கிடந்த அடி.

124. சிதறும்-பலர்க்கும் கொடுக்கும். தட கை-பெரிய கை.

125. பல் இயம் கோடியர் புரவலன்-பல வாச்சியங்களையுடைய கூத்தரைப்புரத்தலில் வல்லவன்.

127. தாங்கரு மரபின் தன்னும்-பிறரால் பொறுத்தற்கரிய குடிப் பிறந்தோர்க்குரிய முறைமைகளையுடைய தன்னையும்.

130. திறவா கண்ண-விழியாத கண்ணையுடையவாகிய. குருளை-குட்டி.

132. புனிறு நாய்-அண்மையிற் குட்டிபோட்ட தாய்நாய். புல்லென் அட்டில்-பொலிவழிந்த அடுக்களையில்.

133. காழ் சோர் அட்டில்-கழிகள் கயிறற்று விழுகின்ற அட்டில்.

134. புழல் காளாம்பி-உள்பொய்யாகிய காளான்.

135. ஒடுங்குபசி, என்றும், ஒல்கு மருங்குல் என்றும் கூட்டுக.

136. கிணைமகள்-கிணைவனுடைய மனைவி. கிணைவன்-கிணைப்பறை கொட்டுவோன்.

136. உகிர் குறைத்த வேளை-நகத்தால் கிள்ளிய வேளைக்கீரை.

137. உப்பிலி வெந்ததை-உப்பில்லாமல் வெந்ததை.

138. மடவோர்-வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கூறுவோர்.

140. அழி பசி-அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி.

141. தறுகண் பூட்கை-கடுகக்கொல்லுதலாகிய மேற்கோள்.

144. நயந்து-(மூவேந்தற்பால் பெறும் பரிசிலை) விரும்பி.

146–49. தாழை அன்னம் பூப்பவும்-தாழை அன்னப்பறவை போலப் பூக்கையினாலும்: செருந்தி தமனியம் மருட்டவும். செருந்தி-ஒருவகைக் கோரை; தமனியம் மருட்டவும்-தன்னைக் கண்டாரைப் பொன்னென்று மருளப்பண்ணவும். முண்டகம்-கழிமுள்ளி. கதிர்மணி-நீலமணி. கழா அலவும்-பூக்கையினாலும். நித்திலம் வைப்பவும்-முத்துப்போல அரும்புகையாலும்.

153. மதிலொடு பெயரிய பட்டினம்-எயிற்பட்டினம். ஓய்மானாட்டு நல்லியக்கோடனின் ஊர்களுள் ஒன்று,

155. விரை மரம்-அகில்.

159. பழ படு தேறல்-பழைதாகிய களிப்பு மிகுகின்ற கள்தெளிவை.

160. கிடங்கில்-ஓர் ஊரின் பெயர்.

162. பாணி தூங்கியவரொடு-தாளத்திற்கு ஒப்ப ஆடின மாளிரோடே,

163. குழல்-ஒருவகை மீன்.

164. நனை-அரும்பு.

165. கணம்மயில் அவிழவும்-திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூக்கவும்.

166. கொட்டம்-பனங்குருத்தால் செய்யப்படும் பெட்டி; கொட்டை, நூற்கின்ற கொட்டையும்.

168. கோபம்-இந்திரகோபம்.

169. முல்லை சான்ற முல்லை-(அவரை, காயா, முசுண்டை, காந்தள், கோபம் முதலியன காலமுணர்த்தியும் கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்து) ஆற்றியிருந்த தன்மையமைந்த முல்லைக்கொடி படர்ந்த அழகினையுடைய காட்டிலே.

170. விடர்-முழைஞ்சு. கால்-குதிக்கும். சுடர்-சூரியன். கால் மாறிய-கிரணங்கள் போன.

172. திறல்வேல் நுதியிற் பூத்த கேணி,

173. விறல் வேல் வென்றி வேலூர்-"நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட, அவன் 'இக் கேணியிற் பூவைப் பறித்துப் பகைவரை எறி' என்று கனவிற்கூறி, அதில் பூவைத் தன் வேலாக நிருமித்த கதை கூறிற்று. இதனானே வேலூர் என்ற பெயராயிற்று."

174. உருப்பு அவிர் குரம்பை-வெப்பம் விளங்குகின்ற குடில். வேலூரெய்திற் சூட்டினையுடைய சோற்றை ஆயத்தோடே அமைவரப் பெறுகுவிரென முடிக்க.

இப்பாலை முல்லையும் குறிஞ்சியும் திரிந்ததால் உண்டானது.

180. குட்டம்-ஆழம்.

181. சிரல்-சிச்சிலிப்பறவை.

182. அடை-இலை.

184. நீலம் செ கண் சேவல்-நீல நிறத்தையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு.

186. மருதம் சான்ற மருதம்-ஊடியும் கூடியும் போக நுகரும் தன்மை அமைந்த மருதநிலம்.

187. அருகா-சுருங்காத.

188. ஆமூர்-ஓர் ஊர்.

189. உரன்-அறிவு.

192. மக முறை தடுப்ப-(உழவர் தங்கையாகிய மகடூஉ தான் உள்ளேயிருந்து) தன் பிள்ளைகளைக் கொண்டு நம்மை போகாது தடுக்கையினாலே. பிள்ளைகளை உபசரிப்பதுபோல உபசரித்து விலக்க என்றுமாம்.

193. அவைப்பு-குற்றுதல். அமலை-கட்டி.

194-5. அலவன்-நண்டு. கலவை-பீர்க்கங்காயும் கலந்த கலப்பு.

தண்பணையின் ஆமூரெய்தின் உழவர் தங்கையாகிய மகடூஉத்தடுக்கையினாலே சோற்றைக் கலவையொடு பெறுகுவிரென முடிக்க.

195-97. பேய்மகளின் தோற்றம்.

கரு மறி காதின்-வெள்ளாட்டு மறிகளை அணிந்த காதினையும்.

200. அருவிதுகள் அவிப்ப நீறு அடங்கு தெரு-மதவருவி எழுந்து துகளை அவிக்கையினாலே புழுதியடங்கின தெருவினையுடைய தெரு.

202-205. வாயிலின் பெருமை கூறப்பட்டது.

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன வாயில்-தெய்வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒரு கண்ணை விழித்துப் பார்த்தாலொத்த அவனுடைய கோபுரவாசல்.

211. ஆண் அணி புகுதலும்-வீரர் நின்ற அணியிலே சென்று அவ் வணியைக் குலைத்தலையும்.

ஆணென்றது ஆண்பாலையே யுணர்த்துமேனும் அணி புகுதலென்ற தனால் ஈண்டு வீரரை யுணர்த்திற்று.

அழி படை-தனது கெட்டபடை.

212. வாள் மீ கூற்றத்து வயவர்-வாள் வலியாலே மேலாகிய சொல்லை யுடைய வீரர்.

216. அறிவு மடம் படுதலும்-தான் கூறுகின்றவற்றை உணரும் அறிவில்லாதார் மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தலையும்.

217. வரிசை அறிதலும்-பரிசிலருடைய தரம் அறிதலும்.

219. பால் மதி போல-பால் போலும் ஒளியையுடைய கலைநிறைந்த மதிபோல. கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு ஈண்டு மதி உவமை யாயிற்று.

221–9. யாழின் அமைதி.

221. ஊகம்-கரியகுரங்கு.

222. திவவு-வார்க்கட்டு.

223. மணி நிரைத்தன்ன வனப்பின்-இரண்டு விளிம்பும் சேரத் தைத்து முடுக்கின ஆணிகளாலே மணியை நிரைத்து வைத்தாலொத்த அழகையும்.

224. வயிறு-பத்தரின் நடு. அகளம்-பத்தர்.

226. பச்சை-போர்வை. பச்சை-தோல். பத்தரின் போர்வை தோலாலானது.

226-27. தேன், அமிழ்து என்பன யாழோசையின் இனிமையைக் கூற வந்தன.

பச்சையோடே வாயடைக்கப்பட்டு வனப்பினையும், திவவினையும், அகளத்தினையும், நரம்பினையுமுடைய இன்னியமென முடிக்க.

229–30. குரல்குரலாகப் பண்ணி-செம்பாலையாக வாசித்து.

231. முகிழ்த்த கை-குவித்த கை.

232. இளையோர்-வீரர்; மகளிருமாம்.

233. ஏரோர்-எரியினையுடைய குடிமக்கள். நிழன்ற-நிழல் செய்த. கோல்-செங்கோல்.

234. அழன்ற வேல்-வெம்மை செய்த வேல்.

236. காம்பு சொலித்தன்ன அறுவை-ஆடையை உரித்தாலொத்த உடை.

237. பாம்பு வெகுண்டு அன்ன-பாம்பின் விடமேறி மயக்கினாற் போல.

238. கா எரி ஊட்டிய-அருச்சுனன் காண்டவவனத்தை நெருப்புண்ணும்படி செய்த. தூணி-ஆவநாழிகை; அம்பறாத்தூணி.

239. புகழோன் தன்முன்-அருச்சுனன் முன்னவனான வீமசேனன்.

241. பனுவல்-மடைநூல். வீமசேனன் இயற்றிய ஒரு மடைநூலைக் குறித்தது.

242. கோள்மீன்-கிரகங்கள்.

நீ சிலமொழியாவளவை, விரும்புவன பேணி, உடீஇ, நல்கி, அடிசிலைக் கலத்தேயிட்டுத் தான் நின்று ஊட்டி என்க.

246. தெவ்வு புலம் அசற்றி-பகையைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணி.

248. நயவர்-விரும்பி வந்தவர்.

249. வயவர்-படைத்தலைவர்.

தன் படைத்தலைவர், குறுநில மன்னரையும், அரசரையும் அழித்து நயவர்க்கும் பாணர்க்கும் கொடுத்து மிக்குக் கொண்டுவந்த நிதியம் என்க.

250-51. பருவ வானம்-கூதிர்க்கால வானம். ஊர் கொண்டாங்கு-பரத்தலைக் கொண்டாற்போல.

252-53. குறடு-அச்சுக்கோக்குமிடம். அயில்வாய்-கூரியவாய்; சூட்டு.

254-55. ததர்நனைசிதர்பிணி அவிழ்ந்த தோற்றம்-செறிந்த அரும்புகள் வண்டிற்குப் பிணியவிழ்ந்த தோற்றரவுபோல.

ததர்-கொத்துமாம். சிதர்-சிந்துதலுமாம்; சிச்சிலியுமாம்.

256-58. கருந்தொழில்-வலியதொழில். கை வினை-கையாற் செய்யும் உருக்கள். போர்வை-பலகை.

தேர்த்தட்டு வெளி மறையப் பாவின பலகையைப் போர்வை என்றார். அதன்மேலே சுற்றுச் சுவராகப் பலகையாற்செய்த சுவரைப் பாகர் என்றார். பாகரையுடைய தேர் பாகராயிற்று; ஆகுபெயர்.

நேமியோடே போர்வையையுடைய பாகரென முடிக்க.

259-60. மா-குதிரை, பாண்டில்-நாரையெருது. வலவன்-பாகன். துயல்-ஆடுகிற.

நிதியத்தோடே பாகரோடே வலனோடே பாண்டிலேயும் பரிசிலேயும் தரீஇ அவன் அன்றே விடுக்கும் என முடிக்க.

264–65. துணி மழை-தெளிந்த மேகம். கலாபம்-தோகை. கோடு-மலை. சிறிதுநீர் உட்கொண்டு பக்கம் வெள்ளிய மாசாயிருத்தலின், மேகம் மஞ்சைப் பரப்பி என்றார்.

266. எற்று அரு உரும் எறிந்து இறந்த சென்னி-எறுதற்கு அரிதாகிய உருமேறு தான் எறுதற்காக இடித்து வழியாக்கிப் போன சிகரம்.

267–69. செல் இசை நிலைகிய பண்பு-பிறரிடத்து நில்லாமற் போகின்ற புகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணம்.

269. நயந்தனிர்-விரும்பி.

"முதுவாய் இரவல! பெருமகன், புரவலனாகிய நல்லியக்கோடனை நயந்த கொள்கையோடே முன்னாள் சென்றனமாக, இந்நாள், அழிபசி வருத்தம் வீட, யானையோடே தேரெய்தி யாம் அவணின்றும் வருகின்றேம்; இனி நீயிரும் மூவேந்திரடத்துச் செல்வீராயின் வஞ்சியும் வறிது; மதுரையும் வறிது; உறந்தையும் வறிது; அதுவன்றி, எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் ஒரு தான் தாங்கிய குறிஞ்சிக் கோமானாகிய நல்லியக்கோடனை நயந்தனின் செலின், வழியிற் பெறுமவற்றை யாம் கூறக் கேண்மின்; பட்டினம்படரின் வயின் வயிற்பெறுகுவிர்; அதன் பின்னர் வேலூர் எய்தின் அமைவரப் பெறுகுவிர்; அதன் பின்னர் அவன் ஆமூரெய்திற் கலவையொடு பெறுகுவிர்; அவற்றைப் பெற்றபின், அவன் மூதூர் சேய்த்துமன்று; சிறிது நணியதுவேயாயிருக்கும்; ஆண்டுச்சென்று, முன்னர் அவன் கடைவாயிலைக் குறுகிப் பின் அறிந்தோரேத்த, வயவரேத்த, அரிவையரேத்த, பரிசிலரேத்த, இருந்தோனை யணுகிப் பாடுதுறைமுற்றுதற்கு, இன்னியத்தைப் பண்ணிக் "கையினை! மார்பினை! கோலினை! வேலினை!" என்று நீ சில மொழியா அளவை அவன் நீ விரும்புவன பேணி, உட்கி, நல்கி, அடிசிலைக் கலத்தேயிட்டுத் தான் நின்று ஊட்டி; நிதியத்தோடே, பாகரோடே, வலவனோடே பாண்டிலையும் பரிசிலையும் தரீஇ அன்றே விடுக்கும்" எனவினை முடிவு செய்க.

## II. புறநானூறு

புறநானூறு என்பது கடைச்சங்கப் புலவர்கள் அருளிச்செய்த எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத் தொகையாவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றுள் ஒவ்வொன்றும் பலராற் செய்யப்பட்டுத் தொழில், அளவு, பாட்டு, பொருள் என்பனவற்றுள் ஒவ்வொன்றால் தொகுக்கப்பட்டமையால் இவை தொகை யெனப்பட்டன. இவற்றுள் புறநானூறு என்பது புறப்பொருளைக்கொண்ட நானூறு பாக்களையுடைய தொகையாகும். இது பொருளால் தொகுக்கப்பட்டது; இங்கே பொருளென்றது புறத்தை. அகம், புறம் என்ற இருவகைப் பொருள்களுள் புறமாவது அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கமாகும்:

இந்நூலுக்குப் புறப்பாட்டென்றும் புறம் என்றும் வேறு பெயர்கள் உண்டு.

புறப்பொருள் வெட்சி முதலிய திணைகளும், ஒவ்வொரு திணைக்கும் பல துறைகளும் ஆகிய பிரிவுகளை உடையது. திணை-ஒழுக்கம். துறை-பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்குரிய வழி.

இத்தொகை 400 பாடல்களைப் பெற்றிருப்பினும் இவற்றைப் பாடிய சான்றோர் பலரும் ஒரே காலத்தவரல்லர்; அவர்கள் காலத்தாலும், இடத்தாலும், தொழிலாலும் வெவ்வேறினராவர்.

இந்நூலால் பண்டைக்காலத்துத் தமிழகச்செய்திகள் பலவற்றை நாம் அறிகிறோம். தமிழகத்தின் பண்டை வரலாற்றை அறிய இந்நூலைவிடச் சிறந்த வாயில் வேறொன்று இல்லை என்னலாம். பிற்காலத்து நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் இந்நூலின் சொல்லையும் பொருளையும் கையாண்டிருப்பதோடு இப்பாடல்கள் பலவற்றின் அருமை பெருமைகளை எடுத்துப் பாராட்டியுள்ளனர்.

இதற்குச் சிறந்த பழையவுரை யொன்றுண்டு; இவ்வுரைக்கு முன்னும் ஓர் உரை இருந்தது என்பதும் புலனாகிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நூல் தமிழகம் செய்த துர்ப்பாக்கியத்தால் கற்பாரற்றுப் போயிற்று. நூல் முழுமையும் கொண்ட ஏடுகள் கிடைப்பதும் அரிதாயிற்று. இந்நிலையில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூலில் எட்டுப்பிரதிகளை அரிதில் தேடிக் கண்டுபிடித்து, செல் முதலியவற்றால் அழிந்தன போக எஞ்சிய பகுதிகளை உரையுடனும் தாம் எழுதிச்சேர்த்த விளக்கங்களுடனும் 1894-இல் பதிப்பித்து உலகுக்கு அருளினார்கள்.

இங்கு நமக்குப் பாடமாக அமைந்துள்ள புறப்பாடல்கள் பன்னிரண்டும் கோவூர் கிழார் என்ற சங்கச் சான்றோர் இயற்றியவை. கோவூர் கிழார் வேளாண் மரபினர்; இவர் சோழர் மரபினரால் பெரிதும் பாராட்டப் பெற்றார். இவர் பல கலைகளிலும் வல்லவர்; கேட்போர் மனத்தைப் பிணிக்கும் வண்ணம் பாடல்கள் இயற்றுவதில் ஆற்றல் மிகுந்தவர். அரசர் பால் குற்றம் நிகழ்ந்துழி அக்குற்றத்தை அவர் உணர்ந்து திருத்தமடையும் வண்ணம் இவர் பேசுவார்; அரசர்களிடையே சீற்றம், பகைமை இவை முதிருமாயின் இவர் இடையே புகுந்து நயந்து சொல்லவேண்டிய இடங்களில் நயந்து சொல்லியும் இடித்துப் பேசவேண்டிய இடங்களில் இடித்துக் கூறியும் அவர்களின் சீற்றத்தையும் பகைமையையும் தணிவித்து அவர்களுக்கிடையே நின்று சந்து செய்விப்பார். இவருடைய உவமைகள் சாலப் பொருத்தமானவை. உபகாரிகளின் பண்புகளைப் பாராட்டுவதிலும் அவர்களுடைய வீரச்செயல்களை விளக்குவதிலும் இவருக்கு நிறைந்த ஆற்றல் உண்டு.

இப்பாடல்களில் இவரால் பாடப்பெற்ற அரசர் மூவர்; அவர்கள் சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி என்ற மூவராவர்.

இவர்களுள் சோழன் நலங்கிள்ளி என்றவன் சிறந்த வீரன்; பாண்டிய நாட்டு எழரண்களை அழித்து அவற்றில் தனது புலிக்கொடியை நாட்டினன். இவன் ஆவூரையும் உறையூரையும் ஆண்ட நெடுங்கிள்ளியுடன் போரிட்டு அவன் ஊர்களை முற்றுகையிட்டான். இவ்விருவரையும் புலவர் சந்து செய்து வைத்தார்.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனும் உறையூர்க்கு உரியவனாகக் கூறப்பெற்றிருக்கின்றமையின் இவன் நெடுங்கிள்ளிக்கு நெருங்கிய உறவினன் என்று கொள்ளலாம். இவனைப் பல புலவர்கள் பாடியிருக்கின்றனர். இங்கு அமைந்துள்ள ஒரு பாடலில் கோவூர் கிழார் இவன் பகைவர் நாட்டினை வருத்தும் தன்மை கூறப்பட்டுள்ளது.

காரியாற்றில் துஞ்சின நெடுங்கிள்ளி காரியாற்றில் இறந்த காரணத்தால் இவன் இப்பெயர் பெற்றான். இவன் இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றர் என்றெண்ணி அவரைக் கொல்லப்போகுந் தருணத்தில் கோவூர் கிழாரால் தடுக்கப்பெற்றான்.

ADU AR No. 11202 MADR

இப்பாடல்களுள் அமைந்துள்ள திணைகளும் துறைகளும்.

I வஞ்சித்திணை (4: 6: 7: 8:) அரசன் வஞ்சிப்பூவைத் தலையிலே சூடிப் பகைவருடைய பூமியைக் கைக்கொள்ளக் கருதுதல்.

துறைகள்

கொற்றவள்ளை (4) அரசனுடைய புகழைச்சொல்லி அவன் பகைவர் நாடு கெடுதற்கு வருந்துதல்.

துணைவஞ்சி (6: 7: 8:) பிறரை வெல்லவாவது கொல்லவாவது துணிந்து நிற்கின்றானொருவனைச் சில கூறிச் சந்து செய்வித்தல்.

II வாகைத்திணை (1: 3: 5: 10:) வாகைப்பூவைத் தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல்.

துறைகள்

அரசவாகை (1: 3: 5:) அரசனது இயல்பைக் கூறுதல்; அரசனது வெற்றியைக் கூறுதலும் ஆம்.

மழபுலவஞ்சி (1) பகைவருடைய வேற்றுப்புலத்தைக் கொள்ளையூட்டி அவர்கள் வீடுகள் பாழ்படக் கவர்ந்த தொழிலைச் சொல்லுதல்; அரசனொருவன் பகைவர் நாட்டை எரியூட்டிக் கொள்ளைகொண்டு அழித்ததனைச் சிறப்பித்துக் கூறுதலும் ஆம்.

முதின்முல்லை (10) வீரர்க்கல்லாமல் அம்மறக்குடியிற் பிறந்த மகளிர்க்கும் கோபமுண்டாதலை மிகுத்துச் சொல்லுதல்.

III பாடாண்டிணை (2: 9: 11: 12:) ஒருவனுடைய கீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்து சொல்லுதல்.

துறைகள்

இயன்மொழி (2) இயல்பைக் கூறுதல்.

கடைநிலை (11) வாயிலின்கண் நிற்றல்.

பாணாற்றுப்படை (9) மலைவழியிற் பாணனை வழிப்படுத்துதல்.

வாழ்த்தியல் (12) தலைவனை வாழ்த்துதல்.

1

1. மரபில்-முறைமையால்.

1–2. அறத்தின் உயர்வைப் பற்றி, "முனிவரால் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளுமின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றினும் வலியுடைத்து" என்று பரிமேலழகர் கூறுகின்றார். (குறள் 4-ஆம் அதிகார அவதாரிகை).

3. இருகுடை-சேரபாண்டியருடைய இருகுடைகள்.

4. உருகெழு மதி-நிறம் பொருந்திய திங்கள். சிவந்து-ஓங்கி. சேண்-சேய்மைக் கண்ணே.

5. வேட்டம்-வேட்கை.

6. ஒல்லாய்-உடன்படாய்.

7. நுதிமுகம் மழுங்க-(கோட்டினது) நுனை முகம் தேய.

12. வேற்றுப்புலம்-பகைப்புலம்.

14. மான்-குதிரை.

15. அலமந்து-சுழன்று.

17. வடபுலத்து அரசு துஞ்சாக்கண்ண என்று மாற்றுக. இது, உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்ட வழுவமைதி. "இஃது அரசியற் றன்மையை உணர்த்தற்பாலது அத்தன்மையையுடைய மக்களையுணர்த்தி உயர்திணையாய் ஈண்டு அஃறிணையான் முடிதலின் வழுவாயிற்று" என்று கூறுவர் மயிலைநாதர்.

இச்செய்யுளை வஞ்சித்திணைக்குரிய இயங்குபடையரவமென்னும் துறைக்கு மேற்கோளாகப் பிறர் காட்டுவர்.

2

1. கடம்பின்-சுற்றத்தினுடைய. நிறையாக-நிறைக்கும் பொருட்கு விலையாக.

2. பூவாவஞ்சி-கருவூர். ஒன்றோ, எண்ணிடைச்சொல்.

3. வண்ணம்-நிறமுடைய கலவை. நீவிய-பூசப்பட்ட. இறை-சந்து.

4. பூவிலை-பூவிற்கு விலை.

7. மதி-அறிவு.

8. வேட்கோ-குயக்குலத்தோர். தேர்க்கால்-தேர்க்கால் போன்ற திகிரி.

9. குரூஉத்திரள்-கனத்த திரள்.

10. குடுமித்து-முடியையுடையது.

அவன் கொண்ட குடுமித்து, இந்நாடு; ஆதலால், வஞ்சியையும் தருகுவன்; மதுரையையும் தருகுவன்; ஆதலால், பரிசின் மாக்காள்! நாம் எல்லாம் அவனைப் பாடுகம் வம்மினோ எனக்கூட்டுக.

3

1. கதநாய்-சினம் பொருந்திய நாய்.

2. வட்டி-கடகப்பெட்டி. ஆய்மகள்-இடைமகள்.

3. தசும்பு-மிடா.

4. எரின் வாழ்நர்-உழவர். பேர் இல் அரிவைபர்-பெரிய இல்லின்கண் மகளிர். முகந்தனர் கொடுப்ப-பலர்பாற்படர்க்கை வினைமுற்று வினையெச்சமாயிற்று.

7. தென்னம் பொருப்பு-தென்றிசைக்கண்ணுள்ள பொதியின்மலை.

8. எழெயிற் கதவம். எழுமதிலின்கணுள்ள கதவுகள்; எழுபொன்கோட்டை என்று இக்காலத்தில் வழங்கும் ஊராதல் கூடும்.

10. வஞ்சி-மேற்செலவு.

11. தாதெரு மறுகு-தாதாகிய எருப்பொருந்திய மறுகு.

14. அமலை-திரள். பாண் கடும்பு அருத்தும்-பாணர் சுற்றத்தை ஊட்டும்.

16. தைஇய-புனைந்து செய்யப்பட்ட. அல்லிப்பாவை ஆடு வனப்பென்றது, ஆண்கோலமும் பெண்கோலமுமாகிய அவ்விருவரும் ஆடும் கூத்தை.

22. விழவு-சிறுசோற்று விழவு. சோற்றைத் தயிர் முதலியவற்றினோடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர் ஒவ்வொருவருக்கும் கொடுத்து மகிழ்தல்.

4

1. காலன்-கூற்றுவன்.

4. உற்கம் உற்கவும்-எரிகொள்ளி எரிந்து வீழவும்.

6. கனலி-ஞாயிறு. துற்றவும்-செறிந்து தோன்றவும்.

9. களிறு-பன்றி. காழகம் நீப்பவும்-ஆடையைக் களையவும்.

10. படை-படைக்கலம்.

உற்கம் முதலிய நான்கும் உற்பாதமாய் நனவிற் காணப்பட்டன; எயிறு நிலத்தில் வீழ்தல் முதலியன கனவிற் காணப்பட்டன.

12. முன்ப-வலியையுடையோய்.

12–15. மனைவியர்க்குத் தமது வருத்தந் தோன்றாமல் கணவர் மறைக்கும் திறன் கூறப்பட்டது.

வேந்தே, முன்ப, வளவ, நீ இத்தன்மையையாதலால், நிற்சினைஇயோர்நாடு, பைதன்மாக்களொடு, பெருங்கலக்குற்றதெனக் கூட்டுக.

மன்னன் புகழும் ஒன்னார்நாடழிபிரங்கியதும் கூறுதலால் கொற்றவள்ளையாயிற்று.

5

1. இரும்பிடி-கரியபிடி. தொழுதி-ஈட்டம்.

2. நெய்ம்மிதி கவளம்-நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளம்.

3. திருந்து அரைநோன் வெளில்-திருந்திய மருங்கையுடைய வலிய கம்பம்.

4. கைய, பலவின்பாற் படர்க்கை வினைக்குறிப்புமுற்று வினையெச்சக் குறிப்பாயிற்று.

7-8. நீரில்லாத தொழில்புனைந்த நல்ல மனையிடத்துள்ளார் வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்சவும்.

10. துன்னரும் துப்பு-நெருங்குதற்குஅரிய வலிமை.

11. அறவை-அறத்தையுடையையாயின்.

12. மறவை-வீரத்தையுடையையாயின்.

6

1. பனைத்தோடு மலைந்தோன்-சேரன்.

2. வேம்பின் தெரியலோன்-பாண்டியன்.

10. மெய்ம்மலி உவகை-உடம்பு பூரிக்கும் உவகை.

இது, சந்து செய்தலால் துணைவஞ்சியாயிற்று.

7

1-2. புறவின் அல்லல் விடுத்தோன்-சிபி.

3. உண்மார்-உண்ணும் பொருட்டு.

5. அழாஅல்-அழுகை. அழால் களிறு கண்டு மறந்த எனக் கூட்டுக.

7. விருந்திற் புன்கண்-புதிய வருத்தம்.

8. வேட்டது செய்ம்மே-விரும்பியதைச் செய்வாயாக.

நீ புறா முதலாயினவற்றின் துயர் தீர்த்தற்கு உயிர்க்கொடை பூண்டோன் மருகனாதலானும், இவர் கற்றோர் வறுமையஞ்சிப் பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர் மரபினுள்ளாராதலானும், இவர், நின்னால் அருளத்தகின் அல்லது முனியத்தகார் என்பதாம்.

இவரைக் கொல்லாமற் சந்து செய்வித்தலின் துணைவஞ்சியாயிற்று.

8

1. வள்ளியோர்-வண்மையுடையோர்.

3. வடியா நாவின்-திருந்தாத நாவால்.

6. வரிசை-சிறப்பு.

7. அண்ணாந்து ஏகி-தலையெடுத்து நடந்து.

11. செம்மல்-தலைமை.

பரிசில் வாழ்க்கை, நும்மோரன்ன செம்மலுமுடைத்து; ஆதலால், நண்ணார் நாண இனிதொழுகினல்லது, பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்று; எனக்கூட்டுக.

கோவூர் கிழார் தாமும் பரிசில் வாழ்நருள் ஒருவராதலின் 'வடியா நாவின் வல்லாங்கு பாடி' என்று பணிந்து கூறினர்.

9

1. தொடை-நரம்பு. சீறியாழ்ப்பாணர்-சிறிய யாழையுடைய பாணர்.

2. காழ்-நாராசம். உடுக்கையின் கண்களின் வரிசை யாமைகளை நாராசத்திலே கோத்தாற் போன்றிருந்தது.

3. கிணை-உடுக்கை.

4. இவண் தணிக-இவ்விடத்தே ஆறிப்போவீராக.

6. தைஇத்திங்கள்-தைமாதத்தில்.

7. கூழ்-சோறு.

11. நாற்ற நாட்டத்து அறுகால் பறவை-மணத்தை ஆராயும் ஆராய்ச்சியையுடைய வண்டு.

12. ஞாங்கர்-மீது. ஊதும்-நுகரும்.

16. செல்வையாயின் செல்வையாகுவை-செல்வாயானல் செல்வத்தையுடையையாவை. செல்வு-செல்வம்.

17. ஒய்தல்-செலுத்துதல்.

10

1–3. பொற்கம்பியினை ஒத்த முறுக்கு அடங்கின நரம்பினையும், மின்னலையொத்த தோலினையும், மிஞிறென்னும் வண்டுச் சாதியின் குரல் போன்ற ஓசையையுமுடைய சிறிய யாழ்க் கல்வியின் நன்மை நிறைந்த விருப்பம் வந்த பாண. பச்சை-தோல். நயம்-நன்மை.

4. எஃகம்-வேல்.

5. வேந்து ஊர் யானை-வேந்தன் ஏறிச்செலுத்துகின்ற யானை.

6–7. அரசன் கோபித்தெறிந்த வேல் என் தலைவனது சந்தனம் பூசிய மார்பின் உள்ளே சென்றது.

அகலம்-மார்பு.

8–9. நம் பெருவிறல், தன் மார்பின் உட்சென்ற அவ்வொளி பொருந்திய வேற்படையைப் பறித்து எடுத்துச் செலுத்தி ஓட்டிய காலத்து.

விறல்-வலியை உடையவன்.

10–11. பிடி-பெண்யானை; அது வேந்தனூர்தி. அவ்விடத்துப் புல்லிய நடையையுடைய பிடி நாணக் களிறுகளெல்லாம் புறங்கொடுத்தோடின.

இதனை ஆரமரோட்டல் என்னும் துறைக்கு மேற்கோள் காட்டுவர் நச்சினர்க்கினியர்.

11

1. கொண்டி-பொருளின் மிகுதி

2. மலிர்-நீரூற்று.

3. பொருநன்-உவமிக்கப்படுபவன்.

6. பிறர்ப்பாடி-பிறரைப்பாடி.

9. சோற்றான்-சோற்றோடு.

12. எழ்மணி-எழுச்சியையுடைய மணி. உத்தி-படப்பொறி.

13. கட்கேள்வி-கண்ணாற்கேட்டல். கவைநா-பிளவுபட்ட நாக்கு.

15. வறன்-வறுமை. வழங்கு வாய்ப்ப-பிறர்க்கு யாம் கொடுத்தல் கைகூடும்படி.

14–15. வறுமைக்கு அராவின் விடம் உவமம்.

16. மதி, அத்தை-அசைநிலைகள்.

18. கிடைக்காழ்-நெட்டியின் காம்பு.

19. சிறுகோல்-கிணையடிக்கும் சிறுகோல்.

22. வென்ற தேர்-ஏனையோரை வென்ற தேரையுடைய. பிறர்-அயலரசர் வேத்தவையான். அரசவைக்கண்.

12

1. கயம்-பள்ளமான நீர்நிலை.

3. வறை-வறையல்; ஒருவகை உணவு.

4. சூடு-சுடப்பட்ட இறைச்சி.

6. ஆன்பயம்-பசுப்பால்.

7. உண்ட வியர்ப்பு-உண்டமையாலுண்டான வேர்வை.

12. புறவு-முல்லைநிலம்.

13. குரும்பு-சிற்றரண்கள்.

14. கால்தந்த-காற்றால் கொண்டு வரப்பட்ட.

15. சினை-கிளை. நிலைக்குந்து-நிலைக்கும்.

17. உமண்-உப்பு விற்குஞ்சாதி.

19. பொரா-ஒப்பில்லாத.

24. வெள்ளி-சுக்கிரன்.

25. வேண்டியது-யாம் வேண்டியதை.

# III திருக்குறள்

பதினெண்கீழ் கணக்கு நூல்களைச் சார்ந்த திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பெற்றது. தமிழர் வாழ்க்கையின் சிறப்பைத் தெரிவிப்பதற்குச் சிறந்த கருவியாயிருப்பதிலும் பிற ஆசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் கையாளப்படுவதிலும் இதற்கு இணையான பிறிதொரு நூல் தமிழில் இல்லை. மானிடர் யாவர்க்கும் எல்லாக் காலத்துக்கும் ஒவ்வத்தக்க உண்மைகளை எடுத்துரைப்பதால் இஃது உலகப் பொது நூலாகவும் விளங்குகிறது.

இந்நூல் அறம், பொருள், இன்பமென முப்பால்களையுடையது. மானிடன் இவ்வுலகில் நுகரக்கூடிய முப்பேறுகளுள் இடையிலுள்ள பொருளே பிற இரண்டினையும் பயக்குமாதலால், அதுவே சிறைப்புடையது என்பது சொல்லாமலே விளங்கும். பொருட்பாலை ஆசிரியர் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப் படுத்தியுள்ளார். அவற்றுள் அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதொழிந்தவற்றைப் பதின்மூன்றதிகாரங்களில் ஆசிரியர் அமைத்துள்ளார். அதுவே ஒழிபியலாகும். அவ்வியலிலில் கடைசியிலுள் ஆறு அதிகாரங்கள் இங்குப் பாடமாய் அமைந்துள்ளன. பின்னுள்ள குறிப்புரைகள் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியவை.

## 1. குடிசெயல் வகை.

அஃதாவது, ஒருவன் தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் திறம்.

1. கைதூவேன் - கையொழியேன். பீடு உடையது - பெருமை உடையது.

கருமம் செய-(தன்குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமையின் எண்ணிய) கருமம் செய்தற்கு. "தன் கருமம் செய்ய வென்றும் பிறர் கருமம் செய்ய வென்றும் உரைப்பாரும் உளர்; தன் கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் தலையன்மையானும் அவை உரையன்மை அறிக" என்பர் பரிமேலழகர்.

2. ஆள்வினை-முயற்சி. ஆன்ற அறிவு-இயற்கையறிவு, செயற்கையறிவோடு நிரம்பிய அறிவு. நீள் வினையான்-இடையறாத கருமச் செயலால். நீளும்-உயரும்.

இவை இரண்டு பாட்டாலும் குடிசெயற்குக் காரணம் கூறப்பட்டது.

3. மடிதற்று-ஆடையை இறுக உடுத்து; முன் நடப்பவர் செயல் கூறப்பட்டது.

4. தாழாது உஞற்றுபவர்க்கு-விரைந்து முயல்வார்க்கு. குடி ஆகுபெயர்.

இவை இரண்டு பாட்டாலும் தெய்வம் துணையாதல் கூறப்பட்டது.

5. குற்றம்-அறநீதிகட்கு மறுதலையான செயல்கள். குடி செய்து-குடியை உயரச்செய்து. உலகு-உலகத்தார்.

6. இல்லாண்மை-குடியினை ஆளும் தன்மை; குடியிலுள்ளாரை உயரச்செய்து தன் வழிப்படுத்தல்.

7. அமரகம்-களம். தமரகத்தும்-குடியின்கண் பிறந்தார் பலருள்ளும். பொறை-பாரம்.

இம்மூன்று பாட்டாலும் குடி செய்வார் எய்தும் சிறப்பு கூறப்பட்டது.

8. பருவம்-காலநியதி. மடி செய்தல் வெயில், மழை, பனி என்பன உடைமை நோக்கிப் பின்னர் செய்தும் என்று ஒழிந்திருத்தல். மானம் கருதுதல், 'இக்குடியில் உள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானே?' என்று உட்கோடல்.

9. குற்றம் மறைப்பான்-குடியைத் துன்பங்கள் உறாமல் காக்க முயல்வானது. உடம்பு இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ; குறிப்பு மொழி.

இவை இரண்டு பாட்டாலும் குடி செய்யுமியல்பு கூறப்பட்டது.

10. நல் ஆள்-நல்ல ஆண் மகன். குடி-குடியாகிய மரம்; குறிப்பு உருவகம். அவரில்லாத குடிக்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

## 2. உழவு.

குடியுயர்தற்கேது வென்ற ஆள்வினை வகையாகலின், குடிசெயல் வகையின் பின் வைக்கப்பட்டது.

1. சுழன்றும்-பிற தொழில்களைச் செய்து திரிந்தும். உழந்தும்-வருத்தமுற்றும். ஏர்-ஏருடையார்; ஆகு பெயர்.

இதனால் உழவின் சிறப்பு கூறப்பட்டது.

2. அஃது ஆற்றாது-உழுதலைச் செய்யமாட்டாது. ஆணி-அச்சாணி. கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி போறலின், ஆணி என்றார். ஏகதேசவுருவகம்.

3. வாழ்வார்-தமக்குரியராய் வாழ்கின்றவர். பிறர் தமக்குரியரல்லர் என்பது கருத்து.

4. அலகு-கதிர்; நெல்; ஆகு பெயர். நீழலவர்-தண்ணளியுடையோர், இரப்போர்க்கெல்லாம் ஈதல் நோக்கிக் கூறினர். ஒற்றுமை பற்றிக் குடைநிழல் என்றார். இவை ஆகு பெயர்கள்.

5. கை செய்து-உழுதலைச் செய்து. மாலையவர் இயல்பாகவுடையார். கை செய்தூண் மாலையவர் என்பது ஒரு ஞான்றும் அழிவில்லாத செல்வமுடையர் என்னும் ஏதுவை உட்கொண்டு நின்றது.

6. கை மடங்கின்-உழவினைச் செய்யாது கை மடங்குமாயின். விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு-யாவரும் விழைவதான உணவும் யாம் துறந்தேம் என்பார்க்கு; ஒன்றனை மனத்தால் விழைதலும் ஒழிந்தேம் என் பார்க்கு.

இவ்வைந்து பாட்டாலும் அதனைச் செய்வாரது சிறப்பு கூறப் பட்டது.

7. தொடி-ஒரு பலம். கஃசு-சிறியதொரு நிறுத்தலளவை. உணக் கின்-காயவிடின். பிடித்து எருவும் ஒரு பிடியின்கண் அடங்கிய எருவும்.

8. ஏரினும்-உழுதலினும். கட்டபின்-களைகட்டால். காத்தல்-பட்டி முதலியவற்றால் அழிவெய்தாமல் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்கால்யாத்தல், காத்தல் என்றிம்முறையவாய் இவ்வைந்தும் வேண்டுமென்பதாம்.

9. கிழவன்-நிலத்திற்கு உரியவன். செல்லான்-நிலத்திற்குச் செல் லான். புலந்து-வெறுத்து, செல்லுதல்-ஆகு பெயர்.

இவை மூன்று பாட்டாலும் உழவு செய்யுமாறு கூறப்பட்டது.

10. அசைஇ-மடிந்திருப்பாரை.

உழவு செய்யாதவழி படும் இழுக்கு கூறப்பட்டது.

### 3. நல்குரவு.

அஃதாவது, நுகரப்படுவன யாவும் இல்லாமை.

1. இன்மை-வறுமை. இன்னாதது-இனிமையற்றது; துன்பம் செய்வது.

2. பாவி; தன்னை யாக்கினானை இருமையும் கெடுத்தற் கொடுமை பற்றி, பாவி என்றார். மறுமை, இம்மை யென்பன ஆகு பெயர்.

3. நசை-ஆசை. தொல் வரவு-பழைய குடிவரவு; நசையில வழி நல்குரவும் இல்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியில் தொல்லோர்க்கில்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற் களையும் உளவாக்கலான் அவ்விரண்டனையும் ஒருங்கு கெடுக்கும் என்றார்.

4. இன்மை சோர்வுதரும் என மாற்றுக. இளி வந்த சொல் இளி வருவதற்கேதுவாகிய சொல்; அஃதாவது, 'எமக்கீய வேண்டும்' என்றல். சோர்வு-தாமுறுகின்ற துன்பமிகுதி பற்றி ஒரோவழித் தம் பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

5. குறை, இசை நிறை. சென்று படும்-வந்து விளையும்; செலவு விரைவின்கண் வந்தது. துன்பமும் தானும் உடனே நிகழ்தலின் நல் குரவைத் துன்பமாக்கியும், அத்துன்பம் அடியாகச் செல்வர் கடை நோக்கிச் சேறல் துன்பமும், அவரைக் கண்டால் துன்பமும், கண்டால் மறுத்துழி

நிகழும் துன்பமும், மருவழியும் அவர் கொடுத்தது வாங்கற்றுன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டல் துன்பமும் முதலாயின நாடோறும் வேறு வேறாக வருதலின் எல்லாத் துன்பங்களும் உளவாம் என்றும் கூறினர்.

இவை ஐந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது.

6. நற்பொருள்-மெய்ந்நூற் பொருளை. சோர்வுபடும்-பொருளின் மையைத் தலைப்படும். பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயின் கண்ணோடி இவருறுகின்ற குறை முடிக்க வேண்டுமென்றஞ்சி யாவரும் கேளாமையிற் பயனில் சொல்லாய் முடிதல்; கல்வியும் பயன்படாதென்பதாம்.

7. நல்குரவு—நல்குரவுடையான்; ஆகுபெயர். தாயானும்; உம்மை சிறப்பும்மை; அவளதியற்கை அன்புடைமை விளக்கி நின்றது கொள்வதின்றாதலே அன்றிக் கொடுப்பதுண்டாதலுமுடைமையின், அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் துறப்பர் என்பதாம்.

8. நெருநல் மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தானொருவன் கூற்று.

9. நெருப்பினுள் நிரப்பு கொடிது என்றவாறு ஆயிற்று. இதுவும் அவன் கூற்று.

இந்நான்கு பாட்டாலும் நல்கூர்ந்தார்க்குளதாம் குற்றம் கூறப் பட்டது.

10. துப்புரவு-நுகரப்படும் பொருள்கள். துவர-முற்ற. முற்றத் துறத்தல் சுற்றம் தானே விட்டமையின் ஒருவாற்றால் துறந்தவராயினர் நின்ற தம்முடம்பையும் துறத்தல்.

## 4. இரவு.

மானந்தீரா இரவு இரவாமையோடு ஒத்தலின், அதனாலும் வீடெய்தற் பயத்ததாய உடம்பு ஓம்பப்படுமென்னும் அறநூல் வழக்கும் பற்றி, மேல் எய்திய துவரத் துறத்தல் விலக்குதற் பொருட்டு இரவு கூறுகின்றார்.

1. இரத்தக்கார்-இரத்தற்கு ஏற்புடையார்; உரையாமை முன் உண ரும் ஒண்மையுடையராய் மாற்றாது ஈவார்.

2. இன்பம்-இன்பத்திற்கேது; ஆகு பெயர். துன்பங்களாவன ஈவார்கண் காலமும் இடனும் அறிந்து சேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம் வயத்தராக்கலும், அவர் மனம் நெகிழ்வன நாடிச் சொல்லலும் முதலியவற்றால் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம்.

இவை இரண்டு பாட்டாலும் நல்குரவால் உயிர் நீங்கும் எல்லைக்கண் இளிவில்லா இரவு விலக்கப்படாது என்பது கூறப்பட்டது.

3. கடன் அறிவார்-மானம் அறிவார். முன் நின்று இரப்பும்-முன்னே நிற்றல் மாத்திரையே அமையும் இரப்பும்; சொல்லல் வேண்டாமை கூறப்பட்டது. ஏர் அழகு.

4. இரத்தல் புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின் ஈதலே போலும் என்றார். எகாரம் ஈற்றசை.

5. கண்ணின்று இரப்பவர்-சொல்லுதல் மாட்டாது முன் நிற்றல் மாத்திரத்தால் இரப்பவர்.

6. கரப்பிடும்பை-கரத்தலாகிய நோய். இடும்பை-ஆகுபெயர்.

7. இகழ்ந்து எள்ளாது எனவே, நன்கு மதித்தலும் இனியவை கூறலும் பெறுதும்.

இவ்வைந்து பாடல்களாலும் இரத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

8. ஞாலம்-ஞாலத்துள்ளார்; இரப்பாரை ஒழிந்தாரைச் சுட்டிற்று.

9. மேவார்-விரும்புவார். தோற்றம்-புகழ்; ஆகு பெயர்.

இவை இரண்டு பாட்டாலும் உலகுக்கு இரப்பார் வேண்டும் என்று கூறப்பட்டது.

10. நிரப்பிடும்பை தானேயும் கரிசாலும்-நிரப்பாகிய தன்னிடும்பை தானேயும் சான்றுதல் அமையும். தனக்கேயன்றி மற்றையிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள் கடை கூட்டற்கு அவனுறுந் துன்பத்தைத் தனக்கேயாக வைத்துத் தானுறும் துன்பம் தானறிந்து வெகுளற்க என்பதாம்.

## 5. இரவச்சம்.

1. கண் அன்னார்-கண்போலச் சிறந்தார். உம்மை உயர்வு சிறப்பு.

2. உலகு இயற்றியான்-பிரமன்.

இவ்விரு பாடல்களாலும் இரவின் கொடுமை கூறப்பட்டது.

3. வன்பாடு-முருட்டுத் தன்மை; அஃதாவது, ஓராது செய்து நிற்றல். இதனால் வறுமை தீர்வதற்கு நெறி இரவன்று என்று கூறப் பட்டது.

4. இரவு ஒல்லாச் சால்பு-பிறர்பாற் சென்று இரத்தலை உடம் படாத அமைதி.

இதனால், இரத்தலைச் சால்புடையார் செய்யார் என்பது கூறப் பட்டது.

5. தாள்-முயற்சி. தாள் தந்த கூழ் தெண்ணீர் போன்றதாயினும் அமிழ்தத்தோடொக்கும் என்பதாம். நெறியினுனைய இன்பம் சிறிதேனும் பெரிதென்பது கூறப்பட்டது.

6. இப்பாடலால் அறனும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது.

7. இரப்பன்-நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வேன்.

8. ஏமாப்பு இல் தோணி-பாதுகாப்பற்ற தோணி. பக்கு விடும்-பிளந்துபோம். இஃது அவயவ உருவகம்.

9. உள்ளம் உருகும்-எம் உள்ளம் உருகும். இரவினும் கரவு கொடிது என்பதாம். "இரவினை-யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென் கொலோ-கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு" என்பது நாலடி.

10. சொல்லாட-கரப்பார் இல்லையென்று சொல்ல. உயிர் போம்-இரப்பார்க்கு உயிர் போம்; 'இனி யாம் என் செய்வோம்' என்று செயலற்று நிற்கும்.

இரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

## 6. கயமை.

1. மக்களே, எ தேற்றேகாரம். ஒப்பாரி-ஒப்பு.

2. நன்று-இம்மை மறுமை வீடுகட்குரிய புகழ் அற ஞானங்கள். திரு-நன்மை. அவலம்-கவலை. நன்றறிவார்க்குக் கவலை மிக உளவாயிருப்ப, கயவர்க்கு யாதொரு கவலையுமில்லை யென்றும் அவர் பழி முதலியவற்றிற்கு அஞ்சாரென்றும் கூறப்பட்டது.

3. தாம் மேவன செய்து ஒழுகலான்-தம்மை நியமிப்பாரின்றித் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகலான். இது புகழ்வார்போன்று பழித்தவாறாயிற்று.

4. பட்டி-தாம் வேண்டியவாறே ஒழுகுபவர். கீழ்-கயவர். செம்மாக்கும்-இறுமாக்கும். இதனால் கயவர் மேம்படுமாறு சொல்லப்பட்டது.

5. கயவர் நல்லொழுக்கம் காட்டுவாரானால் அதற்குக் காரணம் அச்சமே. தாமாக ஆசாரம் பெறார். பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு என்பதாயிற்று.

6. கயவர் அறைபறை ஆயினர்-இது தொழிலுவமம். இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது.

7. ஈர்ங்கை-எச்சிற்கை. விளர்தகை-முறுக்கியகை. கயவர் மெலிவார்க்கு யாதும் கொடார்; நலிவார்க்கு எல்லாம் கொடுப்பர் என்பதாம்.

8. பயன்படுதல்-உள்ளது கொடுத்தல். கயவர் நெருக்கிய வழியே பயன்படுவர் என்பதாயிற்று.

9. வடு காண வற்றாகும்-வடு இல்லை யாகவும் உண்டாக்க வல்லனாகும். பிறர் செல்வம் காணின் கயமை பொறாமை கொள்ளும் என்பதாம்.

10. ஒரு துன்பம் வந்துற்ற காலத்துத் தம்மை அடிமைப் படுத்திக் கொள்வர் கயவர் என்பதாயிற்று.

ஒழிபியல் முற்றிற்று

பொருட்பால் முற்றிற்று.

---

# IV சிலப்பதிகாரம்

தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் காலத்தால் முந்தியது சிலப்பதிகாரம். இதனை இளங்கோவடிகள் என்ற சேர முனிவர் இயற்றியருளினர். இந்நூல் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பெருங்குடி வணிகர் மரபினர்களாகிய கண்ணகி, கோவலன் என்ற இருவரின் வரலாற்றினைக் கூறும் முகத்தால் அக்காலத்துத் தமிழகத்தின் பல சிறப்புக்களையும் கூறுகின்றது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இந்நூலில் விரவி அமைந்திருத்தலால் இதனை நாடகப்பொருட்டொடர் நிலைச் செய்யுளென்னும், நாடகக் காப்பியம் என்றும் கூறுவர்; உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே எழுதப் பெற்றிருக்கின்றமையால் இதற்கு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற வேறொரு பெயரும் உண்டு.

இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று பகுதிகளைப் பெற்றுள்ளது. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் எத்தலும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்' ஆகிய மூன்று முக்கியப் பொருள்களையும் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின் ஆசிரியர் இதற்குச் சிலப்பதிகாரம் என்றபெயரை இட்டனர்.

வேறு நூல்களால் அறியப் பெறாத பல செய்திகளைத் தன்னுள் கொண்டுள்ளது இந்நூலின் சிறப்பு. நாடக இலக்கணம், இசை யிலக்கணம், சிற்பக்கலை முதலிய பலவற்றைப் பற்றிய செய்திகளை நாம் இதனிற் காண்கிறோம். இதனை ஒரு கலைக்களஞ்சியம் என்பது தவறாகாது. பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு இஃது ஒரு வாயிலாவதும் இதன் சிறப்பே.

இளங்கோவடிகள் சேரர் மரபுத் தோன்றலாயிருந்தும் துறவறத்தை மேற்கொண்டவராவார். அவர் தாம் கண்டனவும் கேட்டனவுமான செய்திகளையே இந்நூலிற் கூறுவதாக எழுதியுள்ளார்.

இந்நூலுக்கு அரும்பதவுரை, அடியார்க்குநல்லாருரை என இரண்டு உரைகள் இருக்கின்றன; அரும்பதவுரை மிகவும் சுருங்கியது; நூல் முழுமைக்கும் இவ்வுரை உண்டு. அடியார்க்கு நல்லாருரை மிக விரிந்தது; ஆனல் சில பகுதிகளுக்கு இவ்வுரை கிடைக்கவில்லை.

இங்குப் பாடமாக அமைந்துள்ள நாடுகாண்காதை புகார்க்காண்டத்தின் இறுதிக்காதையாகும். கோவலனும் கண்ணகியும் கௌந்தியடிகளின் துணைகொண்டு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டு, மதுரைக்குச் செல்லும் வழியில் உறையூர் வந்தடைந்த செய்தியை இக்காதை கூறும்; காடுகாண் காதை என்பது இரண்டாவதான மதுரைக்காண்டத்தின் முதற் காதை

யாகும். இது கோவலன் முதலியோர் காட்டு வழியே சென்று பாலை நிலத்து ஒரு மறவர் சேரியில் வந்து தங்கிய செய்தியைக் கூறுவது.

காதை-பாட்டு; இசையோடு பாடப்படுவதாகிய செய்யுள் என்றும் கூறுவர்.

## 1. நாடுகாண்காதை.

1. வான்கண்-கதிரவன். விழித்தல்-விளங்குதல்.

2. வெண்மதி நீங்க-சந்திரன் மறைந்த அளவிலே.

கோவலன் புகாரை விட்டு நீங்கிய நாள் வைகாசி இருபத்தொன்பதில், செவ்வாய்க்கிழமையும், கேட்டையும் பெற்ற நாச யோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருள்வேளை என்பர் அடியார்க்கு நல்லார்.

4. கடைஇ-செலுத்தி

5. ஏழகத்தகர்-ஆட்டுக்கிடாய்.

8. நெடுவாயிற் கடை-பெரிய கதவையுடைய தலைக்கடை. வாயில்-கதவு.

9. அணி-அழகு. அறிதுயில்-யோகநித்திரை.

10. வலஞ்செயா-வலத்திலேயிட்டு.

11. பிணை-கிளை. மாபோதிக்கு ஐந்து கொம்பாதலாற் பிணையைந் தோங்கிய என்றார்.

12. அறவோன்-புத்தன். திருமொழி-ஆகமம்.

13. அறைந்தனர் சாற்றல். ஆகமத்தைச் சொல்லி விளங்கப் பொருள் சொல்லுதல்.

14. இந்திரவிகாரம் ஏழு-அவ்வூர் புத்த சைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ஏழரங்குகள்,

15. புலவூண்-புலாலாகிய ஊண். பொய்யா விரதம்-பொய் கூறாமையாகிய விரதம்.

16. அவலம்-அழுக்காறு, அவா முதலியன.

19. ஐஞ்சந்தி-பஞ்சபரமேட்டிகள் தெரு. அவர்-அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்.

22. நீரணிவிழவு-திரு அபிடேக விழவு; அயனம், சங்கிரமம், புதுப்புனலாட்டெனவுமாம்.

24. உலக நோன்பிகள்-இல்லறத்தையுடைய சாவகர்.

25. சிலாதலம்-சந்திரகாந்தக்கல்லாற் செய்த ஆசனம்.

27. உலக விடைகழி-உலகத்தாரெல்லாரும் போகலான ஊர் வாயில்.

28. கலையிலாளன்-அனங்கன். கலை-சரீரம். காமர்-அழகு.

31. இலவந்திகை-நீராவியைச் சூழ்ந்த வயந்தச் சோலை. எயில்-சுற்றுமதில்.

32. தண்பதப் பெருவழி-புனலாட்டுக்குப் போம் பெருவழி.

34. குடதிசை கொண்டு-மேற்கு நோக்கி.

35. வடபெருங் கோடு-வடகரை.

36. காவதம்-காதம்.

43. நக்கு-நகைத்து. நகுதல் சோக, கருணதசை தொக்கதாற் பிறந்த விகாரம்.

44. சிறையகம்-ஸ்ரீகோயிலின் ஒரு பக்கத்தேயுள்ள பள்ளியகம்.

47. பெருமகன்-அருகன். திருமொழி-ஆகமம்.

48. உறுகணாளர்-தீவினையாளர் ; மிடியாளர் எனலுமாம்.

49. கடை கழிந்து-வாசலை விட்டு.

50. உரையாட்டில்லை-சொல்லலாவதொன்றில்லை.

51. பொருள் வரைதல் வேட்கை என்க. வரைதல்-தன்னிடத்து ஆக்குதல். இன்னதற்கு மேற்பட்டது தருமத்துக்கே என்று வரைந்திடுதலும் ஆம். நிருமித்த பொருள் ; நியாயத்தாற் நேரும் பொருள் என்றும் கூறலாம்.

52. பரற்பகை-பருக்கைக் கற்களாகிய பகை.

54. அரிதிவள் செவ்வி-இவள் செவ்வியின் மென்மையால் நடக்கும் தன்மையிலள்.

64. காணாய்-நீ முன்பு அறியாய்.

67. படர்குவம்- தன்னையும் உளப்படுத்தி கூறியது.

68–71. பொங்கர்-வாடற்பூ ; சோலையும் ஆம். கையறு துன்பம்-செயலறுதியாகிய துன்பம் ; மீளாத்துன்பமுமாம். காட்டல்-தருதல்.

74-75. வலயம்-தோட்டம் ; பாத்தி. உறுக்கும்-உறுத்தும்.

80. விலங்க-குறுக்காக.

84. வேட்கை-தண்ணீர்த்தாகம். அஞர் எய்தி-எங்கி.

85. குடங்கை ஐந்து விரலும் கூட்டி உட்குழிப்பது. தேனுண்டல் பரிகரிக்கப்பட்டதால் இவ்வாறு கூறினர்.

86. குறுதல்-பறித்தல்.

90. எறிநீர் அடைகரை-எறியும் நீரையுடைய பெரிய வாய்க்காலின் அடைகரைவழியே.

எறிநீர்-வாய்த்தலையினின்றும் குதித்துவரும் வாய்க்கால் நீர். இயக்கம்-வழி.

91. அலவன் நண்டு. நந்து-நத்தை.

92. ஊழ்-முறைமை. ஒதுக்கம்-நடை.

95. அயல்பட-வேறுபட.

97. ஓம்பு-பாதுகாப்பாயாக.

98-101. தோம்-குற்றம். கடிஞை-ஐயக்கடிஞை. அறுவை-தோளி லிடுமுறி.

மொழிப்பொருட்டெய்வம்-பொருண்மொழியாகிய தெய்வம்.

102-111. கரியவன்-சனிக்கோள். புகைக்கொடி-தூமக்கோள். கால் பொரு சிவப்பு-குடகின் உச்சி. ஏறு-இடியேறு, பஃறுராம்-பலபண்டம்.

கடுவரல்-முடுகிவரும் வரவு. ஓ-தூம்பிற் கதவு; ஒவுதல் விகாரத் தால் ஓவென நின்றதெனவுமாம். ஆம்பி-பன்றிப் பத்தர். கிழார்-பூட்டைப் பொறி. பிழா-இறை கூடை.

114-119. கம்புட் கோழி-சம்பங் கோழி. கானக் கோழி-கானங் கோழி; காட்டுக் கோழி எனலும் ஆம். நீர்சிறக்காக்கை-நீர்க்காக்கை. உள்ளு-உள்ளான். ஊரல்-குளுவை. புள்ளு-கணந்துட்புள். போதா-பெருநாரை, மரக்கால் நாரை.

120. உழா நுண்டொளி-தானே பட்ட சேறு.

121. காரான்-எருமை.

122. சொரிபுறம்-தினவையுடைய முதுகு.

123. குமரிக்கூடு - அழியாக்கூடு. கொழும்பல்லுணவு - பலவர்க்கத் துணவு; அவரை துவரை யுள்ளிட்டன.

125. கருங்கை-வலியகை. களமர்-உழுகுடி வேளாளர்.

127. நாறு-நாற்று.

130. சின்மொழி-இழிந்தமொழி; சிலவான மொழியுமாம்.

131. விருந்திற்பாணி-பண் நிறத்திற்சேர்ந்து பழகிப்போதாத பாட்டு; தம் இசையிற் புதுமையுண்டாகப் பாடும் பாட்டெனினுமமையும்.

133. விரியல்-மாலே.

136. அரி-அரிந்திடு சூடு.

137. முகவைப் பாட்டு-பொலிபாடுதல்; முகக்கக் கொடுத்தலின் முகவையாயிற்று.

138. தெண்கிணே-தெளிந்த ஓசையையுடைய கிணே.

140. நீரின்-நீர்மையுடனே.

142. உழைப்புலிக்கொடி-புலியை இடத்திலேயுடைய கொடி.

143. அட்டில்-ஓமசாலே.

145. இறை-இறப்பு.

148. காவிரிப்பாவைதன் புதல்வர்-வேளாளர்.

149. புரப்போர்-அரசர்.

151. பொங்கழி-தூற்ருப் பொலி.

152. மங்குல்-இருட்சி.

156. ஆற்று வீயரங்கம்-ஆற்றை மறைக்கும் அரங்கம். சீரங்கம்.

157. மரம்பயில்-அடுக்கம்-மரச்செறிவு.

158. ஒரு சிறை-ஒரு பக்கத்திலே.

160. ஐயர்-உலக நோன்பிகள்.

164. பாறுக-கெட்டோடுக.

167. சிந்தை விளக்கு-அவதிஞானம். அதாவது, தன்னுடைய முற்பிறப்பை யறியுமறிவு; த்ரிகாலஞானமும் ஆம்.

172. வித்தின்-வித்துப்போல.

177. செறிவன்-எல்லா உயிர்க்கும் இதஞயுள்ளவன்; சலியாதவன் என்றுமாம். சினேந்திரன்-எண்வகைக் கருமங்களேயும் வென்றவன்.

சித்தன்-செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடிப்பவன்.

பகவன்-ஐந்து ஞானத்துள்ளும் சிறந்த ஞானம் பெற்றவன்; கேவல ஞானம்-திரிகால ஞான வுணர்ச்சி.

179. புராணன்-பழையவன்.

180. சினவரன்-சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்.

சிவகதி-வீட்டுலகு.

181. பரமன்-மேலானவன்.

182. சாதுவன்-ஒடுங்கினவன். சாரணன்-ஆகாசவாசி.

184. குரவன்-குருமூர்த்தியாயுள்ளவன்.

186. சங்கரன்-சுகத்தைப் பண்ணுகிறவன். ஈசன்-ஐசுவரியவான். சயம்பு-தானேதோன்றினவன்.

187. அங்கம் பயந்தோன்-அங்காகமத்தை யுண்டாக்கியவன். அருகன் பூச்சியன்.

188. பண்ணவன்-கடவுள், பாத்தில் பழம் பொருள்-பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன்.

191. பொதியறை-துவாரமில்லாத கீழறை.

194. ஒரு மூன்று-காமம், வெகுளி, மயக்கம்.

198. ஐவர்-ஐவகைப்பட்ட இந்திரியங்கள். திணை மயக்கம்.

199. கைவரை-கையகத்தே.

202. அருகனறவோர்-இருடிகள்.

206. இறுதியிலின்பம்-அநந்த சுகம்.

211. பவம்-பிறப்பு.

213. பந்தம்-ஸம்ஸாரம்.

215. நீரணி மாடம்-பள்ளியோடம்.

219. வம்பப்பரத்தை-பரத்தைத் தன்மைக்குப் புதியவள். வுறு மொழியாளன்-பயனில சொல்லுவான்.

223. நோற்றுணல்-பட்டினி விட்டுணல்.

224. ஆற்றுவழி-நெறிமிடத்து.

226. பரிபுலம்பினர்-நடையால் வருந்தினர்.

232. முதுநரி-ஓரி.

242. சொச்சி-மதில்.

243. படர் நோய்-உறழ்ச்சியாலுண்டான நோய்.

247. வாரணம்-யானை, கோழி.

248. புறஞ்சிறை வாரணம்-உறையூர்.

## 2. காடுகாண்காதை.

1. திங்கள் மூன்று அடுக்கிய-மூன்று திங்களை அடுக்கினுற்போலொத்த; முக்குடையாவன சந்திராதித்தம், நித்திய விநோதம், சகலபாசனம் என்பன.

2. திகழ்தல்-விளங்குதல். சிறந்து-சிறப்ப.

4. ஆதியில் தோற்றத்தறிவனை-ஆதியின்மையைத் தோற்றமாக வுடையவன்; யாவர்க்கும் தானே முதலாயவன் என்றும் கூறலாம்.

அறிவன்-உறையூரில் அருகன்.

5. கந்தன்-நிக்கந்தன்.

6. அந்தில்-அசைநிலை. அரங்கம்-திருவரங்கம்; ஆற்றின் குறை எனலும் ஆம்.

10–14. வாரணம் - கோழியூர்; உறையூர். விளங்கி - விளக்கி. இருக்கை-இருப்பிடம்.

17–22. அடியில் தன்னளவு அரசர்க்குணர்த்தி-கடலின் அளவை அடியாலே இன்ன அளவென்று அரசர்க்குக் காட்டி; அன்றி, அடியினுலே தன் பெருமையை அரசர்க்கு அறிவித்து. வான்பகை-முன்பு செய்த பகைமை. பஃறுளி-குமரிப்பக்கத்ததோர் ஆறு. கோடு-மலை. கொடுங் கடல்-வளைந்த கடல்.

26. முதல்வன்-இந்திரன்.

57. தீத்திறம்-அக்கினி காரியம்.

60–67. தொழிலாளர்-மந்திரிகள். கோடி-கோல் வளைந்து. வேத் தியல்-அரசியல். வியன் நிலம்-அகன்ற நிலம். வேனலம் கிழவன்-வேனி லரகிய அமைச்சன். கதிர் வேந்தன்-கதிரவனுகிய மன்னன். முறைமை-இயற்கை. படிவம்-வடிவம். காலை-காலம்.

68. அறை-கற்பாறை. பொறை-பொத்தைமலை; மண் சிறுமலை. ஆரிடை-அரியவழி.

69. நிறை நீர் வேலி-நிறைந்த நீர்க்கு வேலியான எரிகரை; பேய்த் தேருமாம்.

71. கொடும்பை-கொடும்பாளூர். நெடுங்குளம்-ஒரூரின் பெயர்; நெடுங்குளத்தை கொடும்பாளூரிலுள்ள ஒரு குளத்துக்கும் பெயராக இட்டும் உரைக்கலாம்.

கோட்டகம்-கரை; பள்ளமும்.

அறைவாய்-அற்றவாய்.

73. சூலத்து-சூலம்போல.

75–86. அலறுதலை-விரிந்த தலை. மராம்-வெண்கடம்பு. உலறுதல்-தலைமுளிதல். உழிஞ்சில்-வாகை ; உன்னமரமுமாம். புல்-புறக்காழ். எயினர்-மறவர். அறைக்கண்-அறுத்தலையுடைய கண் ; வரைந்த கண்ணுமாம். பூந்தினை-பொலிவினையுடைய தினை. காயம்-வெள்ளுள்ளி. சிறுமலை-ஒரு மலையின் பெயர். வலங்கொண்டு-வலத்திட்டு. அகன்பதி-மதுரை.

90. கடம்-பாலை நிலத்து வழி.

91. திருமால் குன்றம்-அழகர் திருமலை.

92. ஆங்கு-அப்பிலத்துக்குள்ளே.

96. விட்டு நீங்கா-தம்மின் நீங்கா.

97. சிறப்பு-விசேடம். முட்டா-எக்காலத்தும் உள்ள. மூன்று-மூன்று பொய்கைகள் உள.

98. பொருந்துதல்-ஆகுதல்.

99. விழுநூல்-ஐந்திர வியாகரணம். எய்துவிர்-உணர்விர்.

106. வைத்தல்-நினைத்தல். 107. வந்தனை-துதித்தல்.

108. சிலம்பாறு-ஓர் ஆறு ; இதனை நூபுரகங்கை யென்பர். அகன்றலை-அகன்றவிடம்.

109–111. பொற்கொடி போன்ற ஒளியினையும், புயல்போலும், ஐங்கூந்தலையுமுடைய தொடி வளைத்தோளாள் ஒருத்தி கன்னிகாரம் போலத் தோன்றி : 'கன்னிகாரம்' போல என்றார், மதாணியணிந்திருத்தலின். கோங்கடியிலே தோன்றி என்றுமாம் (அரும்பத உரை).

112. இம்மைக்கின்பம்-பொருள் : மறுமைக்கின்பம்-புண்ணியம்.

113-114. இரண்டுமின்றிச் செம்மையின் நிற்பது-வீடுபேறு.

117. திறந்தேன் என்றது விரைவு.

119. போகிடை கழியன-நீண்ட இடைகழியிலுள்ளன. போகு-நெடுமை.

120. ஒட்டுப் புதவம்-இரட்டைக்கதவு. உம்பர்-மேல்.

123. பேணிய பொருள்-மூன்றினுளொன்றாய் நினைத்த காரியம்.

128. ஐந்தும் எட்டுமாவன ; பஞ்சாக்கரம், அட்டாக்கரம்.

131–132. அவற்றுள் வேண்டியது யாதொன்று அதனில் விரும்பினீராய் ஆடின், அவற்றின் பயனுயவை, தவங்களைக் செய்தோர்க்கும்

காணத்தகும் மரபினையுடையவல்ல ; இனி, அங்ஙனமாகிய பொய்கைகளின் பயனை விரும்பினீராய் ஒன்றினாடின் அதன் பயனை நுகர்ந்த நெஞ்சம் பிறிதொன்றினையும் காதலியாதென்றுமாம். இன்னும் மற்றவை காண்டகு மரபினவல்லவென்பதற்கு இவை யொழிந்த தீர்த்தங்கள் இவைபோலக் கைமேற் காணத்தகும் மரபினையுடையவல்ல எனினுமமையும் (அடியார்க்- உரை.)

136. கொடி புணர் நிலை-கொடிமரம் நிற்கும் திருவாசல் ;

142. செந்நெறி-செவ்வியவழி.

144. ஆரஞர்த்தெய்வம்-வருத்தும் தெய்வம்.

146 இயங்குநர்-வழிப்போவார். தாங்கும்-தடுக்கும்.

147. அடுத்துடன் கிடக்கும்-முகம் செய்து கிடக்கும் ;

151. கட்டுரை-பொருள் பொதிந்த உரை.

154. கப்பம்-கற்பம் (பிராகிருதம்). கப்பத்திந்திரன்-தேவர்களினும் வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன் ; தேவர்களிடைச் சென்று கற்பிக்கும் இந்திரன் என்றுமாம்.

155. மெய்ப்பாட்டியற்கை-பரமாகமம் ; அதில் ஐந்திரவியாகரணம் காணலாம்.

160. காமுறு தெய்வம்-காமமுறும் தெய்வம் ; எனவே காமக்குரோதாதிகளெல்லாம் உடைய தெய்வம்.

165. பின்றை-பின்னை. வழிநாள்-மற்றைநாள்.

167. வகுந்து-வழி.

168. இடை நெறி-நடுவழி, இயவு-செலவு.

170. நீர் நசைஇ வேட்கை-நீர்மேல் மிக்க விருப்பம். இது கூறவே, பாலைத்திணையின் தன்மைச் சிறப்புமாயிற்று.

173. வயந்தமாலை-மாதவியின் தோழி.

180-191. மேலோர் - முனிவர். நூலோர் - கற்றோர். பால்வகை தெரிந்த பகுதியோர்-ஓதாது நன்மை தீமை யறிவோர்; ஞானிகளில் உயர்ந்த கூற்றோர் ; மதிநுட்பமுடையோர். பிறக்கிட்டு-பின்னிட்டு ; அதாவது முகம் பாராது. வாழ்க்கை-பொய்த் தொழில். போன்ம்-போலும். சாத்து-வாணிகச்சாத்து ; வாணிகஞ் செய்வோர் திரள். பாத்தரும் பண்ப-பகுத்தலரிய பாண்மனே ! என்றது, பிறர்க்கில்லாத பண்பையுடையாய் என்றபடி.

195. ஐஞ்சிலோதி-ஐவகைப்பட்ட சிலவாகிய ஓதியையுடையாளை.

197. பாய்கலைப்பாவை-துர்க்கை.

199. புனமயிற்சாயல்-கண்ணகி, புண்ணியமுதல்வி-கவுந்தியடிகள்.

201. பாசடை-பசிய இலை.

202. அயா-நீர்வேட்கை.

206. மயங்கு அதர் அழுவம்-வழி மயக்கத்தையுடைய பாலை நிலப் பரப்பு.

209-210. ஆரிடை - உழவர்-அரியவழிகளின் இயங்குவார் கைப் பொருளாகிய வளத்தை விரும்புவரேயன்றி, மழை வளத்தை விரும்பாத விற்றொழிலையே உழவுத் தொழிலாகவுடைய மறவர்.

211. முன்பு-வலிமை. கொடுவில்-வளைந்தவில்.

213. கழிபேராண்மைக் கடன்-தன்னைத்தானிடும் பலிக்கடன்.

# V. சீவகசிந்தாமணி.

## கேமசரியாரிலம்பகம்.

தமிழிற் சிறந்து விளங்கும் பெருங்காப்பியங்களுள் ஒன்றுன சீவகசிந்தாமணி திருத்தக்க தேவர் என்ற சைன முனிவரால் இயற்றப்பட்டது. இது உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பிரமாண நூல்களுள் ஒன்று. காவிய இலக்கணங்கள் முழுமையும் பெற்று விளங்குவதாலும் பிற்காலத்தெழுந்த தமிழ்க் காவியங்கள் பலவற்றிற்கும் வழிகாட்டியாய் இருந்து வருவதாலும் இதனை அறிந்தோர் வடமொழியில் ஆதிகாவியமென விளக்கும் வால்மீகி ராமாயணத்திற்கு ஒத்த பெருமையுடையதென்று கூறுவர். ஜைனர்கள் இதனை ஒரு திவ்ய நூலாகக் கொண்டு போற்றி வருகின்றனர்.

சீவகன் என்ற ஓரரசனுடைய வரலாற்றை இந்நூல் கூறும். சிந்தாமணி என்பது தன்மையால் வந்த பெயரென்பர் நன்னூல் உரையாசிரியர். சீவகன் பிறந்தவுடன் அவனை அவன் தாய் 'சிந்தாமணி' என்று அழைத்ததால் அவனுக்கே அது பெயராயிற்று என்றும் கூறுவர். புலவர் சிந்தித்தவையெல்லாம் தருதலின் இது சிந்தாமணி என்று பெயர் பெற்றது என்று கூறுவாரும் உளர்.

இதற்கு மணநூல் என்ற வேறொரு பெயருமுண்டு. சீவகன் எண்மர் மகளிரை மணந்த செய்திகள் இந்நூலிற் கூறப்பட்டிருக்கின்றமை இதற்குக் காரணம் ஆகும்.

இதற்கு நச்சினார்க்கினியர் இயற்றிய உரையொன்றுண்டு. இந்நூலையும் உரையையும் முழுமையும் முதன்முதல் அச்சுப்புத்தகமாக அருளியவர் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாவர்.

## கேமசரியாரிலம்பகம்.

சீவகன் சித்திரகூடமென்னும் தவப்பள்ளியைச் சார்ந்து அதிலிருந்த முனிவர்களோடு அளவளாவிப் பின்பு தக்க நாட்டிலுள்ள கேமமாபுரத்தை யடைந்தான்.

அந்நகரத்திலிருந்த வணிகனுன சுபத்திரனென்பான் தன் மகள் கேமசரி என்பாளுக்குத் தக்க கணவனை நாடிக் கொண்டிருந்தபோது சீவகன் அங்கு வந்து சேர்ந்தான். கேமசரி எந்த ஆடவனைக் கண்டு நாணமுறுகிறுளோ அவனே அவளுக்குக் கணவனுவான் என்று சோதிடர்கள் முன்பு கூறியிருந்தனர். அவ்வாறு அவள் சீவகனைக் கண்டு காமமுற்று நாணவே சுபத்திரன் அவனே அவளுக்கு மணாளன் என்று கொண்டு இருவருக்கும் மணம் புரிவித்தான். ஆனல், சீவகன் அவளை விட்டு இரண்டு

திங்களிற் பிரியவே அவள் அளவு கடந்த துயரமுற்றாள். அவளை அவள் தோழி தேற்ற அவள் ஒருவாறு துயராற்றியிருந்தாள். இப்பால், கேமசரியை விட்டுப் பிரிந்த சீவகன் வழியில் எதிர்ப்பட்டானொருவனுக்குத் தன் அணி கலன்கள் யாவற்றையும்கொடுத்து, அவனுக்குச் சில நல்லுரைகள் கூறி மேலே செல்லலானான்.

1. வானின் - வானைப்போல. வண்கை-வள்ளன்மையையுடைய கை. மணி-முத்து. சிறுவன்-சீவகன். தேம்-இனிமை. நானம்-கஸ்தூரி; புழுகுமாம். கோதை-பதுமை. (முன் இலம்பகத்தில் சீவகன் மணந்த தாகக் கூறப்பெற்றவள்.) வழங்கல் மேவி-போதலை விரும்பி.

2. முசு - ஆண் குரங்கு. இரிய - ஓடுதலால். துனிவு - அச்சம். நோக்கி-அருளொடு பார்த்து. தோன்றல்-சீவகன். பழுவம்-காடு.

3. மனத்தின் - மனத்தைப்போல. திருவில் மாந்தர் - வறியவர். எல்லை-பகற்காலத்தில். எல்லை, ஐ, சாரியை. மயங்கி-வழியிடம் மறைந்து. சிறியார் கொண்ட தொடர்பிற் செல்லச் செல்ல அஃகும் நெறி-கீழ்மக்கள் கொண்ட நட்பைப்போலப் போகப்போகக் குறைகின்ற வழி. சிலம்பு-மலை.

4. சுனைக்குக் கண் உவமை. விழியா-கரு விழிகளாக. வனையலாகா-எழுதமுடியாத. மைந்தன்-சீவகன். இனைவ-வருந்தியழுவன. ஆடி-நீராடி. நனை-தேன். போது வேய்ந்து-மலரால் அருகனுடைய பாதத்தை மறைத்து. நாதன்-அருகன்.

5. இருவினை-நல்வினை, தீவினை என்ற இரண்டும். பயம்-பயன். என்றி-என்று கூறினாய். எய்தான்-ஒரு பிறப்பிலே வினையைச் செய்து அப் பிறப்பிலே பயனையடையாதவன். பயத்தை - பயனை. பிறனே - மறு பிறப்பில் பிறனாய்ப் பிறந்தவனே. கொய்தாமம்-கத்தரித்துச் செய்த மாலை. தாழ்ந்து-தங்கி. பிண்டிக் கோமான்-அருகன். பிண்டி-அசோகு.

6. இனிதின்-கண்டப்பாடலின் இனிமையாலே. சித்திரகூடம்-பள்ளியின் பெயர். முனது என-முன்னே உள்ளதென்று சுதஞ்சணன் என்ற தேவன் கூற. தாபதர்-முனிவர். பனி-குளிர்ச்சி.

7. புல்-புல்லரிசி. அல்லி-அல்லிக்காயிலுள்ள அரிசி. போகுயர்-மிக உயர்ந்த. கழைநெல்-மூங்கிலரிசி. கேழலும் தோரையும் நெல்லின் வகைகள். நல்லவே - மாமிசமல்லாத நல்லனவற்றை. பள்ளி - சித்திர கூடத்தை.

8. கொள்கை-விரதம். அழல் ஐந்து-பஞ்சாக்கினி. வீடு-மோட்சம். விரிய - விரிவாக. தீத்தொழில் - காமவேட்கை. மேயினர்-பொருந்தினவர்கள்.

9. வள்ளி-வள்ளிக்கிழங்கு. வரை வாழை-மலை வாழை. தெள்ளு-ஆராய்ந்த. மாரி-மழை. மாரியன்-சீவகன்; பலர்க்கும் பயன்படுதலால். ஆர்க-உண்பாயாக. உள்ள மாட்சி-நெஞ்சழகு. ஓம்பினார்-உபசரித்தார்கள்.

10. பாங்கின்-நல்ல இடமாகிய சித்திரகூடத்தில். பான்மதி-பால் போன்ற சந்திரன். இவன்-சீவகன். அளக்குவம்-அளந்து அறிவோம். ஒங்குதல்-உயர்தல்.

11. சையம் பூண்டு-கல்லைக் கட்டிக்கொண்டு. உய்யுமேல்-பிழைப்பானால். தொடர்ப்பாடு-காம நுகர்ச்சி.

12. ஏமம்-பாதுகாப்பு. அல்நெறி-இஃதல்லாத வழிகள். துணிகுவம்-தெளிந்துள்ளோம். காமன்தாதை-திருமால். காளை-சீவகன்.

13. வரகதி-மேலான நிலையை. கயம்-குளம். வெளிற்றுரை-பயனில்லாத சொற்களை.

14. நோய்-காமநோய். ஊழ்த்து - முதிர்ச்சியையடைந்து. வேய்-மூங்கில். துறக்கம்-சுவர்க்கம். பருகுவ புரிமின்-நுகர்தலை விரும்புங்கள்.

15. நன் ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற இரத்தினத்திரயங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. இருவினை கழிதற்குப் போதும் கூறப்பட்டது.

16. பாகத்தார்-நல்வினை வந்தடையும் பருவத்தார். கண்விடுக்கப்பட்டோம்-அறிவிக்கப்பட்டோம். வென்றவன்-அருகனுடைய. வட்டம் பருதி-மேருவை வட்டமாய்ச் சுற்றி வருகிற சூரியன் மறைந்தான். செம்மல்-சீவகன். அசைவு-இளைப்பு.

17. இருள் அஃகிய காலை-இருட்டு குறைந்த விடியற் காலத்து. வசை-குற்றம். யாறு-வழி. மிசை-தேவருலகத்தும். மெய்ப்பொறி-உடம்பிற்குக் கூறப்படுகின்ற இலக்கணம்.

18. தேம் கயத்து-இனிய நீரையுடைய குளத்திலுள்ள. நெகிழ்ந்த-வாய்விட்ட. புனைந்த-பூசிய. அளாய-கலந்த. தக்க-தகுதியையுடைய.

19. கன்னி-இளமை. உகிர் உற்றென-நகம்பொருந்திற்றென்று. கொடுந்துறை-வளைந்த நீர்த்துறையில். வீழ் புனல்-ஆழ்ந்த நீரை.

20. மதி அகடு-சந்திரனின் நடுவிடத்தை. உரிஞ்சும்-தேய்க்கின்ற. பொதி அவிழ் மாலை-மயிர் முடியினின்றும் அவிழ்ந்த முத்த மாலைகள்.

21. தாமம்-மாலை.

22. ஆண்டகை-ஆடவரிற் சிறந்தவன். கணார்-மகளிர். மருட்ட-மயக்க. இப்பாடலிற் கூறப்பட்டவன் சுபத்திரன் என்னும் வணிகன்.

23. வடிப்ப-பயிற்றுதலாலே. சோர்புயல் தொலேத்தவண்கை-சொரிகின்ற மேகத்தைத் தன் கொடைத் தொழிலால் கெடச்செய்த வள்ளன்மையையுடைய கை. சுபத்திரன் மனைவி நிப்புதி என்பாள்; இது நிஸ்ப்ருதி என்பதின் விகாரம். அவள் பெண்ணின் பெயர் கேமசரி. பேர் நலம் பொறித்த-பெயரையும் அழகையும் எழுதிய.

24. மாசிலாள்-கேமசரி. மதிவலான்-சோதிடன். விதி-சோதிட நூல். கதுமென-விரைய. துணைவனும்-கணவனுவான்.

25. தாழ்தரு-தங்கிய. தாமம்-வரிசை; ஒளியுமாம். வீழ்தரு-விரும்புகின்ற. ஊழ்படு காதலானே-தொன்று தொட்டுவருகின்ற காதலேயுடைய கணவனே.

26. திருமகன் திறத்து-திருமகன் தோன்றுதற் பொருட்டு. எயின-பொருந்தின. ஆறிரண்டு-பன்னிரண்டு.

27. மாவினை அடுகின்ற நோக்கு, மருட்டுகின்ற நோக்கு என்க. மா-மான். மருட்டும்-மயங்கச் செய்கிற. தனித்து-தனியிருந்து. எ அடு பிணை - அம்பினுல் எய்யப்பட்ட பெண் மான். இறைவளே - கையில் வளேந்தவளே.

28. ஊதுமே, ஏகாரம் வினு ஒன்றே. ஏகாரம், தேற்றம்.

போது-பூ. பொறி-புள்ளி. சேர்ந்து-பூவைச் சேர்ந்து அதிலுள்ள தாதுக்களேயும் தேனையும். கண்ணுறும்-எதிர்ப்படுவான்.

29. பொன்னிலத்தெழுந்த என்றமையால் காமவல்லிக்கொடி என்பது பெறப்பட்டது. பேதை-கேமசரி. ஊர்-கேமமாபுரம். என்ப ஏ-அசைகள்.

30. சுடர்-சூரியன். ஒன்றி-நிலத்திலே வந்து பொருந்தி. உத்தரம்-வடதிசையில். மார்பினுன்-சீவகன். நாதன்-அருகன்.

31. முடி குடை கவித்தனையது என மாற்றுக. புறவடிகள் ஆமையின் வடிவை ஒத்திருந்தன. புடைதிரள் விலா-பக்கம் திரண்ட விலா. விலாவின் வளேவுக்கு வில் உவமை. கடி-வாசனை. கண்களுக்குத் தாமரை உவமை. வண்ணம்-தன்மை.

32. இலங்கு-விளங்குகின்ற. வார்ந்து-நீண்டு. ஆர்ந்த-அழகு பொருந்திய. திருமகள் கணவன்-திருமால். சொல் அளைஇ-கலந்து பேசி.

33. இவர்-சீவகனும் சுபத்திரனும். இல்தலே-வீட்டினிடத்தே. கடவுள்-அருகனே.

34. ஓதம்-கடல். ஓதவண்ணன்-நேமிஸ்வாமிகள். விரை-தேன். தேவர் பெருமான்-அருகன்.

35. முந்நீர்-கடல். அரம்பையன்னாள்-திப்புதி. மணிவண்ணன்-அருகன்.

36. நகர்-மனை. உலம் கொள் தோள் உறுவலி-உருண்டைக் கல்லின் தன்மையைக் கொண்ட தோளையுடைய மிக்க வலியையுடைய சீவகன்.

37. விளைத்தாள் - விளைவித்துக் கொண்டாள். உருக்குண்டாள்-காமத்தீயால் மனமுருகினாள்.

38. நாணிய-நாணுவதற்குக் காரணமான. கொல்-கொலைத்தொழில் குழைந்தாள்-வருந்தினாள். சொல்வளர்த்தார்-அச்சொல்லை எங்கும் பிரப்பினார்கள். மல்-மல்லுத்தொழிலிலே.

39. காதன்மை-ஆசை. துணி பொருள்-வேட்கையாகிற துணிந்த பொருளை. நோக்கம் அமுதத்தையும் உலகையும் விலையாகக் கொள்ளும் என்க.

40. திரு-இலக்குமி. ஒருவன்-சிவபெருமான். அழகையும், வேலையும், வில்லையும், அறிவையும், பிறையையும் வாங்குதலிற் பகையென்றான். பூங்கொடி யொருத்தி திருவிற்கும், முருகற்கும், அநங்கனுக்கும், இறைவற்கும் வடிவே பகைத்தியாயிருந்தாள்; எனக்கு உயிர்க்கே பகைத்தியாயிருந்தாள் என்றுமாம்.

41. நாய்கன்-சுபத்திரன். கிலத்தவர்-அரசன் சுற்றத்தாரை.

42. கடவுள் நாள்-நல்ல நாள்.

43. நனை-தேன். கா-சோலை. வாவி-தடாகம். ஆடி-நீராடி. குற்றுப்பறித்து. கண்ணி-மாலை. வினை நலம்-நல்வினையின் பயனை.

44. நாளால்-நாளில்; உருபு மயக்கம். கொள்வனைய-கொண்டாற்போலும். அழிந்து வீழ் அருவி-பெருகி வீழ்கின்ற அருவி நீரையுடைய. அழிதல்-பெருகுதல்.

45. மாதர்-கேமசரி. கிள்ளை-கிளி. குருசில்-சீவகன். கவர்கிளி-விருப்பத்தையுடைய கிளி.

46. வண்டைக் கண்டு கங்குல் தான் நீங்கலுற்றுச் சொன்னான் என மாறியிசைக்க. கங்குல்-இரவில். நீங்கலுற்று-பிரியக்கருதி.

47. மணி வண்டு-அண்மை விளி. இணை வண்டு-பேடை வண்டு. இரங்கலின்றாய்-நின் பிரிவிற்கு வருந்துதலில்லாமல். துஞ்சின்-இறந்தால். பணி யென்றது, மகளிிருந்து இல்லறத்தை நிகழ்த்துதற்கு வேண்டுவன தேடி வருதல் ஆடவர்க்குப் பணியாதலை. இப்பாடல் சீவகன் கூற்று.

48. கதிரவன் குழவியாய், குமரனாய், கிழவனாகும் தன்மை இங்குக் கூறப்பெற்றது. விழைவுதீர் கிழவன்-ஆசை நீங்கிய கிழவன். கதிர் உலந்து

வீழ-கிரணங்கள் கெட்டு அத்தமலையில் வீழ்தலால். உழல நக்க-உழலும்படி அயர்ந்த. குழல்-புல்லாங்குழல்.

49. அல்லியுட்பாவை-தாமரைமலரிலுள்ள திருமகள். அல்லி-அக விதழ்; தாமரைக்காயிற்று. ஒற்றி-கதவினை நிலையோடு தள்ளி. மின்னு விட்டு-ஒளி விட்டு. நீந்தி-கடந்து.

50. கரந்துழி காண்டல் செல்லாள்-மறைந்த இடத்தைக் காணமுடி யாதவளாய். இருள் அறு காறும்-இருட்டில்லாத இடம் வரையில்.

51. யாண்டையாய்-எங்குள்ளாய. உயிர்-எனது உயிர். வலிக்கும்-துணிகின்றது. நிறையிலேன்-மனமழிந்தேன்.

52. கனிகொள் காமம்-அன்பு கனிதல் கொண்ட வேட்கை. கூறு வாய்-முன்பு கூறுகின்ற நீ. பசப்பூர-பசப்படையும்படி.

53. நுன-உன்னுடைய.

54. புனம்-தினைப்புனம். வழை-சுரபுன்னை. திரை-கடல். ஆகு பெயர். துனப்பெறுகோ-அடையப் பெறவனோ ?

55. தகை-அழகு. அமர்-அன்பு பொருந்திய; என்றது தன் நிழலை நோக்கி. அகையேல்-வருந்தாதே. அழேல்-அழாதே. ஓ-எதிர் மறை.

56. நடை மாண்-நடையினால் மாட்சிமையுற்ற. உடன் ஆடும் என்னுடன் விளையாடும். தொடை-நரம்பு. யாழ்போலு மழலை மொழியை யுடையாள். மயில் முதலியனவற்றை விளித்து, ‘என்னுடன் விளையாடும் என் ஐயனை’ என்ற அளவிலே உருகி, அவற்றிற்குக் கூறுகின்ற காரியத்தை (அவனைத் தேடுமின் என்றதை) மறந்தாளென்க. ஐயனை என்ற இரண்டாம் உருபிற்குத் ‘தேடுமின்’ என்ற வினை வருவிக்க. (நச்.).

57. மல்லுறை மார்பன். அலங்கல் மார்பன். பிரிவெனும்எரி; எரியுள் மாதர் வெந்தனள். இல்லுறை தெய்வம் இரங்கி நின்று உரைக்கும்.

58. கடம்-காடு. துற்ற-உண்ணும்படி. புல்லும்-தழுவுகின்ற. உய் தலுண்டோ-பிழைத்திருக்கும் தன்மையுண்டோ? அடியிலே குஞ்சி சூட்டுதல் ஊடல் காலத்து.

59. காமன்-சீவகன். துஞ்சுவேன்-இறந்துபோவேனுடைய. மஞ்சு-மேகம். நீர் என் மனைதன்னுள் தெய்வமாவீர் என்றாள் என மாறி முடிக்க.

60. எரி நுதி-நெருப்பின் நுனியை. மா-மாமரம். மாழ்கி-மயங்கி. அரிகுரல் கொண்ட பூசல்-அரித்து எழும் குரலால் கொண்ட அழுகை.

61. விழுத்திணை-சிறந்த குடியில். விண்ணோன் வச்சிர நுதியினிட்ட எழுத்தனான்-அயன் வச்சிரத்தாலிட்ட எழுத்துப்போலே தப்பாதவன். இப் பாடல் நிப்புதியின் கூற்று.

62. பிறங்கினகள் யாவும்-மிக்க அழகுகளெல்லாம். கள்-அசை. பிரிந்தவர் புணர்வர் என மாறுக. இறங்கின-தாழ்ந்தனவாய்.

63. இன்பம் நீர்ப்புள்ளி அற்று; துன்பம் கடல் அனையது ஒன்று. இருதலைப் பயன்-இம்மைப் பயன், மறுமைப் பயன்.

64. இளமை-நீர் மொக்குள். யாழ் இளியினும்-வீணையினது இளி யென்னும் நரம்பினொலியைக் காட்டிலும். ஆக்கம்-செயல். அழுங்குவது-வருந்துவது.

65. விதிர் விதித்து-நடு நடுங்கி. மைந்தன்-கணவன். காளை-சீவகன்.

66. விடியற்காலத்தெழுந்த நிலவின் தோற்றம் இங்கே வருணிக்கப் பெற்றது.

67. எந்தியாங்கு-எடுத்ததைப்போல. மாறிலா-நிகரில்லாத. பருதி வட்டம்-சூரியனது வட்டம். முளைத்த ஆங்கண்-தோன்றிய அப்பொழுது.

68. எனைவர்-எத்துணைவர்? ஒவ்வாதார்-நல்லொழுக்கமில்லாதவர். ஒப்பார்-நல்லொழுக்க முடையவர்.

69. நம்பி என்றது சீவகனை. பெருஞ்சான்றோன்-அறிவில்லாதவன்.

70. அறிவர் சிறப்பு-இறைவர் பூசனை. உற்றான்-பயன் தருவான். தன்னை-அம்மகனை. அல்லாதார் பிறர்-அவ்வுரவோனைப் பெறாதார் மகப் பெற்றாரல்லர். மக்கள் பிறரே-அவர் பெற்ற மக்களும் அவர் மக்கள் அல்லர்.

71. நாகம் தோலுரிக்கும்போது நஞ்சும் காலும். பனிப்ப-நடுங்கும் படி. உடனாக-தம் வயத்தனாக. திடனாக-மனத்தில் நிச்சயமுற. தெண் மட்டு-தெளிந்த கள். மிக்கார்-அறிவால் மிக்கவர்.

72. ஒவாது-ஒழியாமல். உவவு-அமாவாசை, பௌர்ணமி; சதுர்த் தசி என்பாரும் உண்டு. தாதை-அருகன். புனைதல்-அலங்கரித்தல். ஈண்டிய-தருமம் சேர்ந்த.

73. நால்வர்-தானம், சீலம், தவம், அறிவர் சிறப்பு என்ற நான்கும். மகன்-நல்வினை.

74. மட்டு-தேன். மால்-அருகன். முட்டாத-குறைவில்லாத. இன்பப்புதா-இன்பக்கதிக்குச் செல்லும் கதவு. எட்டானும் பத்தானும் இல்லாதார்-பத்தெட்டுக்கூட இல்லாதார்க்கு. அவனை-அருகனை.

75. வேற்றுவர்-அயலார். நுமர் - உறவினர். ஆற்றுணா - கட்டுச்சோறு. தமியே-தனியே.

76. இழுது-நெய். தடி-தசை. எட்டைப்பட்டு-இளைத்துப்போய். கோட்டக்கு-உடம்பிற்கு. புறம் செய்தல்-காத்தல். புள்-கழுகு.

77. பொதித்துணை-பொதித்திரளின் அளவை. கயற்கண்ணாள்-மனைவி. அதனைக் காட்டாள்-அப்பொதித்திரளைக் காட்டாதவளாய். அதற்குப் பருவமன்று-அவ்விளாம்பழம் உண்ண நும் உடல் நிலை பருவமன்று. கட்டுரையால்-அம்மனைவியது பேச்சாலே. பொய்யே பொருள்-பொய்ப்பொருள்.

78. ஆர்ந்த-பொருந்திய. புகன்று நீட்டி-விரும்பிக் கொடுத்து. கடம்-காட்டை. நீந்தல்-கடத்தல்.

# VI. பெரிய புராணம்.

## காரைக்காலம்மையார் புராணம்,

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் சைவத்திரு முறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக அமையும் பெருமை வாய்ந் துள்ளது. இதனை இயற்றியருளியவர் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள். இவர் தொண்டை மண்டலத்துக் குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் குடியில் சேக்கிழார் மரபில் தோன்றி, சோழ நாட்டை அரசாண்ட அநபாயர் என்ற மன்னரிடம் அமைச்சராய் அமர்ந்திருந்தார். அக்காலத்தில் நாட்டில் சமய உணர்ச்சி தாழ்ந்திருந்ததை உணர்ந்து சிவனடியார்களின் வரலாறு களை விரித்து ஒரு பெருங்காப்பியமாகச் செய்து உலகுக்கு அருளினார். இந்நூலைக் கேட்ட மன்னர் பெரிதும் வியந்து ஆசிரியருக்குத் 'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் பட்டத்தைச் சூட்டி அவரை வழிபடுபவராயினர்.

சைவ சமயகுரவர்களுள் ஒருவரான ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகை என்னும் பதிகமே பெரிய புராணத் துக்கு முதனூலாகும்; திருத்தொண்டத் தொகையை விரித்து நம்பி யாண்டார் நம்பி என்ற பெரியார் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற ஒரு வழி நூலை இயற்றி யருளினர். அவ்விரண்டையும், மூவர் தேவாரங் களையும், பிற பெரியோர் அருளிச்செயல்களையும், நாட்டு வரலாறுகளையும் பிறவற்றையும் ஆதாரமாகக் கொண்டு சேக்கிழார் தம் அழகிய புராணத்தை யாவரும் ஒவ்வும் முறையால் யாத்தருளினார். இந்நூலுக்குத் தில்லை அம்பல வாணரே அடியெடுத்துக் கொடுத்தனர் என்று கூறுவர்.

பெரியர் புராணமே பெரிய புராணம் என்று வழங்குவதாயிற்று. இதனிற் காவியச் சுவைகள் பலவும் பொருந்தியிருத்தலொடு பக்திச்சுவையும் ததும்பிக்கொண்டிருக்கிறது. இந்நூலின் பயனால் சமய உணர்ச்சி நாட்டில் தலையெடுத்தது என்றும், அதன் வாயிலாக மக்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும் முன்னேறின என்றும் கூறுவர். தமிழில் அமைந்த ஆற்றல் காவியங்களுள் (Literature of Power) பெரிய புராணமும் ஒன்று.

ஆசிரியரின் காலத்தைப் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி என்று சிலரும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி யென்றும் சிலரும் கூறுவர்.

காரைக்காலம்மையார் புராணம் நூலின் ஐந்தாவது சருக்கமான திரு நின்ற சருக்கத்தில் நாலாவது புராணமாக அமைந்துள்ளது.

1. மானம்-தன் நிலையில் தாழாமையும், தாழவரின் உயிர் வாழர் மையும். துவன்றி-நெருங்கி. கூனல் வளை-வளைவாகிய சங்குகள்.

2. வங்கம்-மரக்கலம். திருமடந்தை-திருமகள்.

3. அணி-(சதங்கை முதலிய,) அணிகள். தணிவு இல்-குறைவு இல்லாத. மொழி-மழலைச் சொல்.

4. பயில் பருவச் சிறப்பு எல்லாம்-குழந்தைக்கு அவ்வப்பருவங்கள் தோறும் செய்யவேண்டிய (சோறு ஊட்டுதல், காது குத்துதல் முதலிய) சிறப்புக்கள். விடையவர்-சிவபெருமான்.

5. உறுப்பு நூலவர்-அவயவ இலக்கணம் தெரிந்த புலவர். இல் இக வாப் பருவம் வீட்டினின்றும்-வெளியே புறப்படாத பெதும்பைப் பருவம்.

6. கடற்கரையில் உள்ள பெரிய ஊர்களைப் பட்டினம் என்றும் உள் நாட்டிலுள்ள நகரங்களைப் பட்டணம் என்றும் வழங்குவது முறை என்பர்.

7. முந்தை மரபு-பழைமையாகிய நமது மரபு.

8. செலவிட-(வந்தவர்களுக்கு) விடை கொடுத்து அனுப்ப.

9. ஓலை-திருமண அழைப்பு.

10. நூல்-திருமண நூல். நகை-பற்கள்.

12. தனம்-சீதனப் பொருள் (ஸ்திரீ தனம்). தகைப்பு இல்-அடங்கு தல் இல்லாத.

13. பாங்கு-உரிமை. பண்பு-அறநெறி.

15. வந்தணைந்தார்-காணவந்தவர். வேண்டும் குறை-(தன்னிடம்) விரும்பிவந்த குறைகளை.

17. விளக்க-அலம்பும்படி. பரிகலம் வைத்து-பரிகலம் திருத்தி (பரிகலம்-உண்கலம்.)

18. வெறி-நறுமணம். ஆதரிப்பார்-உபசரித்தவராகி. (முற்றெச்சம்) அமுது-செய்வித்தார் (அடுத்த செய்யுள்.)

19. படைத்து-(உண்கலத்தில் இட்டு). அல்லல்-(பிறவித்)துன்பம்.

20. வாய்ப்பு உறு-இனிமை தங்கிய.

21. புரிந்து அயில-விரும்பி உண்ண. கடப்பாடு-விருந்தினரைப் போற்ற வேண்டிய முறைமை.

22. இருந்தது-மிகுதியாயிருந்த மற்றொரு பழம்.

23. ஆராமை-தெவிட்டாமை.

24. மெய்ம்மறந்து-பரவசப்பட்டு. உற்ற இடத்து-இடையூறு நேர்ந்த போது. உணர்தலும்-கடவுளை நினைத்தவுடன்.

25. முன்தரும் மாங்கனி-முன்னே தான் கொடுத்தனுப்பிய மாம் பழம்.

26. பேர் அருள் விளம்புந் திறமன்று-தனிப்பெருங்கருணை வடிவின ரான இறைவன் அடியார்க்கு இடையூறு நிகழ்ந்தபோது புதிதாக உதவத் தக்க அன்பு தம்மேல் வைத்திருப்பது பிறர்க்கு வெளியிட்டுச் சொல்லுந் தரத்தது அன்று. கை-ஒழுக்கம். விதிர்ப்பு-நடுக்கம்.

27. மை-நஞ்சு, புகுந்தபடி-நடந்த வண்ணம்.

30. அணங்கு-தெய்வப் பெண்.

31. பரவை-கடல் (பரந்திருப்பது-அகன்றிருப்பது.)

32. கம்மியர்-மாலுமி முதலியோர் (கம்-தொழில்.) புலங்கள்-தான் போக வேண்டும் என்று நினைத்த ஊர்கள். நாய்கன்-தலைமையான வணிகன் (பரமதத்தன்).

33. வங்கம்-கப்பல். வளங்கள் முற்றி-வளமுள்ள பண்டங்களைப் பெற்று. கன்னி நாடு-தடாதகைப் பிராட்டியார் கன்னிப் பருவத்தில் அர சாண்ட நாடு-பாண்டிய நாடு.

35. அற்றம்-ரகசியம்.

36. முருகு-நறுமணம். இருநிதிக் கிழவன்-குபேரன்.

37. மகவை நாமம் இட்டான்-தன் இளைய மனைவியின் குழந்தைக்குப் புனிதவதியார் என்னும் பெயரையே வைத்தான்.

38. கன்னி-அழிவில்லாத.

40. காமருகழனி வீழ்த்து-அழகிய இருதிரையை விடுத்து.

48. எற்பு-எலும்பு.

49. கணங்கள்-பூத கணங்கள். குணலை இட்டன-வீர ஆவேசத்தி னால் கொக்கரித்தன.

50. ஞானம்-சிவஞானம். நற்கணத்தில் ஒன்றானேன் நான். அற் புதத் திரு அந்தாதியில் 88-ம் செய்யுளில் நான்காம் அடி.

51. இரட்டை மாலை அந்தாதி-20 செய்யுள் கொண்ட திரு இரட்டை மாலை கலித்துறையும் வெண்பாவுமாக அமைந்து அந்தாதித் தொடையாக உள்ளது.

53. தொடை அவிழ் இதழி-கொத்தாக விரிந்த கொன்றை.

58. இறவாத இன்ப அன்பு-அழியாத இன்பத்தை விளைக்கும் அன்பு.

61. அண்டமுற நிமிர்ந்தாடும் கோலம்; வானை அளாவும்படி திருவடியைத் தூக்கி ஊர்த்த தாண்டவம் செய்தருளும் கோலம்.

62. எட்டி-எட்டி மரம். இலவம்-இலவமரம். ஈகை-இண்டங்கொடி.

# VII. கம்பராமாயணம்

உலகப் பெருங் காவியங்களுள் ஒருங்குவைத்தெண்ணற் கேற்ற பெருமை வாய்ந்த கம்பராமாயணம் கம்பநாட்டாழ்வாரால் இயற்றப் பெற்றது. கம்பர் சோழநாட்டிலே ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன்னே சோழநாட்டுத் திருவழுந்தூரிலே உவச்சர் குலத்திலே அவதரித்தார். கம்பர் என்பது ஏகம்பர் என்றும் பெயரின் திரிபு ஆகும். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளல் என்பவர். வடமொழியில் ஆதி காவியமென வழங்கும் வால்மீகிராமாயணத்தையே கம்பர் தம் ஆசைபற்றி அறையலுற்றாரெனினும் அதனை ஒரு மொழி பெயர்ப்பு நூலாக ஆக்காமல் அவர் ஒரு சிறந்த முதல்நூல் போன்றே அமைத்துள்ளார். கம்பர் இராமாயணத்தில் ஆறு காண்டங்களே பாடியுள்ளனர்.

கம்பராமாயணம் விருத்தப்பாக்களினாலேயே அமைந்துள்ளது. விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்று பெரியோர் கூறியபடி கம்பர் விருத்தம் பாடுவதில் இணையற்றவராய் விளங்கினார். அவருடைய சொல்லாட்சியும், சுவைகளை உள்ளபடி உரைக்கும் ஆற்றலும், நிகழ்ச்சிகளை நேரிற் காட்டுவதுபோல் தீட்டும் வன்மையும், பாட்டின் இசையும், உவமைகளின் நேர்மையும், பிற அணிகளின் அமைதியும், இயற்கை வருணனைகளும், மானிடர் இயல்புகளை இயற்கையை யொட்டி அமைக்கும் சிறப்பும் கம்பருக்கு இலக்கிய உலகில் அழியாச் சிறப்பை அமைத்து விட்டன.

மந்திரப்படலம் இராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் இரண்டாம் படலமாக அமைந்துள்ளது. அநுமனால் இழிவுறுத்தப்பட்ட இராவணன் தன் அமைச்சர், சுற்றத்தார் முதலியவரோடு மந்திராலோசனை செய்யும் கதையைத் தன்பால் கொண்டது.

1. பூ-தாமரைப்பூ. பொன்னகர்-இலங்கையை. தெய்வத் தச்சன்-விசுவகர்மன்.

2. நாகம்-தேவலோகம்.

3. நிரை-வரிசை. தூணம்-தூண்; அம்-சாரியை. அரிகள்-சிங்கங்கள்.

4. தரம்-தகுதி.

5. முனைவர்-முனிவர். எனைவரும்-யாவரும். ஏய-ஏவிய.

6. ஆண் தொழில்-ஆண்மைத் தொழில்.

7. சூழ்ச்சி-ஆலோசனை.

8. சூறை-கொள்ளை. கிளை-சுற்றத்தார். பரிபவம்-அவமானம்.

9. அகிலின் ஆவி-அகிற்புகை. போய்-நீங்கப்பெற்று. சுறுநாறு கின்றது-தீய்ந்துபோன நாற்றத்தை வீசுகின்றது. இருந்தும்-இருப்பேம்.

10. முற்றுவது-முடிவது.

11. சேனை காவலன்-பிரகஸ்தன். புணர்ப்பு-ஆலோசனை.

12. தஞ்சு-பற்றுக் கொடு.

13. உங்கை-உன் தங்கையாகிய சூர்ப்பணகையின்.

14. தண்டம்-தண்டனை., தக்கரை-திருடரை. விண்டவர்-பகைவரது.

15. முற்றி-முடித்து.

16. விலங்கினர் - தடுத்தவர். துய்த்தியேல் - அநுபவிப்பாயாயின். குரங்கிற்றங்குமோ-நம்மை வெல்வதென்பது குரங்கோடு நின்று விடுமோ. உலங்கு-ஒருவகைக் கொசு.

17. குரங்கினை-அனுமானை. அவண்போய்.

18. கல் தட தோளினன். அன்னது-அதுவே.

19. தா அரு-கேடு இல்லாத.

20. தன்னென்றது கூற்றத்தை. தோற்று-தோல்வியுற்று.

21. நின் புயத்தை எள்ளுதி போலும்; ஒப்பில் யோலி.

22. கண்டவர்களில் யாவரென்றது இலரென்னும் பொருளது.

23. இடுக்கு-இடையில்.

24. சிரத்தவன்-தலைவன். வச்சிரத் தெயிற்றவன்-வஜ்ரதந்தன்.

25. அயிர்ப்பு-சந்தேகம்.

26. தவ்வின - தவறின. ஈகலாது - ஈகலாதது; கொடாதது: தொகுத்தல்.

27. இசைத்தியோ-சொல்லுகின்றாயோ.

28. முரண்-வலி. அக்கட-அங்கேதான்; இது திசைச் சொல்; தெலுங்கு.

30. கண்ணியம்-கௌரவம். உட்குமேல்=உட்குதுமேல்-அஞ்சுவேமாயின்; தொகுத்தல் விகாரம்.

31, நீந்துதல் அரிது கொல்?

32. யாவர்-ஒருவரும் இலரென்றபடி. உள்ளுளார் சிலரென்க.

33. உறுதி-பயன். விளைவு-விளையும் முடிவு. செல்வதும் கொல்வதும் கருமம்.

34. கைகவித்து-கைம்மறித்து அடக்கி. குரங்குக்கே உரியனவென் ஒரு சொல் வருவிக்க.

35. முந்தினர்-முன்னே யுத்தத்திற்குச் சென்றவர். நந்தினர்-தோல்வியுற்ருர். அரக்கர் வெம்மையும் நடந்ததோ, வெந்ததோ.

37. நாம் அற=நாமம் அற-பெயரும் கெட; உம்மை விகாரத்தால் தொக்கது.

38. நாயகனை முன்னு-இராவணனை மூற்படுத்தி. எம்பியெனகிற்கின்-என் தம்பியென எண்ணின்.

39. அயன் முதற் குலம் இதற்கு-பிரமனை முதல்வனுக உடைய இக்குலத்திற்கு. ஆயிரம் மறை-ஆயிரம் சாகைகளை உடைய சாம வேதம். எயின உறத்தகைய-பொருந்திவருவதற்குரியனவாகிய தீங்குகள்.

40. ஓவியம்-சித்திரம். உளைந்தாய்-வருந்தினுய். உறும்பழிகளுள். இதின்-இதனைக்காட்டிலும்.

41. மறுத்தல்-அயலான் மனைவி மறுத்தல்.

42. என்று சிறைவைத்தாயோ அன்றே ஒழிவவாயின. புலமைத்தோ-அறிவைக் சார்ந்ததோ.

43. நன்று; நன்றன்றென்னும் குறிப்புப்பொருளை உடையது.

45. அதுவும் நிரம்பிடுவது அன்று-இராமன் கரனேடு செய்தபோர் அதனேடு நிறைவுறுவது அன்று. நின்றது-இனியும் எஞ்சி நின்றது. நம்பால் உரம்படுவதே-நம்மிடத்தில் வரும் வன்மையுடையதே.

46. நெறி சென்று-போருக்குரிய முறையான வழியிற் சென்று.

48. கருணை-கும்ப கருண; பீமசேனனைப் பீமனென்பதுபோல. என்க என-என்று சொல்வாயாக என்று; என்றது அயல்நின்ற படைத்தலைவனை நோக்கி.

49. மகன்-இந்திரசித்து.

50. ஆய-ஆகிய. சுமந்து-இதுகாறும் பயன்படுத்தும் வாய்ப்பின்றிக் கைக்குப் பாரமாகச் சுமந்து.

51. திறம்-சமயம்.

52. குறைத்தலை நடம்-தலைபோன உடற்குறையின் நடனம். அலந்து அலைபட-வாடி வருந்த. படர்-துன்பத்தை.

53. கல்-மலை. குரங்கு என் வாளிக்கு வெருவி. இரிவ-கெட்டு ஓடுதலை.

55. நிமிர்வானும்-எல்லாப் பூதங்களையும் உள்ளடக்கி உயர்ந்த ஆகாயமும்.

56. ஈமோ : மோ, முன்னிலையிசை.

57. புரட்சி-கொள்கை. காலமேல்-மேல் வருங்காலத்தில். கற்பு-கல்வியறிவு.

58. மந்திரத்து-ஆலோசனை செய்யும் சபையில்.

60. அது-அம்மனம் உண்டாகியது. தவம் இயற்றும் நீதியாலும் அவர் தரும் வரத்தின் வன்மையாலும்.

61. தீமையோரில் தேவரை வென்றவர் யாவர் ?

62. எனையர்-எவ்வளவு பேர். அனையவர் திறத்துளார் எனையர். யாவர்-மற்றவர்களில் யார். ஆற்றினர்-வினையை வென்று வீடு அடையும் தவத்தைச் செய்தவர்.

63. பிள்ளைமை விளம்பினை - பிள்ளைத் தன்மையை வெளிப் படுத்தினய்.

65. சொற்றுறு சூழ்ச்சி-முன்னோர்கள் சொல்லிய ஆலோசனைகள்.

66. கொற்றம்-அரசுரிமை. தம்மனை-தாய்.

67. துன்பங்கள் யாவும் பெண்ணாலும் மண்ணாலும் உண்டானவை.

68. சாய்வது-சாயும் செயல். வாய்மொழி யென்றது அரம்பை இட்ட சாபத்தை ; உத்தர காண்டம், திக்கு விசயப் படலம், 166.

69. அறிவன்-பிரமதேவர். மனிதர்பால்-மனிதர்களிடத்தில் ; மனிதர்களை வெல்லும் வரத்தைப்பெற வில்லை.

70. ஆயிரந்தோளவர்க்கு-கார்த்த வீரியார்ச்சுனனுக்கு. தோற்றலைமேயினை-தோல்வியை அடைந்தாய்.

71. நந்தி சாபம்-குரங்கால் ஊருக்கு அழிவுண்டாகுமென்றது ; 97-ம் செய்யுளைப் பார்க்க. கூலம்-வால்.

72. கற்பினள்-வேதவதி. வேதவதியே சீதையாக வந்தாள்.

73. நேமி-ஆஞ்ஞா சக்கரம்.

74. உருவினன்-கருத்ஸன். அருளினன் - பிருது சக்கரவர்த்தி. கடல் படைத்தவர்-சகரர். கங்கை தந்தவன்-பகீரதன். மன்னனென்றது தசரதனை.

75. சினவினர்-கோபித்தவர். மனைவிபால்-கைகேயிக்கு. அவை-இரண்டு வரங்களை.

77. முனித்தலைவன்-விசுவாமித்திரன். அமைக்கலுற்றான். கொடுத்தனவாகிய படைக்கலம்.

78. சலுழன்-கருடன். செய்தான்-திருமால். திருமாலது அம்பையும் புரமெரித்த அம்பையும் அகத்தியர் அளித்தார்.

79. அம்பைப் பாம்பாக உருவகம் செய்வார். அவீரர். ஆவம்-அம்பறாத்தூணி. பாவகாரியர்-பாவஞ்செய்வோர். உயிர்ப்பதம்-உயிராகிய உணவு. பகழி-அம்பு.

80. நாரும் மூரியும்-நாணியும் வன்மையும். தாணு-தூண்.

81. உரம் ஒருங்கியது-வலியடங்கியது. மார்பு உரம் ஒருங்கியது. மரம்-மராமரங்கள். கராதியர்-கரன் முதலியோர். பரம்-பாரம்.

82. துணை-இலாதார்-ஒப்பில்லாதவர். எண்ணினராகி.

83. முன்பு அமரர் துஞ்சுகின்றவர்கள்; அவர்கள் நெஞ்சு நின்று அயரும். சனகியாம் பேரையுடைய நஞ்சைத்தின்றவர்களாகிய நிருதர்தாம் நரகம் நண்ணுவார்; இப்போது அஞ்சுகின்றிலர்கள்.

84. புகல்-புகலிடத்தை. நகல் மதிக்கில-நகுதலை மதிக்கிலவாகி. பகல்-சூரியன். பருவநாள்-பௌர்ணமி. தபோதனருளார் வதனம் முன்பு பகல் மதிக்கு உவமையாயின; இப்போது பருவநாளின் அகல் மதிக்கு உவமையாயின.

85. சிந்து-கடல். உழறல்-உழலுதல். இறைவி-சீதை.

86. துர்நிமித்தங்கள்-தீய சகுனங்கள். அவுணர்-அசுரர். விட்டனவும் விடாதனவுமான குதிரை முதலியன.

87. நிருதர் பேயினும் புனல் வறந்து உலறினர்; பேய்வாய் காய்ந்திருத்தல் இயல்பு. பேயும் நரிகளும் திரிதரும்.

88. நாகரை-தேவரை, மானுயினன்-மாரீசன். மான் இடவன்-மானை இடக்கையிலே உடைய உருத்திரன். ஆழிமாவலவன்-திருமால். மா-அசைநிலை.

89. அணுகி நின்றார் வானுளோர். கன்மம் அன்று-செய்யத்தக்க காரியம் அன்று. இது-பகை கொள்ளாமை.

90. அணங்கை-சீதையை. விசையம்=விசயம்-வெற்றி.

91. கிடைப்ப-கிட்ட;

92. பிச்சர்-பித்தர். கொச்சை-இழிவு.

93 ஆணையை-திக்கயங்களை.

94. வறியன-பொருளற்ற சொற்களை.

95. பலமுறை தோற்றும் வெல்லும் ஆற்றலைப் பெறுவரென்றது; உலக இயல்பைக் கூறியபடி; மாற்றலர்-பகைவர்.

96. செருக்கு-கர்வம். பெற்றம்-காளை. அதனை யுடையவன் உருத்திரன். திகிரியோன்-திருமால்.

97. இயக்கர்களுள்.

99. நேமி-திருமால்.

100. இழைத்திட-செய்ய. இல்-மனைவியை.

101. தன்னென்றது வீடணனை. இழித்து-இழிவுபடுத்தி. போதும்-செல்வோம். தாரவன்-வீடணன்.

102. முன்னிய-முற்பட்ட.

103. துன்மதி-கெட்ட புத்தியையுடையாய். முச்சு-மூச்சு. குறுக்கல் விகாரம்.

104. இமையாத்தந்தி-ஐராவதம். தேவன்-திருமால்.

105. வலி-என் வலிக்கு.

106. ஒருவன்-திருமால்.

107. எகுழி-போகுமிடம். கைத்த-செலுத்திய. தடித்து-மின்னல்.

109. வீடணன்: எழுவாய். நின்தரம் அலாப்பெரியோர்-உன் தகுதிக்கு மேற்பட்டவர்.

# VIII. காசிக்கலம்பகம்.

கலம்பகம் என்பது பலவகை மலர்களும் கலந்தமைந்த கலம்பக மாலைக்குப் பெயராகும்; அதைப்போல, பலவகைப் பொருள்களும் அகப்புறத் துறைகளுற் பலவும் பலவகை யாப்புக்களும் விரவிக் கலந்தமைந்த பிரபந்தமும் கலம்பகம் என்ற பெயர் பெறுவதாயிற்று. இச்சொற்கு வேறு பொருள்கள் கூறுவாருமுண்டு.

காசிக்கலம்பகம் என்பது ஸ்ரீ காசிப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் பாடப்பெற்றது. இஃது அந்தாதித்தொடையாகப் பாடப்பெற்ற 101 பாடல்களை உடையது.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ காசிமடத்தை நிறுவிய பெரியார். இவர் முருகப்பிரானருளால் கவிபாடும் வன்மை பெற்றுப் பல தோத்திர நூல்களையும், பிரபந்தங்களையும், நீதிநெறி விளக்கம் என்னும் நீதி நூலையும் இயற்றினர். இவர் தருமபுரத்தில் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் அவர்களிடம் ஞானோபதேசம் பெற்றுத் துறவு பூண்டார். இவர் காசியிலேயே சில காலம் தங்கி அங்கே ஒரு மடத்தை நிறுவி, அத்தலத்துக்குரிய இந்நூலையும் பாடியருளினர். இவருக்குக் குமரகுருபர முனிவரென்றும் ஒரு பெயர் உண்டு.

1. இப்பாடல் தோழி கூற்று:

'இதழித்தார்' என்றுள் நெட்டுயிர்த்தாள்; இதழித்தார்-கொன்றை மாலை. கொன்றை மாலையை வாங்கித் தரவேண்டு மென்று நினைத்தவள், 'இதழித்தாரெ'ன்ற அளவிலே மேலே கூற இயலாமல் சோர்ந்து நெட்டுயிர்த்தாள் என்றபடி. இது கண்டால்-இவ்வாறு தான் மூர்ச்சித்துக் கிடத்தலைக் கண்டால். எழுத்து-பிரணவத்தை.

இத்தோகை தாரென்றுள்; நெட்டுயிர்த்தாள்; வீழ்ந்தாள்; கிடக்கின்றுள்; வருவரெனத் துணிந்தனளோ? அன்றி வேறு யாது கருதினளோ அறியேன் என்றபடி.

2. பெற்றம் - இடபம். தோல் - புலித்தோல். செற்று-அழித்து. பதம்-சாரூப பதவி. சிவபெருமான் சாரூபம் பெற்றவர் செயலாகக் கூறிய படி. அப்பதவியை யாம் சிந்திப்பதில்லை யென்பது பழிப்பதுபோலப் புகழ்த லென்னும் அணியின்பாற்படும்.

3. அற-மிக. இந்திரத் திருவையும் அரசாட்சியையும் விடுத்து விட்டு என்று கூட்டுக.

4. கடை நாளில்-யுகாந்த காலத்தில். திரை-கடல்; ஆகு பெயர். முழு நீத்தம்-பிரளய வெள்ளம். ஆனந்தவனம்-காசி. ஆனந்த வனத்தேன்-

அகிலேசர். அரும்பிலை-வீழ்த்திலை. அரும்புதலை இமை குவிதலாகக் கொண்டு, கண்களை மூடித் தியானித்தாயில்லை எனலுமாம். பாவம்-தீவினை.

5. மறம்-மறச்சாதி மகளொருத்தியை ஒரு மன்னன் மணம் பேசி விடுப்ப, அச்செய்தியை அறிவிக்கும் திருமுகத்தைக் கொணர்ந்த தூதனை நோக்கி அச்சாதியினர் தலைவன் சினந்து கூறுதல்.

வையமுழுதும் ஒருங்கு ஈன்றவர்; உமை. கண் தொட்டு-கண்களைத் தோண்டி. முட்டு-எலும்பின் பொருத்துவாய்கள். அரிவோம்-அறுப்போம்.

6. அகிலேசர்பால் திருவருள் பெற்றுப் பெருஞ்செல்வம் எய்தி வரும் பாணன் ஒருவன் அவரிடம் செல்லும்படி மற்றொரு பாணனுக்குக் கூறியது.

மழலை-இன்னொலி. உறைப்ப-துளிக்க. உகிர் வடிம்பின்-நகத்தின் விளிம்பினால். வருடி-தடவி. விளி-பாட்டு. சீறியாழ்-சிறியயாழ். இச்செய்யுள் சிறுபாணாற்றுப்படை போலும்.

6-21. தன் பண்டை நிலையை விரித்துரைக்கின்றான்.

இறைமகன்-அரசன். உடன்-ஒருங்கு. நின் நிலைமையன்-நின்னை ஒத்த வறியனாகி. நலம்பாடு-இன்பம்; இலம்பாடு-வறுமை. சிதலை-கறையான். சிலம்பி-சிலந்தி. குரம்பை-குடிசை. மசகு-கொசுகு. உலங்கு-கொசுகுபோல்வதொரு சாதி. வாய்ப்படை-வாயாகிய படை. குடவன்-குடவுண்ணி; இது கடித்து இரத்தத்தை உண்ணுவதாதலின் 'வாய்ப் படைக் குடவன்' என்றார். கறித்து-கடித்து. உணங்கி-வாடி. தலைமடுத்து-சேர்ந்து. குடங்கை-உள்ளங்கை. கொடிறு-கன்னம். களைகண்-ஆதாரமானவர். அலமரும்-மனம் சுழலும்.

25. கற்பகக்கொடி-காமவல்லி; எழுவாய்.

27. நான்றன-தொங்கின.

34. இறும்பூது-வியப்பு.

39. ஒரீஇ-நீங்கி.

40. சுரபி-காமதேனு. தரு-கற்பகமர[illegible]

43. இருநிதிக்கிழவன்-குபேரன். எக்க[illegible]ப்ப-வருந்த.

44. திரு-செல்வம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112026
MADRAS

22A
8-65